# ஆய்த எழுத்து


பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**AYIDHA EZHUTHU**

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330

டிசம்பர் – 2019





visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330

மலர் : 7 | டிசம்பர்-2019 | இதழ் : 12



**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gamil.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, C.Mutlur, Chidambaram.*

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இயக்குனர், இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனைக் குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.*

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**





**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்

1. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் சூழலியல் அறம்

***சி.சிவசாந்தி** - 1

2. குறிஞ்சிப்பாட்டில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் பி.உஷா** - 6

3. தொல்காப்பியநோக்கில் குறுந்தொகையில் வனப்புகள்

***பு.இலக்கியதென்றல்** - 10

4. பழந்தமிழரின் அழகுக் கலை

***மரு.முனை.பெ.பாரதஜோதி** - 14

5. அழகியல் நோக்கில் கலித்தொகைக் காட்சிகள்

***மு.சௌந்தரியா** - 17

6. நாலடியார் கூறும் சமூகப் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள்

***க.புருஷோத்தமன்** - 20

7. தமிழரின் வாழ்வியல் பண்பாடு

***முனைவர் இரா.திலகம்** - 26

8. புறநானூற்று புலவர்களின் பண்பாட்டுக் கூறுகள்

***கு.சீனிவாசன்** - 29

9. உவமையால் உயர்ந்திருக்கும் கபிலர்

***முனைவர் மு.ராஜகுமார்** - 34

10. எதார்த்தம் + எழுத்து = இராஜம் கிருஷ்ணன்

***முனைவர் அ.மாணிக்கம்** - 37

11. சோழர்களின் கலைவளர்ச்சி

***பெ.பாக்கியலெட்சுமி** - 40

12. நவீனக் கவிதைகளில் காதல் வெளிப்பாடு –

***அ.கணேசன்** - 44

13. முல்லை நில வேளாண்மை

***லோ.ரூபா** - 47

14. நாட்டுப்புறப்பாடல் : "கொங்கு நாட்டு ஊஞ்சவனப் பாடல்கள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்"

***முனைவர் ர.தமிழ்ச்செல்வி** - **51**

15. தமிழ் நாடக மரபும், வளர்நிலைகளும்

***க.கலைப்பொன்னி** - **55**

# தொல்காப்பிய பொருளதிகாரத்தில் சூழலியல் அறம்

***சி.சிவசாந்தி,** ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

**முன்னுரை**

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று இயல்களைக் கொண்டு விளங்குகின்றது. இயல்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு ஒரு செய்யுளை இயற்ற வேண்டும் என்பதையும், அனைவரையும் கவர்ந்திழுக்கக் கூடிய சுவை பொருந்திய அளவில் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் கோட்பாடுகளாக வகுத்துரைக்கின்றன. அக்கோட்பாடுகள் செய்யுளின் அழகியல் நிலையைப் புலப்படுத்துகின்றன. மேலும் தொல்காப்பிய பொருள் அதிகாரம் பண்டைய மக்களின் வாழ்வியல் முறையினையும் அறிந்துகொள்ள உதவுகின்றது. குறிப்பாக ஐந்நிலமக்களின் சூழலியல் அறம் எவ்வாறு இவ்விலக்கண நூலில் இருந்துள்ளது என்பதை ஆராயும் பொருட்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

**1.சூழலியல்**

சூழலியல் என்பது உயிரினங்களுக்கும் அவற்றை சுற்றியுள்ள சுற்றுப்புறங்களுக்கும் இடையிலான உறவினை ஆராய்தலைக் குறிக்கிறது.

“உட்பெரி(1954) உயிரினங்களுக்கு அவற்றின் சுற்றுச்சூழல்களுடன் உள்ள உறவை ஆராய்வது என்றார். மேலும் அமெரிக்காவின் புகழ்பெற்ற சூழலியல் அறிஞர் யூஜின் பி ஓடும், இயற்கையின் அமைப்பையும், செயல்பாட்டையும் ஆராய்வது (1959, 1963) என்றார்.”[1]

இச்சூழலியலானது தற்போது திறனாய்வாக உருபெற்றுள்ளது, மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவினை ஆராயும் பொருட்டு இத்திறனாய்வு விளங்குகின்றது.

**2.சூழலியல் அறம்**

நாம் வாழக்கூடிய இந்த பூமியை பாதுகாப்புடன் பராமரித்தல் மனிதர்களின் கடமையாகும். அதுவே அறமும் ஆகும். ஆனால் இன்று அந்த நிலையைக் கடந்து சூழலியல் சீர்க்கேட்டினை எடுத்துக்கூறி, அது தொடர்பான விழிப்புணர்வினை மக்களிடம் ஏற்படுத்தக்கூடிய விளிப்பு நிலையில் தள்ளப்பட்டுள்ளோம். பூமியானது மற்ற கோள்களைக் காட்டிலும் மிகவும் அற்புதமானகோள். இவை சூரியனிடமிருந்து நெருங்கியும் அல்லாமல் விலகியும் அல்லாமல் நடுவில் உள்ளதால் மிதமான வெப்பமும், மிதமான குளிரும் அமையப்பெற்ற இக்கோளில் மட்டுமே உயிரினங்கள் தோன்றக்கூடிய தகவமைப்பினை பெற்றுள்ளது. எனவே அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்த பூமியைச் சுற்றுச்சூழல் சீர்கேடு அடையாவண்ணம் பாதுகாத்தல் மனிதகுலத்தின் கடமையாக உள்ளது.

“இயற்கை மனிதனோடு சமன்பாட்டில் எப்போதும் இருந்து வருகிறது. எல்லா உயிர்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து பின்னிபல்வகை உயிர்களின் தொடர்ந்து இயக்கத்தைத் தக்க வைத்திருக்கிறது. மனிதனின் சமூகப் பொருளாதாரம் இயற்கையை நிராகரித்தற் தன்மையாலும், சுயநலத்தாலும் சீரழிந்து நிற்கிறது. பூமியில் உள்ள பிற உயிரினங்கள் மீது அதிகாரம் செலுத்துவது என்பது இயற்கையை அழிக்கிறது. இயற்கையின் சீரழிவுகளுக்கு ஒட்டுமொத்த மனித சமூகமும் பொறுப்பாகும். மனிதன் இயற்கையோடு சேர்ந்து சம உறவு நீடிப்பதற்கான காரியங்களில் ஈடுபட சூழலியல் விரும்புகிறது. இயற்கை சுமூகமாக இருந்தாலும், சுமூகமாக இருக்க விரும்பாவிட்டாலும் அதன் போக்கிலேயே தீர்வுகாண்பது சூழலியலை சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாகும்.”[2]

எனவே மேற்கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் எல்லா உயிர்களும் ஒன்றோடு ஒன்று பின்னிபிணைந்துள்ளது. மனித இனமானது சுயநலத்தோடு செயல்படுகிறது, இயற்கையை சீரழிக்கின்றது. மேலும் சூழலியலை அதன் போக்கிலேயே தீர்வு காணுதல் போன்ற காரணங்களினால் மனிதன் அறவழியில் செல்லாமல் எதிர்திசையில் செல்வதால் ஒரு உயிரினத்தால் மற்ற உயிர்கள் பாதிப்படைகின்றன என்பதை மனதில் நிறுத்தி, வரும் சந்ததியினருக்கு வாழ்வதற்கு தகுந்த சூழலை ஏற்படுத்தி தருதலே சிறந்த அறமாகும் என்பதனை தொல்காப்பியத்தில் சூழலியலை பண்டைய மக்கள் அறநிலையோடு கையாண்டுள்ளனரா என்பதை கீழ்வரும் தலைப்பின் கீழ் ஆராயப்பெறுகிறது.

**3.தொல்காப்பியத்தில் சூழலியல் அறம்**

தொல்காப்பிய பொருளதிகாரம் அகம், புறம் என்ற இரு பகுப்புகளாக அமைந்துள்ளன. அகச்செய்திகளை கூறும் போது அவற்றிற்கேற்றச் சுற்றுச்சூழலையும், அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப்பகுப்புமுறையில் அந்தந்த நிலமக்கள் அவரவர்களின் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு வாழ்ந்த நிலையை எடுத்துக்கூறும் கருவூலமாக உள்ளது. இவ்வியற்கை சூழலையே முதல், கரு என கூறியுள்ளார் தொல்காப்பியர். இம்முதலும் கருவும் அந்தந்த நிலச்சூழலுக்கு ஏற்றவாறு மனித உணர்ச்சிகளை மாற்றியமைக்கும் நிலையினை உடையது. அதனை உரிப்பொருள் என சுட்டியுள்ளார்.

எனவே முதலும் கருவும் செய்யுளை அமைப்பதற்கு பின்னணியாகவும் உரி மனித உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

**"உரிப்பொருளே அகமாம், முதலும் கருவும்**
**அகமாகிய உரிப் பொருளின் சூழ்நிலைகள்"**[3] எனக் கூறியுள்ளனர்.

**"பண்டைத் தமிழ்க்கவிஞர்கள் நிலப்பரப்பு**
**அதிலுள்ள இயற்கைக் காட்சி, பருவகாலங்கள்**
**ஆகியவை மனிதனுடைய வாழ்க்கையை மாற்றி**
**அமைக்கின்றன என்பதை உன்னிப்பாக**
**நோக்கி உணர்ந்திருக்கின்றனர்"**[4]

என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனடிப்படையில் சூழ்நிலையானது மனித வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது என்பதை உணரமுடிகிறது.

**(i) குறிஞ்சி நிலமும் அவற்றிற்கேற்றச் சுற்றுச்சூழலும்**

குறிஞ்சி நிலத்தை வேட்டைச் சமூகம் என்றும் குறிப்பிடுவர். இவை மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். இங்கு வேளாண்மை இல்லாத காரணத்தினால் மக்கள் காய், கனி போன்ற இயற்கை பொருட்களையும், மூங்கிலரிசி, தேன், கிழங்கு போன்றவற்றையும் உண்டு வாழ்ந்துள்ளனர். மலையின் சூழ்நிலைக்கு உகந்த வேளாண் உற்பத்தியை அம்மக்கள் மேற்கொண்டுள்ளமையை அறியமுடிகிறது.

"நானில மக்களும் அந்தந்த நிலத்தின் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற விளைபொருட்களை உற்பத்தி செய்து கொண்டனர்."[5]

என்பதனை ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டி உள்ளனர். விலங்கினம் புலி, யானை, கரடி, பன்றி போன்ற மலைச் சூழலில் வாழக்கூடிய விலங்கினங்களையும், தாவர இனம் அகில், ஆரம், தேக்கு, வேங்கை, மூங்கில் போன்ற மலைப்பகுதிகளில் வளரக்கூடிய தாவர இனங்களையும், பறவை கிளி, மயில் ஆகிய பறவை இனங்களையும் கொண்ட சுற்றுச்சூழலோடு மலைவாழ் மக்கள் வாழ்ந்தனர், மேலும் தேன் அழித்தல் மலைச்சாரலில் விளையக்கூடிய தினைகளைக் காத்தல், கிழங்குகளை அகழ்தல், மலையில் உள்ள விலங்கினங்களை வேட்டையாடுதல் போன்ற தொழில்களை செய்தனர், மலையில் பூக்கக்கூடிய குறிஞ்சி பூவினை சூடியும், பொழுது போக்கிற்காக குறிஞ்சிப்பண், குறிஞ்சியாழ் போன்றவற்றை இசைத்தும் வாழ்ந்துள்ளனர்.

இதனையே தொல்காப்பியர் கருப்பொருள் என்று சுட்டியுள்ளார்.

"கருப்பொருள்களே மக்களின் வாழ்வியல் பாங்கை வெளிப்படுத்துவனவாக உள்ளன."[6]

என்று ஆய்வாளர்கள் விளக்கம் அளிப்பதன்வழி கருப்பொருள்தான் மாந்தரின் சுற்றுச்சூழலை வெளிப்படுத்துக்கிறது என்பதை அறியமுடிகிறது.

**(ii) முல்லை நிலமும் அவற்றிற்கேற்றச் சுற்றுச்சூழலும்:**

காடும் காடு சார்ந்த இடம் முல்லை நிலம் ஆகும். ஆய்வாளர்கள் முல்லை நிலத்தை ஆனிரைச் சமூகம் என்று குறிப்பிடுவர், முல்லை நிலத்தில் வரகும், சாமையும் விளைவித்து உண்டுள்ளனர். விலங்கினம் மான், முயல், போன்றவையும் தாவர இனம் காயா, பிடவம், குருந்தம் ஆகிய தாவரத்தையும், காட்டுக் கோழி, சிவில் ஆகிய பறவைகளையும், தொழிலாக ஆனிரைகளை மேய்த்தல், ஏறு தழுவுதல், வரகு, சாமை போன்ற தானிய வகைகளை விதைத்தல் இவர்களின் முக்கியத் தொழிலாக விளங்கியது. முல்லை, தோன்றி, பிடவம் ஆகிய பூக்களைச் சூடியும், முல்லைப்பண், முல்லையாழ் இசைத்தும் வாழ்ந்தனர். இவை முல்லை நிலத்திற்கேற்ற தாவரங்களும், விலங்குகளும், தொழில்களும் அமைந்துள்ளமையை அறியமுடிகிறது.

**(iii) மருத நிலமும் அவற்றிற்கேற்றச் சுற்றுச்சூழலும்:-**

வயலும் வயல்சார்ந்த இடம் மருதநிலமாகும், இதனை உடைமைச் சமூகம் என்றும் குறிப்பிடுவர். அனைவருக்கும் பொதுப்படையாக இருந்து நிலமானது தனிமனிதனுக்கு உடைமையானதால் அவ்வாறு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எருமை, நீர்நாய் ஆகிய விலங்கினத்தையும், வஞ்சி, காஞ்சி, மருதம் ஆகிய தாவர இனத்தையும், செந்செல், வெண்ணெல், கரும்பு போன்றவற்றை வேளாண்மை செய்து விற்றலை தொழிலாகக் கொண்டிருந்தனர். தாமரை, கழுநீர் ஆகிய பூக்களைச் சூடியும், மருதப்பண், மருதயாழ் ஆகியவற்றை இசைத்தும் இம்மக்கள் வாழ்ந்தனர். மருத நிலத்தின் உரிப்பொருள் ஊடல், இவ்வூடலானது சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு பெண்களின் மனதில் ஏற்படக்கூடிய உணர்ச்சி நிலையாகும். மருத நிலமானது, உற்பத்தி பெருக்கம், பண்டமாற்று முறை போன்றவற்றின் அடிப்படையில் நாகரிக நிலையை அடைந்துவிட்ட சூழலை வெளிப்படுகிறது. அவ்வாறு இருக்கும் நிலையில் ஆடவர்கள் மற்ற பெண்டிரோடு உறவுவைத்திருத்தலை கண்டிக்கும் பொருட்டு இவ்வூடல் உரிப்பொருள் அமைந்துள்ளது. எனவே இடச்சூழலுக்கு ஏற்றவாறு உணர்ச்சிநிலைகள் அமைந்திருக்கும் என்பதை அறியமுடிகிறது. இவை போன்றே மற்ற நிலங்களின் சூழலுக்கு ஏற்றவாறு உணர்ச்சிகள் அமைந்திருக்கும் என்பதை உயத்துணரமுடிகிறது.

**(iv) நெய்தல் நிலமும் அவற்றிற்கேற்றச் சுற்றுச்சூழலும்:**

கடலும் கடல் சார்ந்த பகுதியை உடையது நெய்தல் நிலமாகும் இதனை வணிகச் சமூகம் என்று குறிப்பிடுவர், இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவை பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் ஆகும்.

> **“நெய்தலும் மருதமும் செழித்தன வணிகமும்**
> **உழவும் வளர்ந்தன, வணிகம் முன்னே நிற்க**
> **மருதம் பின்னே நின்றது.”[7]**

இக்கருத்தின் வழி இருநிலத்தின் வளர்ச்சியை அறிய முடிகிறது, சுறா போன்ற விலங்கினத்தையும், புன்னை, ஞாழல் ஆகிய தாவர இனத்தையும், கைதை, நெய்தற் பூ ஆகிய பூக்களையும் கொண்டுள்ள சுற்றுச்சூழலே நெய்தல் நிலமாகும்.

**(v) பாலை நிலமும் அவற்றிற்கேற்றச் சுற்றுச்சூழலும்:-**

மணலும் மணல் சார்ந்த இடம் பாலை நிலமாகும் பாலை நிலத்திற்கென்று தனிவகையானச் சமூகம் இல்லை என்று குறிப்பிடுகின்றனர். முல்லையும், குறிஞ்சியும் கோடை காலத்தில் திரிபு அடைதலே பாலை என்பதை ஆய்வாளர்கள் நிறுவிக்காட்டியுள்ளனர். எனவே பாலை நில சமூகமும் இவ்விரண்டு நிலங்களின் சமூதாயங்களே ஆகும்.

பாலை நிலம் குறித்து தொல்காப்பியர் நடுவண் திணை என்று பிரித்துக் கூறியதும் இக்காரணத்தால் தான் என்பதை உய்த்துணர முடிகிறது. மேலும் சங்க பாக்களை நோக்கும் போது பாலைப்பாடல்களின் பின்னணியாக அமைபவை குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்களின் கருப்பொருள்களே ஆகும். பாலை நிலப்பின்னணியாக வருபவை, தலைவின் சுரவழியல் செல்லும் போது விலங்கு, பறவை இனங்களின் காட்சி, அந்நிலத்தின் கொடுமை, அங்கு அலைந்து திரியக் கூடிய ஆறலைக் கள்வர்களின் நிலை இவை போன்றவை பாலை நிலச்சூழலாக அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட ஐந்நிலங்களின் சூழலியல் குறித்த விளக்கங்கள் தொல்காப்பிய திணைக்கோட்பாட்டினை மையமாகக் கொண்டு விளங்கக்கூடிய சங்கப்பாடல்களின் துணைக்கொண்டு ஆய்வாளர்களால் எடுத்துறைக்கப்பட்டவையாகும்.

இவை போன்றே புறவாழ்வினையும் தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது. “வெட்சிதானே குறிஞ்சியது புறனே” என்ற நூற்பாவின் வழி புறச்சூழ்நிலையும் அகவாழ்வின் சூழ்நிலையை ஒத்ததாகவே விளங்குகிறது.

மேற்கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை ஆகிய நிலமக்கள் இயற்கையோடு சற்று நெருங்கிய நிலையையும், மருதமும் நெய்தலும் இயற்கையிலிருந்து படிப்படியாக விலகியதையும் உணரமுடிகிறது இவற்றை ஆய்வறிஞர்கள் மனித வாழ்வானது பரிணாம வளர்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது என்று கூறுகின்றனர்.

“பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் மற்ற பிராணிகளைப் போலவே வாழ்ந்து வந்தான். அப்போது சுற்றுச் சூழலின் சமநிலையை அனுசரித்து வந்தான் என்றெ சொல்ல வேண்டும் விவசாயம் வளர ஆரம்பித்து காடுகளை அழிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து சுற்றுச் சூழலைத் தாக்கத் தொடங்கிவிட்டான்.”[8]

எனவே மனித இனம் ஆரம்பகாலத்தில் மற்ற விலங்குளை போன்றே வாழ்ந்துவந்துள்ளது. அதாவது நாடோடியாக வாழ்ந்த காலத்தில், பின்பு ஓரிடத்தில் இனக்குழுவாக தங்கமுற்பட்ட காலத்திலேயே அவர்கள் சூழலியல் சமநிலையில் இருந்து தன்னை அறியாமலேயே விலகியுள்ளனர். இதுவே முதல்படியாகும். தங்கிய மனித இனக்குழு தங்கும் இடத்தை அழித்து உணவு சேகரித்து வாழ்ந்தனர் இவையே கால போக்கில் குறிஞ்சியில் விளைந்த பொருட்களை முல்லையிலும், முல்லையில் விளைந்த பொருட்களை மருதத்திலும் பண்ட மாற்றிக் கொண்டனர். தற்காலத்தில் இவை, 'உலகமயமாதல்' என்ற தீவிர கோட்பாடாக உருவெடுத்துள்ளது.

தொல்காப்பியத்தில் இதனை திணைமயக்கம் என்ற பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார்

**"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்**

**அந்நிலம் பொழுதொடு வாராவாயினும்**

**வந்த நிலத்தின் பயத்தவாகும்"[9]**

ஒரு நிலத்திற்குரிய பூவும்புல்லும் மற்ற நிலங்களில் வந்து மயங்கினால் அவற்றை அந்த நிலத்திற்குரிய கருப்பொருளாக கொள்ளல் வேண்டும். அவ்வாறு வருதல் "நானில அடிப்படையில் உருவானச் சூழலில் நானில மக்களும் தம்முள் கொண்ட தொடர்பு இயற்கை விளைப் பொருட்களிலும் பழக்கவழக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தெய்வம், உணவு முதலானவை பிற நிலங்களில் கலக்கும் நிலை ஏற்பட்டது. இது சங்கபிற்காலத்தில் இன்னும் கூடுதலாக ஏற்பட்ட நிலையைக் காணலாம்."[10]

இக்கருத்தின் வழி கருப்பொருள்கள் அந்தந்த நிலத்துச் சூழலில் தான் பெரும்பான்மையும் வரும். சிறுபான்மை மயங்கி வருதலுக்குக் காரணம் பின்வருமாறு,

1. இயற்கை விளைபொருட்கள்
2. பழக்க வழக்கங்கள்

இவற்றில் மாற்றம் ஏற்பட்டதால் கருப்பொருள் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வாறு சொல்லப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் மனித இனம் சூழலியல் அறத்தினை பேணப்படவில்லை என்பதை அறியமுடிகிறது. அறம் என்பது நன்நெறி என்பதாம். ஆனால் மனித இனம் மற்ற உயிர்கள் அனைத்தும் தமக்காகவே என்ற அற்ப சிந்தனையை முன்வைத்து அனைத்து செயல்களும் இயற்கைக்கு மாறாகவும் மற்ற உயிர்களுக்கு தீங்கு இழைக்கும் நிலையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

"பாதரசத்தின் உற்பத்தியில் பாதி அளவு மின்னனு பொருட்களின் தயாரிப்பிற்கு பயன்படுகிறது. சாதாரணமாக தொலைக்காட்சிபட டியூப்கள், ஒளிதரும் விளக்குகள், கைபேசிகள், மின்கலன்கள் வெப்பக் கட்டுப்பாட்டுக் கருவிகளின் பயன்பாட்டிலும் தயாரிப்பிலும் பாதரசம் பயன்படுகிறது. பாதரசம் நிலத்தடி நீரில் கலந்து குடிநீராக சுலபமாக வீட்டுக்குள் வந்து சேர்ந்து விடுகிறது. இரத்தத்தில் சிறுகச் சிறுக சேர்கிறது. மூளை, சிறுநீரகம், கல்லீரல் போன்றவற்றை மெல்ல மெல்ல பாதிக்கும் பாதரசம் மனிதனின் நினைவுகளை பாதிப்படையச் செய்கிறது. கருவுருதல் இனப் பெருக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது."[11]

இவ்வாறு நாம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சிறிய பொருட்களினால் இவ்வுலகமே அழியக்கூடிய அபாயம் ஏற்படுகிறது. எனவே இவை போன்ற பெரிய பாதிப்புகள் நிகழாவன்னம் மற்ற உயிரினமும் நம் உயிர்போல் போற்றி காக்கவேண்டும். அதற்கு நாம் அனைவரும் சூழல் அறத்தினை கடைப்பிடிக்கவேண்டும்.

### முடிவுரை

கட்டுரையின் கருத்து அடிப்படையில் சூழலியலை போற்றி பாதுகாக்க வேண்டும். ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போதே, அது தொடர்பான பாதிப்பையும் மனதில் கொண்டு அவை சூழலியலுக்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் அமைந்தால் அவற்றை உற்பத்தி செய்தலை நிறுத்திவிடவேண்டும். அதனால் இவ்வுலக உயிர்கள் அனைத்தும் காக்கப்படமுடியும் என்ற சூழலியல் அறத்தினை அனைவருக்கும் எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

### அடிக்குறிப்பு

1. ஆ. அரிமாப்பாமகன், சங்க இலக்கியத்தில் சூழலியல், ப-23
2. சுப்ரபாரதிமணியன், சூழல் அறம், ப-55
3. பெ. மாதையன், அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக் கவிதை மரபும், ப-22
4. மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப-3
5. பெ. மாதையன், அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப-31

6. மேலது, ப-31
7. க.ப. அறவாணன், அற்றை நாள் காதலும் வீரமும், ப-117
8. சிவ. மங்கையர்க்கரசி, சூழலியல் தமிழ், ப-9
9. தொல். நூ. பொ.21
10. பெ. மாதையன், அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப-43
11. சுப்ரபாரதிமணியன், சூழல் அறம், ப-11

**துணைநூற்பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| 1. | அறவாணன், க.ப | - | அற்றை நாள் காதலும் வீரமும் தமிழ்க் கோட்டம், சென்னை 1978. |
| 2. | அன்புமதி | - | சுற்றுச்சூழல் பாதுகாப்பும் தீர்வுகளும், இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை-2007. |
| 3. | அரிமாபாமகன், ஆ | - | சங்க இலக்கியத்தில் சூழலியல் இராசகுணா பதிப்பகம், சென்னை, 2016. |
| 4. | இலியாநோவிக் | - | சமூகமும், இயற்கையும் நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை-2011. |
| 5. | சுப்ரபாரதிமணியன் | - | சூழல் அறம், முதற்பதிப்பு, நவம்பர், 2014 இரண்டாம் பதிப்பு, மார்ச்-2015. |
| 6. | மாதையன், பெ. | - | அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009 |
| 7. | மங்கையர்க்கரசி, சி.வ | - | சூழலியல் தமிழ், உமா பதிப்பகம், சென்னை, 2004 |
| 8. | வரதராசன், மு | - | பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பாரிநிலையம், சென்னை, 2011. |

# குறிஞ்சிப்பாட்டில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் பி.உஷா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, புனித ஜோசப் மகளிர் கல்லூரி, திருப்பூர்.

**குறிஞ்சிப்பாட்டு வெளிப்படுத்தும் வாழ்வும் நாகரிகமும்**

குறிஞ்சிப்பாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த, தமிழ்மக்களின் நாகரிகம் பற்றிய பல சான்றுகள் உள்ளன. அக்கால மக்களின் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் காணக்கிடக்கின்றன. மலைமீது மழைபொழிந்து ஓய்ந்தபின்னர் தலைவியும், தோழியும் ஆங்காங்கு மலர்ந்து, கலந்து கிடந்த வண்ணவண்ண மலர்களைத் தேடித் தொகுத்தது போல, நாமும் இந்நாகரிகக் குறிப்புகளைத் தேடி தொகுப்பதிலேயே ஒரு தனியின்பம் இருக்கிறது. நம் முன்னோர்களின் வாழ்வியல் முறைகளை அறிந்து கொள்வதன்மூலம், நம்முடைய வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வதாகிய பயனும் இருக்கிறது. இதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**பழக்கவழக்கம்**

“விறல் இழை நெகிழ்த்த வீவு அரும் கடும் நோய்”(3) என்பதற்குச், “சிறப்புடைய அணிகளை நெகிழவைத்த எதனாலும் தீராத கடியநோய்” என்று தான் இதுவரை பலரும் பொருள் சொல்லியுள்ளார்கள். “இழை” என்பது அணிகலன்களுக்கெல்லாம் பொதுப்பெயராயினும், நெகிழ்ந்து விழும்படிச் செய்த நோய் எனப் பின்னர் வருவதால் அது கைவளையல்களையே இங்குக் குறிக்கும்.

“விறல்” என்பது இவ்வளையல் தனிச்சிறப்புடையது-மங்கலமுடையது – புனிதமானது எனச் சுட்டுகிறது. தாலிக்கு இன்று எவ்வளவு மதிப்பு உண்டோ, அவ்வளவு மதிப்பு அன்று வளையல்களுக்கு இருந்தது. இன்று கணவனை இழந்ததற்கு அடையாளமாகத் தாலி கழற்றப்படுவதுபோல, அன்று கைவளையல்கள் கழற்றப்பட்டன.

கணவனை இழந்த கண்ணகி, தொடியினை (வளையல்) உடைத்த செய்தியைச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது. தலைவனைப் பிரிந்த தலைவியின் வாட்டத்தைக் காட்டுவதாகும். “வளைநெகிழ மெலிந்துவிட்டாள்” என்று கூறுவதே, இலக்கியப் பெருவழக்காகும். தலைவியின் அழகைச் சிறப்பிக்கும்போதும், நலிவைக் கூறும்போதும் முதலில் இடம்பெறுவன இவ் “வளையல்கள்” தான்.

பெரிய தேரையுடைய தன் தந்தையின் அரிய காவலைக் கடந்து தான் காதல் கொண்டதாகத் தலைவி கூறுகிறாள். இது பூப்பெய்திய பெண்களை மணங்காணும் வரை நம் முன்னோர் கண்ணை இமைகாப்பது போலக் காத்துவந்தனர் என்பதையே நினைப்பூட்டுகிறது. அன்று “காதல் மணம்” எவ்வளவு இருந்ததோ, அதைவிட ஒரு படி அதிகமாகவே இக்காவல்நிலையும் இருந்தது. இரண்டும் போதுமான அளவில் இருந்தமையால் தான் இந்நாட்டில் “கற்பு”ச் சிறப்புற்றது.

“இருவேம் ஆய்ந்த மன்றல்”(21) என்று தலைவி தானும், தலைவனும் இக்காதல் மணத்தை முடிவு செய்ததாகக் கூறுகிறாள். பிறகு, தோழியும் இதற்கு ஒப்புக் கொள்கிறாள். இதனை, அத்தோழி

> **“கொடுப்பின் நன்கு உடைமையும் குடிநிரல் உடைமையும்**
> **வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது**
> **எமியேம் துணிந்த”** **(குறிஞ்சி.30-32)**

திருமணம் என்று கூறுகிறாள். “பல பொருத்தங்களையும் பெரியோர்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பாராமல் நாங்களாக இத்திருமணத்தை முடிவுசெய்துவிட்டோம்” என்கிறாள்.

இதிலிருந்து அன்று காதல் திருமணங்கள் நிகழ்வுற்றனவெனினும், அதே நேரத்தில் “பெரியோர்கள் கூடி உறுதிசெய்யும் திருமணங்களும்” பெரிதும் நடைபெற்றன என அறிகின்றோம்.

**திருமண முறைகள்**

பெரியோர்கள் கூடி முடிவுசெய்யும்பொழுது பல பொருத்தங்கள் பார்ப்பதுண்டு, இப்பழக்கம் அன்றும் இருந்தது. ஆனால், ஒரு வேறுபாடு இருந்தது. இன்று “செவ்வாய் தோசம்” பொருந்தியிருக்கிறதா? என ஆராய்கிறார்கள். கோள்நிலைகளிடையே உள்ள பொருத்தங்களை மட்டும் கருத்தாகக் கொள்கிறார்கள். அன்று, இக்கண்காணாக் கோள்நிலைப் பொருத்தங்களைவிடக் கண்கண்ட பொருத்தங்களைக் கருதினார்கள். “பாத்திரம் அறிந்து பிச்சை இடு; கோத்திரம் அறிந்து கோளடை உறவு வை” என்கின்றனர்.

பெரியோர்கள் கூடி, “இப்பெண்ணை இந்த இடத்தில் கொடுத்தால் பின்பு யாவும் நன்றாகி முடியுமா? எனப் பொதுப்பொருத்தத்தை ஆராய்வார்கள். குடிகள் இரண்டும் சமமான தரமுடையவையா? என ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். தலைவன் தலைவியரிடையே உள்ள பண்பு ஒற்றுமைகளை நோக்குவார்கள். இருவர்தம் சுற்றத்திலிருந்தும் இவர்களுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளையும் பொருத்திப் பார்ப்பார்கள். மேலும், தலைவன் தலைவியரிடையே இருக்கவேண்டிய ஒப்புமைகளைப் பற்றித் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு**
**உருவு நிறுத்த காமவாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”**

எனத் தலைவனுக்கும், தலைவிக்கும் இருக்கவேண்டிய பத்துப்பொருத்தங்களைச் சுட்டியுள்ளார் தொல்காப்பியர்.

**சடங்குகள்**

திருமணச்சடங்கு பெற்றோர் கொடுக்கக் காதலியின் கையைத் தலைவன் பற்றிக்கொள்வதாகும். இதனை “நன்கு அறி நன்மணம்” (232) என்று தலைவன் கூறுவதால், இம்மணத்தினை உலகம் அறிவதற்காக நடத்தப்படும் “சடங்கு” என்பது புலனாகிறது. இல்லறத்தின் தலையாய அறம் விருந்து புறந்தருதலே(206) என்பதை இக்குறிஞ்சிப்பாட்டு மிகத் தெளிவாக விளக்குகிறது.

**தொழில்கள்**

வயதுவந்த பெண்களைத் தினைப்புனம் காக்க அனுப்புவதுண்டு. கானவர்கள் புலி அஞ்சும் இதணம்(பரண்) அமைத்து, அதன்மேலே இரவுநேரத்தில் தங்கியிருந்து தினைப்புனம் காப்பார்கள். அப்பரணிடத்தே, இரவுநேரத்தில் கானவர்கள் தீக்கடைக்கோலால் நெருப்பை உண்டாக்குவார்கள். பகற்பொழுதில் மகளிர் கிளிகளை ஓட்டுவதற்குத் தழல், தட்டை, குளிர் எனப் பல கருவிகளைப் பயன்படுத்துவார்கள். கிளிகளை ஓட்ட “ஆலோலம்” என்ற தெள்விளியை (தெளிந்த ஓசை) அவர்கள் எழுப்புவார்கள். கானவர்கள் யானையை விரட்டுவதற்குப் பேரோசையை எழுப்பிக் கணைகள் ஏவித் தாக்குவார்கள். மயிலை வர வைத்துப் பிடிக்கின்ற முறையும் அன்று இருந்தது. விழாக்காலங்களில் கூத்துக்கள் நடத்துகிற பழக்கமும் அன்று உண்டு.

**நம்பிக்கைகள்**

**“வேறுபல் உருவின் கடவுட்பேணி”**

என்று தாய் கடவுளை வணங்கியமை கூறப்படுகிறது. இதற்குப் “பலவேறு வடிவங்களையுடைய கடவுள்களை வணங்கி” என்று பொருள்கூறுவது சங்ககால மரபுக்குப் பொருந்துவதன்று; இப்பாட்டின்கண், ”பல்வேறு உருவின் வனப்பு அமைகோதை”(103) என்ற இடத்துப் பல்வேறு நிறமுடைய மலர்கள் எனப் பொருள் தருகிறது.

அடுத்து “எரி அவிர் உருவின் அம் குழைச் செயலை” (105) என்ற இடத்தும் நெருப்புப் போன்ற நிறமுடைய அசோகத்தளிர்களைச் சுட்டுகிறது. எனவே, இங்கும் “பல்வேறு நிறங்களையுடைய கடவுளைப் பேணி” எனப் பொருள்கொள்ளுதல் சிறப்பு எனப்படுகின்றது.

ஏனெனில், சங்ககாலக் கடவுளரின் பெயர்கள் பெரும்பாலும் நிறம் பற்றி அமைந்திருந்தன. குறிஞ்சிநிலக் கடவுளைச் "சேயோன்" (சிவந்த நிறமுடையவன்) என்றும், முல்லைநிலக் கடவுளை "மாயோன்" (கரியநிறமுடையவன்) என்றும் அழைத்தனர். "வாலியோன்" என்ற கடவுட்பெயரும் வெண்மை நிறமுடையவன் என்று பொருள்படும்.

**குறிஞ்சிநிலக்கடவுள் முருகன்**

இக்குறிஞ்சிப்பாட்டில் முருகக்கடவுள் பகைவருக்கு எதிரே வேலை உயர்த்தியமை உவமை வாயிலாகக் கூறப்பட்டுள்ளது, பொருத்தமே ஆகும். முருகன் பகைவரை அழித்துத் தங்களைப் பாதுகாப்பான் என்றும், அதற்கு அடையாளமாகவே அவன் கைகளில் வேல் விளங்குகிறது என்றும் தமிழ்மக்கள் நம்பினார்கள்.

**வெறியாட்டு**

பருவம் வந்த பெண்களுக்குத் தெய்வத்தால்- குறிப்பாக முருகக்கடவுளால் நோய் ஏற்பட்டு உடல் மெலிவுறும் என அவர்கள் நம்பினார்கள். இந்நோயைப் போக்க முருகபூசை செய்யும் வேலனை அழைப்பார்கள். முதலில் அவனிடம் குறி கேட்பார்கள்: கழற்சிக்காய்களைப் போட்டுப் பார்த்து அவன் குறி சொல்வான். இக்காலத்துக் "கோடாங்கி" என்னும் குறிபார்ப்பவனை இது நினைப்பூட்டுகிறது. முறத்திலே நெல்லைப் போட்டுக் குறிபார்க்கும் கட்டுவிச்சியிடமும் குறிபார்ப்பார்கள். இது தெய்வத்தால் வந்த நோய் என்று அவர்கள் குறி சொன்னால், அவ்வேலனைக் கொண்டோ அல்லது கட்டுவிச்சியைக் கொண்டோ முருகக்கடவுளுக்கு வெறியாட்டு எடுப்பார்கள். மறி அறுத்துப் பலிகொடுப்பார்கள். மலர்தூவி வழிபடுவார்கள் அகில், சந்தனம் முதலிய நறுமணப்பொருள்களை எடுத்து வழிபாடு செய்வார்கள்.

வெறியாட்டு எடுக்குமிடத்தில் கடம்மரம் நிற்கும், அதன் அடிப்பாகத்தில் ஒன்றின்மேல் ஒன்றாக மாலைகள் போடப்படும். முருகனை வணங்கும் அவ்விடத்திற்கு வெறியாடுகளம் என்று பெயர். பலி கொடுப்பதால் அவ்விடம் குருதிக் கறைபட்டுக் காட்சியளிக்கும்.

**அணிகலன்கள்**

பெண்கள் அருவியிலும், சுனையிலும் நீராடுவர். கூந்தலைப் பிழிந்து உலர்த்தி அதனை ஐந்து வகைகளாகப் பின்னிக்கொள்வர். பல்வேறு பூக்களைத் தொடுத்துச் சூடிக்கொள்வர். கொய்த தழையாலான உடையை அடிவயிற்றில் அணிந்துகொள்வர். அழகிய வளையல்களை நிரல்பட அணிவது அவர்தம் இயல்பாகும்.

ஆடவர்கள் எண்ணெய் கலந்த நெளி உண்டாக வளர்க்கின்ற மணமிக்க கரிய குளிர்ந்த மயிர்ச்சந்தனத்தைத் தலைமுடியிலே பூசிக்கொண்ட குளிப்பார்கள். பின்பு, அம்முடியை விரலாலே உலர்த்தி, கரிய அகிற்புகையை ஊட்டுவார்கள். இங்ஙனம் நெய்ப்புக் கலந்த முடியில் அழகிய வண்டுகள் யாழிசைபோல ஆரவாரிக்கும், பல்வேறு மலர்களை ஆராய்ந்து தொடுத்தமாலை, வெண்தாழை மடலாலே ஆன கண்ணி, பிச்சிப்பூக்களைக் கட்டிய வடம் போன்றவற்றைத் தலையில் அணிந்துகொள்வார்கள். காதில் அசோகத்தளிரைச் செருகிக்கொள்வதுண்டு. அது தோளில் கிடந்து அசையும்-மார்பில் சந்தனத்தை மிகுதியாகப் பூசிக்கொள்வார்கள். மணமிக்க மாலைகளையும், அணிகலன்களையும் பூணுவார்கள். நுண்ணிய வேலைப்பாடு அமைந்த கச்சையை நன்கு நெகிழ்வு இல்லாதவாறு கட்டியிருப்பார்கள். அடியெடுத்து வைக்கும் பொழுதெல்லாம் அசைந்து அசைந்து அவை ஒலிசெய்யும். அக்கால மகளிர், ஆடவர்களின் அழகினை இவை வெளிப்படுத்துகிறது.

**நாகரிகம்**

திருவிழாக்காலத்துப் பலருக்கும் விருந்துவைப்பதுபோல, செல்வர்கள் வீட்டில் நாள்தோறும் பெரிய மிடாவில் சோறு வடிப்பார்கள். அவர்கள் வீட்டுக்கதவு எப்பொழுதும் வருபவர்க்கெல்லாம் திறந்திருக்கும். குற்றமற்ற சான்றோர்கள், சுற்றத்துடன் வந்து நெய்யூற்றிய சோற்றை இறைச்சியுடன் உண்ணுமாறு படைப்பார்கள். தேனில் முற்றிய பலாச்சுளையையும், இனியமாங்கனியையும் போட்டுப் பல நாள் ஊறவைத்த மதுவைப் பருகும் பழக்கம் அன்று இருந்தது.

வேந்தர்களிடையே தோன்றிய பகைமையைத் தணிக்கச் சான்றோர்கள் தூது செல்வதுண்டு. வேந்தன் சினம்கொண்டு விட்டால் அவனுடைய படை பகைவர்மீது விரைந்து பாயும். அவ்வேந்தனின் படைவீரர்கள், பகைவர்கள் எவ்வளவு வலிமைமிக்கவர்களாயினும் புறமுதுகு காட்டி ஓடவைப்பார்கள்.

முத்துக்களையும், மணிகளையும் பொன்னிலே பதித்துப் பல்வேறுவகையான அணிகலன்களைச் செய்வார்கள். அவற்றைச் செய்யவும், செப்பனிடவும் வல்ல தொழிலறிஞர்கள் பலர் அன்று இருந்தார்கள். நாணில் பொருத்துவதற்கு ஏற்ப அம்பின் பின்பகுதி சிறுபிளவாக இருக்கும். அதற்கு “உடு” என்று பெயர். பருத்து அகன்ற கைகளில் கட்டமைத்த வில்லை ஏற்றிக்கொண்டு, அம்புகளை ஆராய்ந்தபடி ஆடவர்கள் வருவதே தனி அழகாக இருக்கும். ஒவ்வோர் ஊரிலும், புகுமிடத்தே தலைவாயிலில் நீருண்ணும் துறைகள் - ஊருணிகள் இருக்கும். இரவுமுழுவதும் காவலாளர்கள் விழித்துக்கொண்டு ஊரைச் சுற்றிவந்து காப்பார்கள். வேட்டையாடுவோரும், காவலர்களும் நாய்களை வளர்த்துத் துணைக்கு அழைத்துச் செல்லுவார்கள்.

மென்மைமிக்க வெண்மையான துகில் ஆடையும், அடுத்தது காட்டும் ஆடியும் போன்ற நாகரிகப்பொருள்களை அன்று பயன்படுத்தினர்.

**முடிவுரை**

குறிஞ்சிப்பாட்டு, அறம், பொருள், இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருள்களையும் போற்றிப் புனைந்து கூறுகிறது. சங்ககாலப் பழக்கவழக்கங்கள், சடங்குகள், காதல்மணக்காட்சிகள், விருந்தோம்புதல், திருமணமுறைகள், வாழ்க்கைநெறிமுறைகள், ஒழுகலாறுகள் முதலியவற்றை விளக்கி நிற்கும் பெட்டகமாகக் குறிஞ்சிப்பாட்டுத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

# தொல்காப்பியநோக்கில் குறுந்தொகையில் வனப்புகள்

***பு.இலக்கியதென்றல்,** முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

**முன்னுரை**

ஒருபடைப்பு இலக்கியத்தைபடைக்கும் போதுஅதனுடையபொருளானதுமற்றவர்களின் உள்ளத்தைசுண்டி இழுக்கும் போதுதான் அழகுணர்வின் வெளிப்பாடுபுலப்படும் மேலும் அழகானபொருள் என்ன என்பதை உணரும் போதுதான் அழகியல் வெளிப்படுகின்றது. அழகைக் கண்டு உணர்வதாலும் அனுபவிப்பதாலும் படைப்பாளன் உள்ளத்திலே அது அகத்துஎழுச்சியைத் தோற்றுவிக்கின்றது. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"எனும் விழுமிய உணர்வோடு பிறருக்கு எடுத்துரைப்பதே படைப்பாளனின் நோக்கமாக அமைகிறது. இத்தகைய அகத்து எழுச்சியால் தோன்றுவதே இலக்கியம் எனும் கருத்தினைமையமாகக் கொண்டுவிளக்கப்படுவதேஅழகியலாகும். ஒழுங்கான தன்மையே அழகியகலைப் படைப்பின் பண்பாகும். வெறும் உணர்ச்சிபெருக்கைக் கொண்டு உருவெடுப்பதுஅழகுஎன்று இல்லாமல் இசையாலும் ஓவியத்தலும் பிறசெய்யுளின் வடிவம்,ஓசை,பொருள்,என்ற பல்வேறு கலைகளினாலும் அழகு என்னும் பொருளைக் குறிக்கும் எண்வகை வனப்புகளைக் குறுந்தொகையின் மூலம் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகஅமைகின்றது.

**வனப்புவிளக்கம்**

வனப்பு என்பது பலசெய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலையின் அமைப்பாகும். இவை சிறுபான்மையான முறையில் தனிச் செய்யுளாகவும் தொடர்நிலைச் செய்யுளாகவும் வனப்பு கொள்ளப்படும். மேலும் இவ்வனப்புஎட்டு வகைப்படும்[1] .என்றுகலைக் களஞ்சியம் விளக்குகிறது.மேலும் வனப்பு என்பதை அழகு,அலங்காரம்,இளமை நிறம்[2] என்று தமிழ் அகராதி சுட்டுகிறது.

**வனப்புவரையரை**

வனப்பு என்பது செய்யுள் அழகு என்று பொருள் கொள்ளப்படுகிறது. காண்பவரின் கண்ணோட்டத்தைப் பொறுத்தே அழகு அமைகின்றது. அழகை, குறிப்பதற்கு ஏர், எழில், வனப்பு, இராமம், காரிகை, மா, அம்மை, பந்தம், தேசிகம், கவின், வண்ணம், வளம், வனம், செழுமை, நோக்கு, அணங்கு, அம் போன்ற பலசொற்கள் பயன்படுகிறது.[3] என்று முனைவர் மு.வளர்மதி தனது நூலில் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ள வனப்பை இலக்கியத்தில் நோக்கும் போது தனிநிலைச்செய்யுள் தொடர்நிலைச் செய்யுளுமாகிய இரண்டன் அடிப்படையில் அமைகின்றது.

**தொல்காப்பியத்தில் வனப்பு**

தொல்காப்பியச் செய்யுளியலில் வனப்பு என்பதை,

**ஆறுதலையிட்டஅந்நாலைந்தும்**
**அம்மைஅழகுதொன்மைதோலே**
**விருந்தே இயைபேபுலனே இழைபெனாஅப்**
**பொருந்தக் கூறியஎட்டோடுந் தொகைஇ**
**நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென**
**வல்லிதிற் கூறிவகுத்துரைத்தனரே (தொல்.பொருள்,செய்யுள்.1:13)**

என்ற நூற்பாவில் செய்யுள் உறுப்புக்களால் எண்வகை வனப்புகளைப் பற்றித் தொல்காப்பியர் எடுத்துரைக்கின்றார்.

**குறுந்தொகையில் வனப்பு**

எட்டுத்தொகை நூல்களின் இரண்டாவது நூலாக அமைந்திருப்பது குறுந்தொகை என்னும் நூலாகும். மேலும் இந்நூல் முதலாவதாக தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுவதால்

இது நல்லகுறுந்தொகை எனவும் பாராட்டப்படுகின்றது. தலைவன் தலைவியிடையே வளரும் அன்புநிலை, அவர்கள் இல்லறம் நடத்தும்முறை ஆகியன உலகவாழ்வியலைச் செம்மைப்படுத்தும் என்பதை அக்காலத்து மக்கள் உணர்ந்தது மட்டுமல்லாமல் இக்காலத்து மக்கள் உணரும் வகையிலும் குறுந்தொகை அமைந்துள்ளது.

**அம்மை**

அம்மைஎன்பது குணப்பெயராகும்.அமைதிப்பட்டு நிற்றல் அம்மையாகக் கூறப்படுகிறது. இதனை தொல்காப்பியச் செய்யுளியலில் அம்மை என்பதை,

**சின்மென் மொழியாற் சீர் புனைந்துயாப்பின்**
**அம்மைதானேஅடிநிமிர் பின்றே (தொல்.பொருள்.செய்யுள்.நூ.536)**

என்ற நூற்பாவின் மூலம் சின்மென்மொழி,சுருங்க கூறுல் மெல்லிய வண்ணம் போன்றவற்றை உணர்த்துவது அம்மையாக அமைகின்றது. இவை தனிச் செய்யுளாகவே குறுந்தொகையில்,

**நிலத்தினும் பெரிதேவானினும் உயர்ந்தன்று (குறுந்-.3)**

இவ்வரியில் நிலம் என்பதுபூமியைக்குறிக்கின்றது. வானம் ஆகாயத்தைக் குறிக்கின்றது. இந்த இரண்டுபொருளுக்கும் இடையே இடைவெளி உள்ளது ஆனால் இந்த இரண்டு சொல்லும் ஒரேஅடியில் அமைந்து வருவதால் இது தனிநிலைசெய்யுளாகவே கொள்ளப்படுகின்றது. இவை.வேறுவேறுபொருளை உணர்த்துகிறது..

**அழகு**

அழகு என்பது செய்யுள் உறுப்புகளால் அமையப்பெற்ற இலக்கியங்களாகும். மேலும் உரையாசிரியர்களஎட்டுதொகை நூல்களைகுறிப்பிடுகின்றார்..தொல்காப்பியர் செய்யுளியலில் அழகுஎன்பதை,

**"செய்யுள் மொழியாற் சீர் புனைந்துயாப்பின்**
**அவ்வகைதானேஅழகெனப்படுமே"**

என்ற நூற்பாவில் உரைநடையிலானசொற்களைச் செய்யுள் என்றுகுறிப்பிடுவதுமட்டுமல்லாமல் செய்யுள் உறுப்புகளையும் எடுத்துரைக்கின்றது.

**செங்களம் படக்கொன்றுஅவுணர்த் தேய்ந்த**
**செங்கோல் அம்பின் செங்கோட்டுயானைக் (குறு.1)**

இப்பாடலில் இரண்டுஅடிகளின் முதல் சொல்லாக இருக்கும் செங்களம்,செங்கோல் இவற்றில் முதல் இரண்டு எழுத்துக்களும் மோனைஎதுகையாகவந்துள்ளது.

**தொன்மை**

தொன்மை என்பது புராணக்கதைகளையும் பழங்கதைகளையும் எடுத்துக் கூறுவதே தொன்மையின் சிறப்பாகும். இதனைத் தொல்காப்பியச் செய்யுளியலில்,

**"தொன்மைதானேஉரையொடு புணர்ந்தபழைமைமேற்றே"**
**(தொல். பொருள்.செய்யு.நூ..538)**

என்ற நூற்பாவில் தொன்மை பற்றி விளக்குகிறார். இவை உரைநடையோடு வந்த பழங்கதைகளைப் பற்றிக் குறுந்தொகையில்,

**"கோடுஈர் இலங்குவளைநெகிழநாள்தொறும்**
**பாடுகுகலிழும் கண்ணொடுபுலம்பி" (குறு.11:2)**

சங்கை அறுத்துச் செய்த ஒளிவிளங்கும் வளையல்கள் செய்பவர். இன்றைய ஆத்திரத்தின் எல்லைப்பகுதியில் வாழ்ந்தவர் வடுகர் ஆவர். என்ற செய்தி மரபுசார்ந்த தொன்மையை எடுத்துரைக்கின்றது.

**தோல்**

தோல் என்பது தோற்கருவிகளை உருவாக்கும் பொருளாகும். வனப்பில் அமைந்ததோல் பற்றித் தொல்காப்பியர் செய்யுளியலில்,

**"இழுமென் மொழியான் விழுமியதுநுவலினும்**
**பரந்தமொழியான் அடிநிமிர்ந்துஒழுகினுந்**
**தோலெனமொழிதொன்மொழிப் புலவர்" (தொல்.பொருள்.செய்யு.நூ539)**

என்ற நூற்பாவில் இழும் என்னும் ஓசை, பரந்தமொழி, உயர்ந்தகருத்துக்கள் ஆகியவை இடம் பெறுகிறது. இவற்றைக் கொண்டு குறுந்தொகையில்,

**"கொங்குதேர் வாழ்க்கைஅஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாதுகண்டதுமொழிமோ**
**பயிலியதுகெழீஇயநட்பின் கூந்தலின்**
**செறிஎயிற்றுஅறிவை கூந்தலின்**
**நறியவும் உளவோநீஅறியும் பூவே! " (குறு.2)**

பூந்தாதுகளைத் தேடி உண்பதையே வாழ்க்கையாகக் கொண்ட அழகிய சிறகுகளையுடைய வண்டானது என்னுடன் நெருங்கிப் பழகிய காதலையும் மயில் போன்ற சாயலையும் வரிசையாய் உடைய பற்களையும் உடையஎன் காதலியின்கூந்தலைப்போல நறுமணமுடைய பூக்களும் நீ அறிந்தவற்றில் உளவோ? இப்பாடல் இழும் எனும் ஓசையும்,விழுமிய கருத்தும் வந்துள்ளது.

**விருந்து**

விருந்து என்பது விருந்தினரை உபசரித்தலாகும். தொல்காப்பியர் கூறியகருத்துப்படி புதிதாகபடைக்கும் இலக்கியங்களை விருந்து என்று கூறப்படுகின்றது. மேலும் விருந்து என்பது புதுமையைக் குறித்துவருவதாகும். தொல்காப்பிய செய்யுளியலில்,

**"விருந்தேதானும்**
**புதுவதுகிளந்தயாப்பின் மேற்றே" (தொல்.பொருள்.செய்யு.நூ.540)**

என்ற நூற்பாவில் இருந்து இடம்பெறுவதைசுட்டிக்காட்டப்படுகிறது.புதிதாகப் படைத்தபாடல் குறுந்தொகையில்,

**"யாய் ஆ கியளேவிழவு மூதலாட்டி**
**பயறுபோல் இணரபைந்தாதுபடீஇயர்**
**உழவர் வாங்கியகமழ்பூ மென்மிசைக்**
**காஞ்சி ஊரன் கொடுமை**
**கரந்தனளாகலின் நாணியவருமே" (குறு.10)**

இப்பாடலில் உழவர்கள் உடலில் உதிர்ந்துபடிந்த மகரந்தப் பொடிகளானதுஅவர்கள் காஞ்சிமரக் கிளையைவளைத்ததைக் காட்டிவிடுகின்றன. அதுபோலதலைவன் பரத்தைவீடுபோய் வருகின்றான் என்பதைஅவன் உடம்பில் பூசியுள்ளசந்தனம் முதலியநறுமணப் பொருள் காட்டிவிடுகின்றன.இதில் புலவனின் கற்பனை இடம் பெற்றுள்ளது.

**இயைபு**

இயைபு என்பது அடியின் இறுதி எழுத்தானது அடுத்த அடியின் தொடக்கமாக அமைவதாகும். தொல்காப்பியர் இயைபு என்னும் வனப்பு பற்றித் தொல்காப்பியச் செய்யுளியலில்,

**"ஞகாரமுதலானகாரயீற்றுப்**
**புள்ளியிறுதி இயைபெனப் படுமே" (தொல்.பொருள்.செய்யு.நூ.54)**

என்ற நூற்பாவில் ஞ,ண,ந,ம,ன,ய,ர,ல,வ,ழ,ள என்ற பதினாறு மெய்களும் புள்ளிப் பெற்று இறுதியாக வருவதை இயைபு என்று கூறப்படுகின்றது.

**'செறிஎயிற்றுஅரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோநீஅறியும் பூவே? " (குறு.2:4-5)**

இவ்வரியில் கூந்தலின்,நறியவும் ஆகிய இரு சொற்களின் இறுதி எழுத்தானன் ந ஆகிய இரண்டும் வேறுவேறு எழுத்துக்களைக் கொண்டிருந்தாலும் ஒரேவகையான ஓசைத் தன்மையைப் பெற்றிருக்கின்றன. முதல் அடியின் இறுதி எழுத்துஅடுத்தஅடியின் தொடக்கமாக இருப்பதால் இவை இயைபு என்றும் வனப்பாக வந்துள்ளது.

**புலன்**

புலன் என்பது உள்ளுணர்ந்து ஆராய்தல் ஆகும். இவை உணர்வின் இணைபிக்க இயலாத ஒரு பகுதியாகும். புலனானது உணர்வின் காட்சிப்பொருளைச் சுட்டுகிறது. தொல்காப்பியச் செய்யுளியலில்,

**“சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாதுகுறித்ததுதோன்றிற்**
**புலலெனமொழிபுலனுணர்ந்தோரே” (தொல்.பொருள்.செய்யு.நூ.542)**

என்ற நூற்பாவின் மூலம் இயற்சொல்லாற் அதாவது இயலபுச் சொற்களைக் கொண்டுபொருள் இயற்றப்படும் செய்யுள் புலன் வனப்பாகும்..இவை சுவை,ஒளி,ஊறு,ஓசைஆகிய பொருள்களைக் குறிக்கின்றது.

**“கையும் காலும் தூக்கத் தூக்கும்” (குறு.8:4)**

இவ்வரியானது இயல்பான நடையில் வார்த்தைகளைக் கொண்டுஅமைந்துள்ளதால் இது புலன் என்னும் வனப்புக்குப் பொருந்துகிறது.

**இழைபு**

இழைபு என்பது க,ச,ட,த,ப,ற என்னும் ஆறு எழுத்துக்களும் ஒற்றோடு வராமல் அமையும் செய்யுளாகும். இவை இரண்டுஅல்லது ஐந்தடியானும் வரப்பெறுவதாகும். தொல்காப்பியர் செய்யுளியலில்,

**“ஒற்றொடுபுணர்ந்தவல்லெழுத்தடக்காது**
**குறளடிமுதலாஐந்தடிஒப்பித்து**
**ஓங்கியமொழியான் ஆங்கனம் ஒழுகின்**
**இழைபினிலக்கணம் இயைந்துதாகும்” (தொல்.பொருள்.செய்யு.நூ.543)**

என்ற நூற்பாவின் மூலம் இழைபுக்கான இலக்கணம் விளக்கப்படுகிறது.குறுந்தொகையில்,

**“கானமஞ்சைஅரைஈன் முட்டை**
**வெயில் ஆடு முசுவின் குருளைஉருட்டும்**
**குன்றநாடன் கேண்மைஎன்றும்**
**நன்றுமன் வாழிதோழி !உண்கண்**
**நீரொடுஓராங்குத் தணப்ப**
**உள்ளாதுஆற்றல் வல்லுவோர்க்கே” (குறு.38)**

இப்பாடலில் க,ச,ட,த,ப,.ற என்னும் ஆறு எழுத்துகள் ஒற்று எழுத்துகளாக அதிகம் வரவில்லை என்பதால் இவை இழைபு என்னும் வனப்புக்குப் பொருந்துகிறது.

**முடிவுரை**

மொழியானது மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ஒரு கருவியாகும். இவை காலமாற்றத்திற்கு ஏற்றாற்போல சொற்களும், பொருளும் மாற்றம் அடைந்துக் கொண்டே வருகின்றது. சங்ககாலத்தில் உள்ள சொற்கள் அனைத்தும் யாப்பு கட்டுப்பாடு கொண்டே இயற்றப்பட்டன. இதனால் படித்த அறிஞர்களால் மட்டுமே அதனைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இன்றைய காலப்பாடல்கள் அனைத்தும் எல்லோரும் புரிந்துகொள்ள கூடிய விதமாக உள்ளது. தொல்காப்பியர் கூறியுள்ள எண்வகை வனப்புகள் எட்டுத்தொகையில் இடம் பெற்றிருந்ததால் அதன் பொருள், ஓசை, வடிவம் ஆகியவை அழகான முறையில் அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்பு**

1. கலைக்களஞ்சியம்,தொகுதிஒன்பது,1963,ப.184
2. கழகத்தமிழ் அகராதி,கழகப் புலவர் குழுவினர்,1964,ப.850
3. மு.வளர்மதி,இலக்கியப் பயணங்கள்,2010,ப.59

# பழந்தமிழரின் அழகுக் கலை

*மரு. முனை. பெ. பாரதஜோதி, இணைப்பேராசிரியர், சித்த மருத்துவத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

அழகு என்பதற்கு அணி, எழில், ஏர், கவின், கோலம், பொற்பு, முருகு, வனப்பு எனப் பல்வேறு பொருள்கள் உண்டு, பிங்கல நிகண்டு ஏர், வனப்பு, எழில், இராமம், காரிகை, மா, அம்மை, கவின், செழுமை, பந்தம், தேசிகம், நோக்கு முதலான ஐம்பத்து நான்கு சொற்களை அழகுக்குக் கூறப்படும் பிறசொற்களாக அறியப்படுகின்றது. பின்னாளில் எழுதப்பட்ட ஆசிரிய நிகண்டு நூலில் அணங்கு, அணி, அந்தம், அம், அம்மை, அலம், அற்புதம், ஆரியை, இராமம், எழில், ஏர், ஐ, ஒப்பு, கட்டளை முதலான எழுபது சொற்களை அழகினைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது .

அழகு என்பது இதுதான் என்று வரையறுத்துக் கூற இயலாது என்றாலும் நாம் அழகு என்று கூறக்கூடியவை இயற்கை அழகு, செயற்கை அழகு என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டது. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலம் முதல் வானம், மேகம், மலைகள், நதிகள், கடல் உள்ளிட்டவை இயற்கை அழகாக அறியப்பட்டது .பின்னர் அழகை இரசிப்பதோடு நின்றுவிடாமல் தன் செயலைக் கொண்டும் அழகைப் படைத்தான். அது செயற்கை அழகாயிற்று.

ஆதிகாலத்தில் வாழந்த மனிதன், தன் அடிப்படைத் தேவைகள் நிறைவேறியபின் தன் தோற்றத்தில் கவனத்தைச் செலுத்தி தன்னை அழகாக வைத்துக்கொள்ள விரும்பினான். இயற்கையாக் கிடைத்த தாவரங்களின் இலை, பட்டை, விலங்குகளில் இருந்து கிடைக்கும் தோல் போன்றவற்றைக் கொண்டு தன்னை அழகுபடுத்திக் கொண்டான். அவனுடைய அந்த அனுபவம் பல நூற்றாண்டு கால வளர்ச்சியில் அழகியல் என்ற அறிவியலாக இன்று வளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய அழகு சாதனப் பொருட்கள் மனிதனின் அழகை மிளிர வைத்து பொலிவோடு விளங்கச் செய்கின்றன.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தம் பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகியவற்றை அழகுக்கலைகள் என்று குறிப்பிடுகின்றார். எனினும் ஆடை, அணிகலன், மணப்பொருள்கள் போன்றவற்றையும் பல உள்தலைப்புகளுள் அமைத்துச் செல்கிறார். இவற்றைக் கொண்டு நோக்கும் பொழுது அழகுக் கலைகளாக சிலவற்றிற்கு மட்டுமே முதன்மைதந்து அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் என்பது புலனாகிறது. இன்று பொதுமக்களிடையே அழகுக்கலை என்பது ஒப்பனைக் கலையைக் குறிக்கும் சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது.

**அழகுக்கலை - அன்று**

அழகுக் கலையைப் பற்றி அறிந்துகொள்ள உதவுவன வரலாற்று மூலங்களாகும். இன்றைய நாகரிகத்தின் தாய் என்று போற்றப்படும் எகிப்தியர்கள் அழகுக்கலையைப் பேணி வளர்த்தவர்கள். அவர்கள் இக்கலையின் அருமையை நன்கு அறிந்ததோடு அதன் பெருமையை மற்ற நாட்டினரும் உணரும்படி செய்தவர்கள். இந்தியாவிலும் அழகுக்கலை சிறப்புப் பெற்று விளங்கியது. இக்கலைக்கு வடமொழியில் 'சிருங்கார்' என்று பெயர்.

பழந்தமிழர் இக்கலையில் தேர்ச்சி பெற்று விளங்கினர். 'அழகு செய்தல்' என்பது 'புனைவினை' என்றும் 'வினைதல்' என்றும் 'பரிசரக் கைவினை' என்றும் கைவினை என்றும் 'ஒப்பனை' என்றும் பலவாறாக எடுத்துரைக்கப்பட்டது. இந்த அழகுக் கலையைப் புனைதல், மண்ணல், பொற்புறுத்தல், அணி செய்தல், கை செய்தல் எனப் பிங்கல நிகண்டு பாகுபடுத்திக் காட்டுகிறது. பெண்களுக்கு ஒப்பனை செய்யும் மகளிர் 'வண்ண மகடூஉ', 'வண்ண மகளிர்', 'வண்ண மகள்' என்று அழைக்கப்பட்டனர். ஆண்களுக்கு ஒப்பனை செய்வோர் பண்ணுவார், புலனைவோன், கோலவித்தகர் என்று அழைக்கப்பட்டனர். ஒப்பனை

செய்யும் இடம், 'மல்வினை நகர்' என்றும் யாப்புறு மண்டபம்' என்றும் 'தகையமை சாலை' எனவும் அழைக்கப்பட்டது. குலத்திற்கென்று சொல்லப்பட்ட ஒப்பனை, நாள் ஒப்பனை, நீராடும்போது செய்து கொள்ளும் ஒப்பனை, திருவிழாக் காலங்களில் செய்து கொள்ளும் ஒப்பனை, திருமணத்திற்காகச் செய்து கொள்ளும் ஒப்பனை எனப் பலவகையான ஒப்பனைகளை பழந்தமிழர்கள் பயன்படுத்தினர்.

தென்னிந்தியாவில் நீராடுவதற்கு என நீராடும் மண்டபங்கள் இருந்தன என்பதைத் திருத்தொண்டர் புராணம் வாயிலாக அறியலாம். 'இலந்திகை' என்று சொல்லக்கூடிய எந்திர வாவி இருந்ததைச் சிலப்பதிகாரம் (10: 30.31), மணிமேகலை (3: 45), பெருங்கதை (1: 40: 311-312) முதலானவை எடுத்துரைக்கின்றன. வேண்டிய பொழுது நீரை நிரப்பியும் மற்ற நேரங்களில் அந்நீரை வடியச்செய்யவும் உதவும் இயந்திரம் உடைய செயற்கை குளமே இலந்திகையாகும்.

நீராடுவதற்கு தூய்மையான, மணப்பொருள் கலக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட நல்ல நீரைப் பயன்படுத்தினர். சந்தனம் கலந்த தூய மணம் கமழ்ந்த நிரில் நீராடியதைப் பெருங்கதை (1:34:187-188) எடுத்துரைக்கிறது. பச்சிலைகளையும் ,வாசனைப் பொருள்களையும் சேர்த்துக் காய்ச்சி நீராடப் பயன்படுத்தியதை பெரியாழ்வார் எடுத்துரைக்கிறார் (1:2:6:1-3).

முப்பத்திரண்டு வகையான வாசனைப் பொருட்களைக் குளிப்பதற்கான நீரில் ஊற வைத்துக் குறித்த செய்தி மணிமேகலையிலும் சீவசிந்தாமணியிலும் கூறப்பட்டுள்ளது. அவை இலவங்கம், பச்சிலை, கச்சோலம், இருவேரி, மலைஇருவேரி, வகுளம், சுரபுன்னை, ஏலம், தக்கோலம், சாதிக்காய், நாகணம், மஞ்சிட்டி, நறும்பிசின், குக்குலு, சடாமாஞ்சில், கண்டில் வெண்ணெய், தீம்பு, நன்னாரி, அடவி, கச்சோலம், அரத்தை, சரளம், புழுகு, ஆரியக் கோட்டம், கொட்டம், தகரம், முத்தக்காசு, விலாமிச்சம், அயிலேகம், நாகப்பூ, சண்பகமொட்டு என இவ்விரு நூல்களின் உரையாசிரியர்கள் வாசனைப் பொருட்களின் பெயர்களைக் கூறியுள்ளனர். குளிக்கும் நீரில் பத்து வகையான துவர்ப்புப் பொருட்கள் சேர்க்கப்பட்டன என்பதைச் சிலப்பதிகாரம் (6: 76-79) கூறும். அவை பூவந்தி. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கருங்காலி, அரசு, ஆல், அத்தி, இத்தி, நாவல் என அடியார்க்கு நல்லார் உரை எடுத்துரைக்கிறது.

இளவேனில் காலத்தில் நெல்லிக்காயைச் சாந்தாக அரைத்துப்பூசி கஸ்தூரி கலந்த எண்ணெயைத் தலையில் தேய்த்து நீராடினார் என சீவக சிந்தாமணி (2:692) குறிப்பிடுகின்றது. இவையன்றி, கூந்தல் மணம்பெற குளிக்கும் நீரில் மணப் பொருட்களான சந்தனம் அகில், கற்பூரம், கஸ்தூரி, குங்குமம் ஆகியவற்றை ஊற வைத்துக் குளித்தனர் என்பதைச் சீவகசிந்தாமணி (பா எண் 623) உரை எடுத்துரைக்கின்றது. வெட்டிவேர், தகரம், சந்தனம், அகில், கஸ்தூரி, கற்பூரம், குங்குமம் ஆகிய ஏழுவகை மணப்பொருள்களைத் தேய்த்துக் குளித்ததைப் பெருங்கதை விளக்குகின்றது (4 16 : 6.8). பழந்தமிழர் தங்கள் உடலில் வாசம் கமழும் எண்ணெய், நெய், மஞ்சள், கஸ்தூரி, வாசனைப் பொருட்களின் கலவை ஆகியவற்றைப் பூசிக் கொண்டார்கள்.

கூந்தலை ஐந்தாகப் பிரித்து கொண்டை, சுருள், குழல், பனிச்சை, முடி என அழகு படுத்தியதை கலித்தொகை குறிப்பிடுகின்றது. கூந்தலை முடித்த பெண்கள் பல்வேறு வகையான மலர்களைக் கூந்தலில் சூடிக்கொண்டனர். ஆண்களும் நீண்ட கூந்தலை வளர்த்து தங்களுடைய குடுமிகளில் பூச்சூடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது. இது குஞ்சி, நவிர், உருளை, குடுமி, சிகை என்று ஐந்து வகையாக விளங்கயதைத் திவாகர நிகண்டு கூறுகிறது.

**கண்ணாடி**

2000 ஆண்டுகளுக்கு முன் முகம் தெரியும்படியான கண்ணாடி போன்ற சாதனம் இருந்து வந்திருக்கிறது என்பது பல இடங்களில் இருந்து கிடைத்த புதை பொருள்களில் இருந்து தெரியவருகிறது. இவை இரும்புத் தகட்டில் பாலிஷ் செய்யப்பட்டவை. எகிப்திய நாட்டின் கல்லறைகளிலும் இம்மாதிரிக் கண்ணாடிகள் காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கியத்தில் கண்ணாடியைப் பயன்படுத்தியதற்குரிய சான்றுகள் உள்ளன. அவர்கள் கண்ணாடியை ‘ஆடி‘ என்றும் ‘பளிங்கு‘ என்றும் குறிப்பிட்டனர்.

**அழகுக்கலை - இன்று**

அழகுக்கலை இன்று அழகியல் துறையாக விரிவடைந்துள்ளது. முடி வெட்டுதல், புதுவிதமாக முடி அலங்காரங்கள் செய்தல், தலைமுடிக்கு நிறமிடுதல், முடியைச் சுருளாக்குதல், சுருண்ட முடியை நீளச்செய்தல்,

கைநகங்கள், கால் நகங்களை அழகு செய்தல், தோல் பராமரிப்பு, பேஷியல், பிளீச்சிங் முதலான முக அலங்காரங்கள், முகம், கை, கால் போன்றவற்றில் இருக்கக் கூடிய தேவையற்ற முடிகளை நீக்குதல் எனப் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாக இது வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் டாட்டூ என்று சொல்லப்படும் பச்சை குத்துதல் கலையும் இன்றைய அழகுக் கலையில் இடம் பிடித்துள்ளது. இன்று நாட்டுப்புற மக்களிடையேயும் பழங்குடி மக்களிடையேயும் பச்சை குத்துதல் பரவலாக இருந்து வருகிறது. இன்று மேலை நாட்டு இளைஞர்களிடம் பச்சை குத்திக் கொள்ளுதல், நாகரிகம் என்று கருதப்பட்டு உடல் முழுவதிலும் பச்சை குத்திக்கொள்ளுதல், பல வண்ணங்களில் பச்சைக் குத்திக் கொள்ளுதல் என்ற நிலை காணப்படுகின்றது. இவ்வாறு பச்சை குத்துதல் பொதுவாக விளையாட்டு வீரர்கள், நடிகைகள் மற்றும் பிரபலமானவர்கள் மத்தியில் அதிகளவில் காணப்படுகிறது. நம் நாட்டில் இன்று நவநாகரிக இளைஞர்களிடம் இக்கலை மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது எனலாம். இது உடல் ஒப்பனையில் ஒரு நிலையான வகையைச் சார்ந்து இறக்கும் வரை உடலினின்றும் மறையாது ஒளிரக்கூடிய அழகுக்கலையாகும்.

மேலும் இன்றைய நவீன உலகில் இயற்கை மற்றும் செயற்கை அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்தி தங்களை அழகுபடுத்திக் கொள்கின்றனர். செயற்கை அழகு சாதனப்பொருட்களில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் வேதியியல் பொருட்கள் கலந்திருப்பதால் பலருக்கு ஒவ்வாமை ஏற்படுகின்றது. மூலிகைகளால் செய்யப்படும் இயற்கை அழகு சாதனப்பொருட்களால் உடலுக்கு எவ்வித கெடுதலும் இல்லை என்பதால் இன்றைய நவ நாகரீக மகளிர் மூலிகை சார்ந்த அழகு சாதனப் பொருட்களை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். மூலிகைகளில் காணப்படும் தாவர வேதிமங்கள் அழகியல் குறைகளை நீக்கி உடலுக்கு அழகைத் தரக்கூடியது என்று சித்த மருத்துவ நூல்கள் எடுத்துரைக்கின்றன. இதில் எலுமிச்சை, கசகசா, செம்பருத்தி, திருநீற்றுப்பச்சிலை, வெள்ளரி, கரிசாலை, நெல்லிக்காய் போன்ற பல மூலிகைகள் அழகியல் குறைபாடுகளான முகப்பரு, முடி உதிர்தல், வறண்ட சருமம் போன்றவற்றை நீக்குவதாக அறிவியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பழந்தமிழரின் ஒப்பனைத்திறன்கள், இன்றைய காலக்கட்டத்தில் ஒப்பனைக்கலையின் வளர்ச்சி, தமிழர்கள் ஒப்பனைக்கு பயன்படுத்திய பொருட்கள் பற்றி இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் மூலம் ஒப்பனைக்கலையில் தமிழர்கள் தனித்து விளங்கினர் என்பது புலனாகின்றது. மேலும் மூலிகைகள் அன்றும் இன்றும் மனிதர்களை அழகுறச்செய்து பக்கவிளைவுகள் இல்லாமல் ஆரோக்கியப் பராமரிப்பாகவும் மாறி வருகின்றது என்பதை அறிய முடிகின்றது.

**மேற்கோள் நூல்கள்**


1. பிங்கல நிகண்டு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி. 1968.
2. கம்ப ராமாயணம், அ.ச.ஞானசம்பந்தன், கம்பன் அறநிலையம், கோயம்புத்தூர். 2004.
3. தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், வெ. வரதராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1986
4. அழகியல் சிந்தனைகள், டாக்டர் வி.சி.சசிவல்லி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -13. முதல் பதிப்பு, 1995
5. சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும், உ.வே.சாமிநாத அய்யர், டாக்டார் உ.வே. சாமிநாத அய்யர் நூல் நிலையம், பத்தாம் பதிப்பு, 2001
6. நாட்டுப்புற வரைதல் கலை, டாக்டர் வே. சரோஜா, காவியா வெளியீடு, பெங்களூர் – 31 முதற்பதிப்பு 1995
7. பதார்த்த குணசிந்தாமணி, எஸ்.பி. ராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்மன இரண்டாம் பதிப்பு 1996.
8. அழகுக்கலை, நஜன் மற்றும் பானு, வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17.
9. கலித்தொகை, நச்சினார்க்கினியார் உரை, கழக வெளியீடு, சென்னை. 1962
10. பெருங்கதை, டாக்டார் உ. வே.சாமிநாத அய்யர்

# அழகியல் நோக்கில் கலித்தொகைக் காட்சிகள்

***மு.சௌந்தரியா,** ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை.

**முன்னுரை**

பழந்தமிழ் இலக்கிய நூலான சங்க இலக்கியங்கள் தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்ப்பனவாக உள்ளன. சங்க இலக்கிய அகநூல்களில் ஒன்றான கலித்தொகை கற்றோரால் போற்றப்படும் ஓர் சிறந்த நூலாகும். இதில் சிறந்த கருத்துக்களும், விழுமிய நோக்கங்களும், உயரிய உணர்ச்சிகளும் பொதிந்துள்ளன. ஒரு கவிஞன் உள்ளதை உள்ளவாறு கூறாமல் தனது கற்பனைத் திறனையும் சேர்த்து வெளிப்படுத்தும் பொழுதே அழகியல் தோன்றுகிறது. கலித்தொகைப் பாடல்களின் வழி அழகியல் காட்சிகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அழகியல்**

அழகியல் என்னும் சொல்லானது ஆங்கிலத்தில் 'Aesthetics' என்று வழங்கப்படுகிறது. செர்மனியைச் சார்ந்த ஏ.டி பௌம்கார்டன் (A.T.Banmgarton) என்பவர்தான் கி.பி.1750 ஆம் ஆண்டு முதன்முதலில் 'Aesthetics' என்ற சொல்லினைப் பயன்படுத்தினார் 'Aesthesis' என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்துதான் 'Aesthetics' என்ற சொல் பிறந்தது. ஓர் இலக்கியத்தில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை விட எப்படிக் கூறப்பட்டுள்ளது என்பதை ஆய்வதே அழகியலின் நோக்கமாகும். இந்த உலகை, இயற்கையை, சமுதாய நிகழ்வுகளை ஐம்புலன் உணர்வுகளின் வழியாக உள்ளவாங்கிக் கொண்டு மறு ஆக்கம் செய்கின்ற படைப்பாக்க நெறியே அழகியல் ஆகும்.

இலக்கியத்திறனாய்வில் அழகியல் அணுகுமுறை (Aesthetic approach) மிகவும் பழமையான ஓர் அணுகுமுறையாகும். தொன்மை காலம் தொட்டு அண்மைக் காலம் வரை அறக்கருத்துக்களையும், ஒழுக்கநெறி உண்மைகளையும் உணர்ச்சியோடு உணர்த்தக் கூடிய இலக்கியங்களே உன்னதமான ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

**அழகியல் குறித்து அறிஞர் கருத்து**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருளை உணர்த்துவதாய் ஓர் இலக்கியம் அல்லது செய்யுள் அமையவேண்டும் என்பது தமிழரின் கருத்து. இதனையே தொல்காப்பியர்,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்** (தொல்.கள.நூ:1)

என்றும்,

**அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே** (தண்டி.பொது.நூ:10)

என்று தண்டியலங்காரமும் கூறுகின்றது. ஆனால் மேலைநாட்டு அறிஞர்கள் கவிதை தனித்தன்மை வாய்ந்ததென்றும் அவற்றின் இன்ப உணர்வை ஒட்டியே தரம் அமைகிறது என்றும் கருதினர். இக்கருத்தைக் கொண்டே 19-ஆம் நூற்றாண்டில் மேனாடுகளில் 'கலை கலைக்காகவே' என்றக் கொள்கை உருவானது. அதன் பிறகு மேனாட்டு அறிஞர்கள் அழகியலை பல வரையறை செய்தனர். அழகியல் கோட்பாட்டில் முன்னோடியாக திகழும் இம்மானுவேல் கான்ட் என்னும் அறிஞர் புலனின்பமும், அழகியலும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை என்றும், அதில் உணர்ந்து திளைப்பதே கவிதையின் பயன் என்றும் தனது மதிப்பீட்டுத் திறனாய்வு நூலில் கூறியுள்ளார். இதன் பிறகு பல கருத்துக்கள் அறிஞர்களிடம் தோன்றின.

**அழகு குறித்த சொற்கள்**

தமிழ்மொழியில் அம், அணி, அழகு, இயல், உரு, ஏர், எழில், கவர்ச்சி, கவின், கோல், கோலம், திரு, நயம், பொலிவு, பொற்பு, மடம், மாண்பு, முருகு, யாணு, வண்ணம்,

வனப்பு முதலிய பல்வேறு சொற்கள் இயற்கை பொருட்கள், கலைப்பொருட்கள் ஆகியவற்றின் அழகினைச் சுட்டுவதற்கு இலக்கியங்களிலும், நிகண்டுகளிலும் பயிலப் பெற்றுள்ளன. குலத்தொகைப் பாடல்களிலும் அழகு குறித்த பல்வேறு சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**'தொல் கவின் தொலைதல் அஞ்சி'** (கலி.பா:1,28)

**'துணிபு நீ செலக் கண்டஆற்றிடை, அம் மரத்து'** (கலி.பா:3,16)

**'இலங்கு ஏர் எல்வளை இறை ஊரும்மே'** (கலி.பா:7,16)

**'அணி கிளர்நெடு வரை அலைக்கும் நின்அகலத்து'** (கலி.பா:18,17)

அழகினை இடத்திற்கு ஏற்றார் போன்று சிறப்பித்துக் கூறும் விதமாக இச்சொற்கள் அமைந்துள்ளன.

**அழகியல் வழி அறச்சிந்தனை**

இளவேனில் காலத்தில் மரங்களில் பூக்கள் பூத்துக் குலுங்கின. தளிர்விட்டுக் கவின் பெறத் தோன்றின. இக்காட்சியானது ஈதலே பண்பாகக் கொண்ட அறநெறி வழி வாழும் சான்றோனின் செல்வம் போன்றது என்பதை,

**ஈதலிற் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய**
**தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்த** (கலி.பா:27,1-2)

என்னும் அடிகளின் மூலம் மரத்தினோடு மனிதனின் குணத்தினை ஒப்பிட்டு உவமை வழியாக அறத்தினை ஆசிரியர் கூறியுள்ளார். அதே போன்று அறநெறிப்படி வாழாதார் இயல்பினை,

**வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்**
**சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி**
**யார்கண்ணும் இகந்து செய்து இசைகெட்டான் இறுதிபோல்**
**வேரொடு மரம் வெம்ப** (கலி.பா:10,1-4)

என்ற பாடலடிகளின் வழியாக பாலைநிலத்தில் உள்ள மரங்கள் இளமையிலேயே வறுமையுடையவன் வாடியது போன்ற தளிர்களை உடையன என்றும், அற்பர்களுக்கு செல்வம் சேர்ந்தால் எப்படி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாதோ அதுபோன்று யாவர்க்கும் நிழல் தராவண்ணம் மரங்கள் கிளைகளின்றி காணப்பட்டன என்றும், அறம் தவறி கெடுதியே செய்பவன் அடியோடு மாய்வது போல ஞாயிறின் கதிரால் மரங்கள் வேரோடு வெம்பின என்று பெருங்கடுங்கோ பாலைநிலத்தின் தன்மையோடு மனித இயல்புகளையும் அழகியல் உணர்வோடு கூறியுள்ளார்.

**வற்றிய பாலையில் வற்றாத அன்பு**

மானிடர்களின் உணர்ச்சி நிலையினை அ∴றிணைப் பொருட்களோடு சாத்திக் கூறும் மரபு தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. இலையற்ற வறண்ட பாலையில் பெண்புறாவின் வெப்பத்துன்பத்தை ஆண்புறா தன் சிறகை வீசிக் குறைப்பதாக,

**இலை தீந்த உலவையால்**
**துன்புறூஉம் தகையவே காடென்றார் அக்காட்டுள்**
**அன்புகொள் மடப்பெடை, அசைஇய வருத்தத்தை**
**மென்சிறக ராலாற்றும் புறவு** (கலி.பா:11,9-12)

இப்பாடலின் மூலம் கூறியுள்ளார். அதேப் போன்று,

**காட்டு இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்**
**தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை** (கலி.பா:11,15-16)

என்னும் பாடலில் நிழலில்லாப் பாலையில் பெண்மானுக்குத் தன்னிழலையே தருகின்ற ஆண்மானின் அன்பினைக் கூறியுள்ளார். வற்றியப் பாலையிலும் வற்றாத அன்புடைய அ∴றிணை உயிர்களைக் காணும் போது தலைவன் தலைவியை நினைத்து ஏங்குவான் என்பதை மறைப்பொருளாக எடுத்தியம்புகிறார்.

**இயற்கையழகில் கடவுளைக் காணுதல்**

இயற்கையின் அழகில் பழந்தமிழர்கள் கடவுளையும் கண்டு மகிழ்ந்தனர் என்பதற்கு சான்றாக இலக்கியங்களில் சில பாடல்கள் உள்ளன. கலித்தொகையிலும் இதுபோன்ற பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டு குன்றுகள் எதிரெதிராக உள்ளன. அவற்றிற்கிடையே

அமைந்துள்ள பள்ளத்தாக்கில் வானோங்கி வளர்ந்த வேங்கை மரத்தில் பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. அக்குன்றுகளிலிருந்து பாய்ந்துவரும் அருவி நீரோ வேங்கை மரத்தின் கிளைகளில் வீழ்கின்றனர். இக்காட்சி செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்கு இரண்டு களிறுகள் இருபுறமும் நின்று தம் துதிக்கையால் நீர் சொரிவது போல் உள்ளது என்பதை,

**கதிர்விரி சுனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சுரல்**
**எதிரெதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து**
**அதிரிசை அருவிதன் அஞ்சினை மிசைவீழ**
**முதிரிணர் ஊழ்கொண்ட முடிவுத்தாள் எரிவேங்கை**
**வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்**
**புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்திக்**
**திருநயந்து இருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்பு** (கலி.பா:44,1-7)

என்னும் பாடலின் வழி இயற்கை அறனில் கடவுளைக் கண்ட கவிஞனின் கற்பனைத்திறனையும், இயற்கை காட்சியையும் அறியமுடிகின்றது.

**எழில்மிகு இதிகாசக் காட்சிகள்**

இதிகாசம் சார்ந்த கதைகள் கலித்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவையாவும் இயற்கை நிகழ்வுகளில் நடக்கக் கூடிய செய்திகளுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன.

**ஐயிரு தலையின் அரக்கர் கோமான்**
**தோடிப்பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்து அம்மலை**
**எடுக்கல் செல்லாது உழப்பவன் போல**
**கோடுபுய்ப் கல்லாது உழக்கும்** (கலி.பா:38,2-9)

இப்பாடலில் பூத்துக் குலுங்கும் வேங்கை மரமானது யானைக்குப் புலி போன்று காட்சியளிக்கிறது. உடனே யானையானது தனது கொம்பினால் மரத்தினைக் குத்துகின்றது. குத்தியவுடன் அதன் கொம்புகள் மரத்தில் பதிந்துவிடுகின்றன. அதனை எடுக்க இயலாமல் யானை ஓலமிடுகின்றது. இக்காட்சியானது பத்துத் தலைகளைக் கொண்ட இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க முயலும் போது மலையின் அடியில் கைகள் மாட்டிக் கொண்டு இராவணன் கதறுவது போல் இருந்தது என்பதை இப்பாடல் விளக்குகிறது.

**தொகுப்புரை**

அழகியல் என்பது அழகிய பொருட்களில் மட்டுமல்ல அதைக் காணும் மனிதனின் இரசனைத் திறனிலும் உள்ளது. பழந்தமிழ் இலக்கியங்கள் யாவும் அழகியல் நோக்கிலே படைக்கப்பட்டுள்ளன. தற்கால இலக்கிய கவிஞர்களுக்கும், பழந்தமிழ் இலக்கிய கவிஞர்களுக்கும் இடையே உள்ள அழகியல் உணர்வானது கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது. சங்க இலக்கிய அகநூல்களின் வழி அழகியல் திறனை மட்டுமல்லாது வாழ்வியல் நெறிமுறைகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. சங்ககால மக்கள் இயற்கையை கடவுளின் காட்சியாகவும் கண்டுள்ளனர்.

# நாலடியார் கூறும் சமூகப் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள்

***க.புருஷோத்தமன்,** M.A., M.Phil., M.Ed., முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி) சென்னை – 600 005. கைப்பேசி எண்: 9629760043.

தமிழ் மொழியானது பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் இருந்து, கால வெள்ளத்தில் கரைந்திடாமல்,பிறிதொரு மொழியின் துணையின்றி இன்றளவும் எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் நீடித்த நிலைத்த தன்மையோடு இருந்துவரும் மொழியாகத் திகழ்கிறது. **'வானம் அளந்தததனைத்தும் அளந்திடும் வண்மொழி'**என்று பாரதியாரால் போற்றப்பட்ட மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. இத்தகைய தமிழ்மொழி காதல், வீரம், கொடை போன்ற வாழ்வியல் விழுமியங்கள் தமிழரின் தனிச்சிறப்பாக இன்றும் போற்றப்படுகின்றன. அவ்வாறு போற்றுவதற்குக் காரணம் அவற்றுள் செயல்படும் அறக்கருத்துக்களே ஆகும். தமிழிலக்கியச் சூழலில் வாழ்வியல் பொருண்மைகளோடு இணைத்துப் பேசப்பட்டு வந்த இவ்வறக்கருத்துக்கள், சில காலங்களில் தனித்த இலக்கிய வகையாகவும் உருப்பெற்றிருக்கின்றன. அவ்வாறு உருபெற்ற அறக்கருத்துகளைக் கூறும் தமிழ் இலக்கியத்தில் நாலடியார் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தில் காணப்படும் முதுமொழி, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் துறைகள் பிற்கால அற நூல்களின் தோற்றத்திற்குத் தோற்றுவாயாய்த் திகழ்கிறது.

### வாழ்வியல் நெறிமுறைகளைக் கட்டமைக்கும் அறம்

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியை – முழு நிறை வடிவமே அறம்" என்று க.த. திருநாவுக்கரசு அறத்திற்கான விளக்கத்தைத் தருகிறார். (திருநாவுக்கரசு. க.த., திருக்குறள் நீதி இலக்கியங்கள், 1971, ப. 23) ஒழுக்க நெறிகளுக்குரிய விதிமுறைகளின் தொகுதி என்று அறத்தினைக் கூறலாம். அறம் என்பது 'அறு' என்ற வினைச்சொல்லின் அடிப்படையில் பிறந்ததாகும். 'அறு' என்பதற்கு அறுத்துச்சொல், வழியை உண்டாக்கு, வழியை உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்று பொருள் கூறலாம்.

அறம் என்பதை பிளேட்டோ அவர்கள் 'இயற்கை நீதி' (Natural Justic) என்றும் அரிஸ்டாட்டில் 'அறவழி' (Ethics) என்றும் அழைக்கிறார். தமிழில் அறம் என்ற சொல் நற்பண்பு அல்லது ஒழுக்கம் எனும் பொருளிலேயே வழங்கப்பட்டு வருகின்றது.

### அறமும் நீதியும்

அறம் என்ற சொல் 'நீதி' என்பதைக் குறிக்கும். நீதி என்பது வடமொழிச் சொல்லாகும். எனவேதான் 'நீதி' என்னும் சொல் பழைய இலக்கியங்களில் எவற்றிலும் காணப்படவில்லை. அற இலக்கியத்தின் மணிமகுடமாகக் கருதப்படும் திருக்குறளில் அறத்தைப் பற்றிக் குறிப்பிடுமிடங்களில் 'நீதி' என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால், அச்சொல்லிற்கு முறை, நயன் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**

**இறையென்று வைக்கப் படும் (குறள். 338)**

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**

**பண்பின் தலைப்பிரியாச் சொல் (குறள். 97)** என்று திருக்குறள் இயம்புகிறது.

**நாலடியார் நூல் உருவாக்கமும் மேன்மைகளும்**

சங்க மருவிய காலமான கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் தமிழகம் வேற்றவரான களப்பிரர் ஆட்சிக்கு ஆட்பட்டது. வேற்றவர்களின் கலாச்சார வரவால் ஒழுக்கமெனும் வாழ்வியல் நெறியில் மாற்றத்தினை ஏற்படுத்தியது. அவ்வகை மாற்றம் குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சார்ந்ததாக ஓங்கியிருத்தல் இயல்பு. இவ்வளர்ச்சி நிலையிலான மாற்றங்களை ஒழுக்கப்பிறழ்வாகக் கருதப்பட்டது. இவ்வொழுக்கச் சீர்குலைவை சமன் செய்யும் பணியில் சமண சமயம் ஈடுபட்டது. அவர்களால் இயற்றப்பட்ட நூலே நாலடியாராகும். இந்நூல் நான்கடியாலான நானூறு பாடல்களைக் கொண்டிருப்பதால் 'நாலடியார்' எனப் பெயர்பெற்றது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது. இப்பகுப்பின் வழி அறத்துப்பாலில் 13 அதிகாரங்களும், பொருட்பாலில் 24 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 3 அதிகாரங்களும் அடக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகார பகுப்பு செய்தவர் பதுமனார் என்னும் சமணமுனிவர் ஆவார். இதே பகுப்பு முறை திருக்குறளிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. திருக்குறளுக்கு அடுத்த நிலையில் அறக்கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறுவது நாலடியாராகும். இந்நூலுக்கு 'வேளாண்வேதம்' என்ற பெயரும் உண்டு.

ஓலைச்சுவடியாக இருந்த திருக்குறள் மூலச்சுவடியைப் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 1812 ல் தஞ்சை நகரம் மலையப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் திருக்குறளும் நாலடியாரும் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. (இளமாறன். பா, பதிப்பும் வாசிப்பும், ப. 31) நாலடியார் வெண்பாக்கள் தோன்றிய காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு, அதாவது, பல்லவ வம்சம் ஆண்ட காலத்தில் வலுவான அதிகார அழுத்தம் தரும் இனமான முத்தரையர்கள் சிறு பிரதேசங்களை ஆண்ட காலத்தில் தோன்றின என்று நாலடியார் காலத்தை 7-ம் நூற்றாண்டு என குறிப்பிடுகிறார். (ராஜ்கௌதமன், தமிழ்ச் சமுகத்தில் அறமும் ஆற்றலும், ப. 58) இந்நூலுக்கு'நாலடியார் உரைவளம்' என்று தஞ்சை சரஸ்வதி மஹால் உரை வெளியிட்டுள்ளது. இந்நூலை ஜி.யு. போப், குப்புசாமி முதலியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர்.

நாலடியாரில் நிலையாமை கருத்துக்கள், உயிர்பலி இடுவதைக் கண்டித்தல், சோதிடத்தை வெறுத்தல், உவமையின் வாயிலாக நெறிப்படுத்துதல், ஆடூஉ முன்னிலை உத்தி, மகடூஉ முன்னிலை உத்திகளைப் பயன்படுத்தி வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கிறன.

**வாழ்வியல் விழுமியங்கள்**

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள், பழமொழிகள் போன்ற உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே 'விழுமியம்' (Value) எனப்படுகிறது. நாலடியாரில் வாழ்வியல் விழுமியங்களை இரு நிலைகளில் காணலாம்.

1. தனி மனித வாழ்வியல் விழுமியங்கள்
2. சமூக பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள்

**1. தனி மனித வாழ்வியல் விழுமியங்கள்**

தனிமனித சிந்தனைதான் பல்வேறு நன்மைகள் நடைபெறுவதற்கும் தீமைகள் நடைபெறுவதற்கும் காரணமாக அமைபவை. மனதில் நற்சிந்தனைகள் தோன்றும் பொழுது நற்செயல்களும் தீய செயல்களை நினைக்கையில் தீமைகளும் நடைபெறுகின்றன. நன்மையும் தீய்மையும் எண்ணத்தின் அடிப்படையிலேயே அமையும் என்பதை,

**தீதும் நன்றும் பிறர்தர வாரா**

**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன(புறம்.92)**

என்ற சங்க இலக்கியப் புறநானூற்று பாடல்வரிகளும் தனிமனித அறக்கருத்துக்களை எடுத்தியம்புகின்றன.

**பிறர்மனை நயவாமை**

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கருத்தை முதன்முதலில் சமூக கட்டுப்பாடாக முன்வைத்தவர் வள்ளுவராவார். அறமும் பொருளும் கண்டவர்கள் பிறருடைய மனைவியை விரும்பி இழிவாக நடந்து கொள்ளமாட்டார்கள் என்பதை

**பிறன்பொருளால் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**

**அறம்பொருள் கண்டார்கண் இல் (குறள்.141)**

என்கிறார் வள்ளுவர். திருமணத்திற்குத் தகுந்த நாளை விசாரித்து, பலரும் அறிவுமாறு மணமுரசு கொட்டித் திருமணம் புரிந்த மனையாள் இருக்க, அதனை விடுத்து பிறர்மனை விரும்புவது இழிந்த செயலாகும் என்பதை,

**பல்லார் அறியப் பறையறைந்து நாள் கேட்டுக்**

**கல்யாணஞ் செய்து கடிபுக்க – மெல்லியற்**

**காதன் மனையாளும் இல்லாளா என்ஒருவன்**

**ஏதின் மனையாளை நோக்கு (நாலடி.86)**

எனும் நாலடியார் பாடல் தனிமனித ஒழுக்கக் கட்டுப்பாட்டை எடுத்தியம்புகிறது.

**"பாம்பின் தலைநக்கி யன்ன துடைத்து"(நாலடி.87)** என்ற பாடல் அயலார் பழிக்க, சுற்றத்தார் வருந்த, அயலான் மனைவியினை விரும்பும் செயல் பாம்பின் தலையை நாக்கினால் தொடுவதைப் போன்ற ஆபத்து நிறைந்தது என்ற தனிமனித கட்டுப்பாட்டை முன்வைக்கிறது. காமமானது இதயத்தின் உள்ளிருந்தே மனித நன்னடத்தையைச் சீர்குலைத்துவிடும் என்பதை,

**அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்**

**வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் - வெம்பிக்**

**கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்**

**அவற்றினும் அஞ்சப் படும் (நாலடி.89)**

என்ற தனிமனித சுயகட்டுப்பாட்டை கூறுகிறது. தன் இல்லத்து மனையாளிடம் விடுத்து பிறன் மனைவியிடத்து போகும்போது எவ்வாறெல்லாம் பயம் ஏற்படுகிறது என்பதை,

**புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்**

**துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமற் காப்பச்சம்**

**எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ**

**உட்கான் பிறன்இல் புகல் (நாலடி.83)** - இப்பாடல் சுட்டுகிறது.

**பொறையுடைமை**

தனிமனித நடத்தை ஒழுக்கமாகப் பொறையுடைமை போற்றப்படுகிறது. மனிதனுக்குப் பொறுமை என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். மனிதனுக்குச் சகிப்புத்தன்மையும் பொறுமையும் இல்லாததால் இன்று வாழ்க்கையில் பல்வேறு சிக்கல்களில் சிக்கி நம்மதியின்றி அலைகின்றான்.

**ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்**

**பொறுக்கும் பொறையே பொறை (நாலடி.65)**

என்ற பாடல் விளக்குகிறது. மேலும், அறிவில்லாதவரிடம் சேர்ந்து பழகுவதையும் பேசுவதையும் தவிர்த்தல் வேண்டும் என்பதை,

**பேதையோடு டியாதும் உரையற்க– பேதை**

**ஊரைக்கிற் சிதைந்துரைக்கும் ஒல்லும் வகையான்**

**வழுக்கிக் கழிதலே நன்று (நாலடி.71)**

என்ற வரிகள் விளக்குகின்றன. ஒரு மனிதன் வாழ்வில் துன்பமின்றி வாழ வேண்டுமாயின் கோபம் விடுத்து, பொறுமை என்னும் குணத்தினைப் பெற வேண்டும் என்பதை,

**அறிவ தறிந்தடக்கி அஞ்சுவ தஞ்சி**

**உறுவ துலகுவப்பச் செய்து – பெறுவதனால்**

**இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்**

**துன்புற்று வாழ்தல் அரிது (நாலடி.74)**

என்ற பாடல் தனிமனித வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. மேலும் தீவினை அச்சம் கொள்ளுதல், அறன் வலியுறுத்தல் போன்ற நிலைகளில் தனிமனித வாழ்வியல் செய்திகளை நாலடியாரில் காணலாம்.

2. **சமூக பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள்**

**'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'**என்ற கலித்தொகை பாடலில் கூறியது போல,ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்களைப் பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். பண்பாடு என்பதற்கு டெய்லர் என்பவர் "மனிதனின் அறிவு, நம்பிக்கைகள், கலைகள், நீதிநெறிகள், பாரம்பரியங்கள், சமூக பழக்க வழக்கங்கள் போன்றவற்றைச் சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் பெறும் முறையாகும்"என்று விளக்குகிறார்.'தனிமரம் கடாத லில்' என்ற பழமொழிக்கு இணங்க மனிதன் தனித்து நின்று சாதிப்பதை விட சமூகத்தோடு சார்ந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறது.

**கல்வியும் சமுதாயமும்**

கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தில் தேங்கிக்கிடக்கும் மூடநம்பிக்கைகளைக் களைய முடியும். மேலும், கல்வியின் மூலமே சமுதாயத்தை உச்சகட்ட வளர்ச்சி கொண்டு செல்ல முடியும். இத்தகைய கல்வியே அழகிற்கெல்லாம் அழகாகத் திகழ்கிறது என்பதை,

**குஞ்சி யழகும் கொடுந்தானை கோட்டழகும்**

**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**

**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**

**கல்வி அழகே அழகு(நாலடி.131)**

எனும் நாலடியார் பாடல் சமுதாய மேம்பாட்டு விழுமியங்களை நயம்பட உரைக்கிறது. சமுதாய ஏற்றத்தாழ்வு களையப்பட வேண்டுமெனில் கீழ்க்குடியிற் பிறந்தவர்களாக இருந்தாலும் கல்வி கற்றறிந்தவராயின் அவர்கள் மேலான குடியினும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்துப் போற்றப்படுவர் என்பதை,

**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**

**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறம்.183)**

எனும் பாடல் வரிகளும் மெய்ப்பிக்கின்றன. இதே கருத்தை நாலடியரின் பாடலும் கூறுகிறது.

**களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்**

**விளைநிலத்த நெல்லின் விழுமிதாக் கொள்வர்**

**கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரைத்**

**தலை நிலத்து வைக்கப்படும் (நாலடி.133)**

எனும் சமுதாயச்சீர்திருத்தக் கருத்துகளை வெளிப்படுத்துகிறது.

**மேன்மக்களும் சமுதாயமும்**

மேன்மக்கள் என்போர் உன்னதமான ஒழுக்க நெறியில் இருந்து சிறிதும் தளராதவர்கள். இத்தகைய மேன்மக்களின் செயல்பாடுகளாக நாலடியார்,

**கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ**

**எள்ளிப் பிறரை இகழ்ந்துரையர் - தள்ளியும்**

**வாயிற்பொய் கூறார் வடுவனு காட்சியர்**

**சாயிற் பரிவ திலர் (நாலடி.157)**

என மேன்மக்களின் செயல்களை உணர்த்துகின்றது. மேன்மக்கள் என்போர் எத்தகைய சூழ்நிலையிலும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்பதை,

**இசையும் எனினும் இசையா தெனினும்**

**வசைதீர எண்ணுவர் சான்றோர் (நாலடி.152**

எனும் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

**குடிப்பிறப்பும் சமுதாயமும்**

உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் எப்பொழுதும் ஒழுக்க நெறியில் இருந்து தவறியதில்லை, என்பதை,

**உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணுங்**

**குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்**

**இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா**

**கோடிப்புற் கறிக்குமோ மற்று. (நாலடி.141)** - இப்பாடல் வரிகள் பசித்துன்பம் மிகுதியாக வந்த போதும் சிங்கம் அருகம்புல்லைத் தின்பதில்லை. அதுபோல உடை கிழிந்து, உடல் மெலிந்து, வறுமையுற்றபோதும் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், தமக்குரிய ஒழுக்கங்களில் இருந்து பிறழமாட்டார்கள் என்ற வாழ்வியல் கருத்தை எடுத்துக் கூறுகின்றது.

**பெரியாரை பிழையாமை**

அறிவில் சிறந்த சான்றோர் நட்பானது மாலைநேரத்து நிழல்போல் மேலும் மேலும் வளரும் தன்மையுடையது என நட்பின் நிலைகளை நாலடியார்,

**அல்கும் நிழல்போல் அகன்றகன்று ஓடுமே**

**தொல்புக ழாளர் தொடர்பு (நாலடி.166)-** என மெய்ப்பிக்கிறது.

**நல்லினம் சேர்தல்**

மனித சமுதாயமானது நற்பண்புடையார் கூட்டத்தைப் பார்த்துச் சேர்ந்து கொள்ளுதல் நன்று. கடுஞ்சொற்களைச் கூறாமலும் வஞ்சனை குணம் தோன்றாமலும் தீயோர் நட்பை வெறுத்து ஒதுக்கி வாழ்தலும் வாழ்வியல் நெறிகளாக நாலடியார் கூறுகிறது.

**நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தங்**

**குலநலத்தால் ஆகுவர் சான்றோர் (நாலடி.179)** - நிலத்தின் வளத்தினால் செழித்து வளரும் நெற்பயிரைப் போல, மக்கள் தாங்கள் சேரும் கூட்டத்தின் சிறப்பால் உயர்வர் என்ற சமுதாய வாழ்வியலை இயம்புகிறது.

**முயற்சியுடைமை (தாளாண்மை கொள்ளுதல்)**

எளிமையான செயல்களைச் செய்து முடிப்பது எளிதாகும். ஆனால், கடுமையான செயல்களை மெய்வருத்தம் செய்து, உறங்காது, இடைவிடாது எடுத்தச் செயலைச் செய்து முடிப்பதே தாளாண்மை கொள்வதாகும் என்று நாலடியார் கூறுகிறது.

**இசையா தெனினும் இயற்றியோர் ஆற்றலால்**

**அசையாது நிற்பதாம் ஆண்மை (நாலடி.194)**

ஒரு செயலை எளிதில் முடியாததாய் இருப்பினும், தளராது முயன்று செய்வதே ஆண்மையாகும் என்று இப்பாடல் வரிகள் ஆண்மகனின் தலையாயப் பண்புகளில் ஒன்று முயற்சியுடைமை என்ற வாழ்வியல் விழுமியத்தை எடுத்துரைக்கிறது.

**நட்புடைமை**

உலகத்து உயிரினங்கள் எவையும் தனிமையை விரும்புவதில்லை. மக்கள் ஒருவரோடு ஒருவர் கூட்டமாக வாழ்வதையே விரும்புகின்றனர். இந்த கூட்டு வாழ்க்கையை நட்பு என அழைப்பர். இந்நட்பையும் சமூக வாழ்வியலை மேம்படுத்த துணை நிற்கின்றது என்று கூறலாம்.

**முந்தை இருந்து நட்டநூர் கொடுப்பின்**

**நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் (நற்.355. 6-7)**

என்று சங்க இலக்கியம், நட்புக்கு இலக்கணம் வகுக்கிறது. நண்பர்களாகப் பழகிய போது ஒருவர் பற்றி மற்றவர் அறிந்த ரகசியத்தைப் பிரிந்த பிறகு வெளிப்படுத்தமாட்டார்கள். அவ்வாறு வெளியிடுவது பெருமைக்குறியதில்லை என்ற கருத்தை,

**பொருந்திய கேண்மையின் மறை உணர்ந்து அம்மறை**

**பிரிந்தக்கால் பிறர்க்கு உரைக்கும் பீடிலார் (கலி.** 25., 23-24)

அடிகள் மூலம் அறியலாம். தம்மை நேசியாதவருடைய இல்லத்தில் உரிய காலத்தில் பொரிக் கறியுணவு அளித்தாலும் அதை வேம்புபோல கருத வேண்டும என்பதை,

**நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து**

**வேளாண்மை வெங்கருணை வேம்பாகும் (நாலடி.207)** என்ற சமூக மேம்பாட்டு வாழ்வியலை நாலடியார் எடுத்துக் கூறுகிறது.

‘வேளாண்வேதம்’ என்று அழைக்கப்படும் நாலடியார் சமண முனிவர்களால் இயற்றப்பட்டாலும் மனிதனை நெறிபடுத்தும் முறையில் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் மிகையாக தனிமனித வாழ்வியலையும் சமூகப் பண்பாட்டு வாழ்வியலையும் கொண்டு திகழ்கிறது. எனவே, உலக பொதுமை வாழ்வியல் விழுமியங்கள் உருவாகத் துணைநின்று, சமூகம் முழுமையும் வழிநடத்தும் ஆளுமைப் பண்புடன் நாலடியார் திகழ்கிறது என்று உய்த்துணரலாம்.

# தமிழரின் வாழ்வியல் பண்பாடு

***முனைவர் இரா.திலகம்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02

இலக்கியம் மக்கள் தம் வாழ்க்கையில் அன்றாடம் கடைபிடித்தப் பழக்க வழக்கத்தை எடுத்துக் கூறுகிறது. உலகம் தோன்றிய போது மனிதன் வெறும் உணர்வுகளுடன் விளங்கினான். பிறகு மனிதனுக்கு அறிவை உணரும் தன்மையும் உள்ளத்தில் எழுந்தபோது பண்பு இன்றியமையாத ஒன்றாகக் கருதப்பட்டது. எனவே பண்புணர்வு மட்டுமே மனிதனை மனிதனாக இருக்கச் செய்யும் ஆற்றல் உடையதாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவன் வாழ்வைச் செம்மைப்படுத்தவும் வழி வகுக்குகிறது என்பதை தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**பண்பாடு:**

பண்பாடு என்பது ஒரு கூட்டுச் சொல். பண்புடைமை, பண்புடையார் என்ற சொல் வழக்கில் உண்டு, ஆனால் "பண்பாடு" என்ற சொல் இல்லை. செம்மைப்படுத்தப்பட்ட மானிட உணர்வுகளே "பண்பாடு" என்ற சொல்லின் பொருள் தரும்.

**"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்றும்**

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**

**மண்புக்கு மாய்வது மன்" குறள் - 996**

என்ற வரிகள் பண்புடையவர்களால் இவ்வுலகம் இயங்குகிறது. எல்லாருடைய இயல்புகளையும் அறிந்து, ஒத்து நன்னெறியால் ஒழுகுதலே பண்பு எனப்படுகிறது. 'பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறும் போது மக்களது அறிவு நலம், கருத்து நலம், குண நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம், வாழ்க்கை நலம், முதலியன மேன்மேலும் திருந்தி வரும் நிலையே பண்பாடு" என்பார். இவ்வாறு அறிஞர்கள் பலர் பண்பாடு என்பதற்கு பல விளக்கங்களைப் கூறியிருக்கிறார்கள்.

தமிழினத்தின் பண்பாடு என்பது வரலாற்று பின்னனி கொண்டது. பண்டைய எகிப்து, பாபிலோனியா, கீரிஸ், உரோம் ஆகிய நாடுகள் பண்பாட்டில் சிறந்து விளங்கிய அக்காலத்திலேயே தமிழகம் தனிப்பட்ட உயர்ந்த பண்பாட்டினைக் கொண்டு விளங்கியது.

**"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே**

**வாளோடு முன் தோன்றி மூத்த குடி"**
**(பு.பொ.வெ.மா)**

என்ற வரிகள் தமிழ்க்குடி மக்கள் வழிவழியாக வாழ்ந்த அனுபவம் தெளிவு மற்றும் பண்பட்ட நிலையை அடைந்து இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

**பழமொழியும் பண்பாடும்**

ஒரு இனத்தின் பண்பாட்டை உணர்ந்து கொள்ள பயன்படும் கருவூலங்கள் அன்றாடம் அவர்தம் வாழ்வில் பயன்படுத்தும் பழமொழிகள் ஆகும். பழமொழியே மக்கள் அனுபவத்தின் திரண்டசாறு என்பதை தமிழ்ப்பழ மொழிகளின் சிறப்பை உணர்ந்த முன்றுறை அரையனார் நானூறு பழமொழிகளைத் தொகுத்துச் செய்யுள்களாக ஆக்கினார்.

பழம்பேரிலக்கணமாம் தொல்காப்பியம் நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும் விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை முடித்தற்கு வருவது பழமொழி என்கிறது. மக்களின் பேச்சிலே கலந்து பழகி வரும் செறிவுமிக்க அறிவுவாக்கியமே பழமொழி என்கிறார் ஆர்ச்சர் டெய்லர். ஆக்சுபோர்டு அகராதி வாழ்வை ஊன்றிக் கவனித்து

உணர்ந்த உண்மைகளின் துணுக்குகள் என்கிறது. திருமணம் என்பது வாழ்க்கையின் உண்மையான தொடக்கமாகும். இத்தகைய உறவுமுறையில் திருமண உறவு, கணவன் உறவு போன்ற பல்வேறு கூறுகளையும் பழமொழிகள் கொண்டே உணர்கிறோம். பெண்ணுக்கு அழகில்லாவிட்டாலும் பண்பு இருக்க வேண்டும் என்று கருதியதால் தான் நற்பண்பு நிறைந்த குடும்பத்தையே விரும்பினர். ஒரு குழந்தையின் நற்பண்பு தாயின் வளர்ப்பு முறையில் அமைந்துள்ளது. எனவே தாயைப் போலப் பிள்ளை நூலைப் போல சேலை, தாயைக் கிணற்றடியில் பார்த்தால் பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டாம் என்றனர். என்பதிலிருந்து பழமொழி தமிழரின் வாழ்வில் இரண்டற கலந்திருக்கும் சிறப்பை உணர்த்துகின்றது.

**நாகரிகம் - பண்பாடு**

நாகரிகம் என்பது மானுடத்தின் புறத்தோற்றத்தையும், பண்பாடு என்பது மானிடத்தின் அகத்தோற்றத்தையும் விளக்கிக் கூறுகிறது. இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பாட்டுக் கூறுகளே முக்கியமானவை ஆகும். திராவிட நாகரிகத்தின் செல்வாக்கு சமயம், மொழி, கலைகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி நிற்கிறது. ஆரியரின் வருகைக்கு முன்பே இந்தியா முழுவதும் திராவிடர்கள் வாழ்ந்தனர். மொகஞ்சதாரோ, ஆரப்பா ஆகிய இடங்களில் மிகவுயர்ந்த நாகரித்தைப் படைத்திருந்தனர். ஆரிய மொழியாம் வடமொழியின் சொற்களஞ்சியத்தில் திராவிட வேர்ச்சொற்கள் உள்ளன. வடமொழி சமய மொழியாக உருவான போது இந்தியா முழுவதும் அம்மொழி கற்றவர் மொழியாக மாறியதால் தமிழ் நாட்டறிஞர் பலர் வடமொழியில் தமது கருத்தை வெளிப்படுத்தினர். அர்த்த சாஸ்திரத்தை எழுதிய சாணக்கியர் காஞ்சியைச் சேர்ந்தவர். நாட்டிய சாத்திரத்தை எழுதிய பரத முனிவர் தென்னாட்டவர். பல மொழி பரிமாற்றத்தில் இவ்வாறு தமிழ் அறிஞர்களின் பங்கு இடம் பெற்று இருந்திருக்கின்றது என்பது புலப்படுகிறது.

**தமிழர் கலைகள்**

இந்திய நாகரிகத்தில் இசை, கூத்து, சிற்பம், கட்டிடம் ஆகிய கலைகள் சிறந்து விளங்கியது. இக்கலைகளில் தமிழர் உயர்நிலை அடைந்துள்ளனர். தமிழிசைக்கு ஈடாக வேறொரு இசையைக் கூற முடியாது. தமிழ் நாட்டு யாழிலிருந்தே வீணையும் தோன்றியது "மனிதனுடைய சரித்திரத்தில் கடந்த 1200 ஆண்டுகட்கு முன்பு எந்த வித சாத்ரீய சங்கீதமும் தேசங்களில் இல்லை" என்பார் பேராசிரியர்.சாம்பமூர்த்தி என்பதன் மூலம் இலக்கியங்கள் தமிழர் கலைகளின் மேன்மையை விளக்கி கூறுகின்றது.

**கூத்தும் சிற்பமும்**

நாட்டியக் கலையில் தமிழர் பெற்றிருந்த சிறப்பைத் தமிழ்நாட்டுச் சிற்பங்களும் ஓவியங்களுமே காட்டும். கல்லிலும் உலோகத்திலும் நாட்டிய கலைகளை நளினத்துடன் காட்டியுள்ளனர். ஆண்டவனைக் கூத்து வடிவில் கண்டவர் தமிழர். இந்திய நாட்டில் பரத நாட்டியம் தமிழரின் கொடையே, பரத சாத்திரத்தில் ஆசிரியர் பரத முனிவர் தென்னிந்தியாவை சேர்ந்தவர். இன்றும் இக்கலையைக் கற்றுக் கொடுக்கும் நாட்டுவானர்கள் தமிழ் நாட்டிலேயே மிகுதியாக இருந்துள்ளனர் என்பதிலிருந்து கூத்தும் சிறப்பமும் மக்களின் வாழ்வில் கலந்திருக்கும் தன்மையை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகிறது.

**கட்டிடக்கலை**

இந்தியாவிலேயே தமிழர் தான் கட்டிடக் கலையில் சிறந்து விளங்குகின்றனர். பிரமிடுபோல வானளாவி நிற்கும் கோபுரங்களைத் திராவிடக் கலைவாணி எனச் சிற்பக்கலைகள் கூறுகின்றன. பல்லவரும், பாண்டியரும், சோழரும், நாயக்கரும் அமைத்த கோயில்களைக் கொண்டே கட்டிடக் கலைச் சிறப்பினைக் காண முடிகிறது. "இந்தியக் கோயில் வகையில் தெற்கிலுள்ள பெருங் கோட்டங்களின் முழுநிறை பெருமைக்கும் அகல் விரிவிற்கும் ஈடாக வட இந்தியாவில் எதுவும் கிடையாது" என்கிறார் சிலேட்டர். எனவே இலக்கயங்கள் கட்டிடக்கலையின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றது.

**நெறிமுறைகள்**

தமிழப் பண்பாட்டில் ஆங்கில ஆட்சியின் செல்வாக்கும் இடம் பெற்றிருந்தது. வந்தது சமூகம், பொருளாதாரம், சமயம், கல்வி போன்ற அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி இருந்தது. நாட்டின் முதன்மைத் தலைமைத் தொழிலான உழவு செழிக்கும் வண்ணம் மேட்டூர், பாபநாசம் அணைகள் கட்டப்பட்டதோடு ஆறுகளும், கால்வாய்களும் சீர்மை பெற்றன. காவிரி பகுதியில் மேலணையும் கீழணையும் கட்டப்பட்டன. இலக்கியங்கள் இவ்வுலகில் பண்பாடு நிறைந்த வாழ்வு வாழ விரும்புவோருக்கும் நெறிமுறைகளை விளக்கிக் கூறி இருக்கின்றது.

தமிழர் தங்கள் செயல்பாடுகள் மூலம் சமூகத்தின் பண்பாட்டு உயர்வுக்கு மேன்மைக்கும் ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்கா என்பதை தம் படைப்புகள் வாயிலாக படைத்து காட்டியுள்ளனர். இவ்விலக்கியங்களே உலக ஒற்றுமைக்கும் மனித அமைதிக்கும் வாழ்க்கைச் செம்மைக்கும் சான்றாக அமைகிறது. இத்தகைய மேன்மைமிக்க இலக்கியங்களையும் கலைகளையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு வரும் தம் கடமைகளைப் பொறுப்புகளை முறைப்படி மன ஈடுபாட்டோடு செம்மையாகச் செய்து முடிக்கும் போது பண்பாடு மேன்மேலும் உயர்ந்து நிலைத்து வாழும் என்பது திண்ணம்.


புலவர் நாராயணசாமி.,- திருக்குறள் உரை,

பொ.மா.பழனிசாமி.,- இலக்கியக் கதிர்

ஆ.தட்சிணாமூர்த்தி.,- தமிழர் நாகரிகமும் பண்பாடும்.

# புறநானூற்று புலவர்களின் பண்பாட்டுக் கூறுகள்

***கு.சீனிவாசன்,** எம்.ஏ,எம்.ஃ.பில்,எம்.எட்., முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் உலகியல் வாழ்க்கை பற்றி அறியும் கருவூலமாகவும், ஒப்பு இல்லாத உயர்ந்த இலக்கியமாகவும் எட்டுத் தொகையுள் ஒரு நூலாகிய புறநானூறுஎன்ற புறநூல் விளங்குவதை காணமுடிகிறது. மேலும் அரசியல், கல்வி, அறம், அறிவியல் ஆகிய துறைகளிலும் இலக்கியம், இசை போன்ற நுண்கலைகளிலும் அன்றைய தமிழரின் நிலை பற்றி அறியவும் அன்பு அருள், நட்பு, வீரம், மானம், ஈகம் (தியாகம்), ஈகை போன்ற பண்புகளில் அக்காலத் தமிழர் சிறந்து விளங்கியதை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. புறநானூற்று புலவர் பெருமக்கள் பண்பாட்டின் பெட்டகமாக இருந்துள்ளனர். இவர்கள் இத்தமிழ்ச் சமுதாயத்திற்கு எண்ணிலடங்கா அறிவுக் கொடையினை அளித்துவிட்டு சென்றுள்ளனர். இவர்கள் கல்வியில் சிறந்த கவிவாணர்களாகத் திகழ்ந்துள்ளனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த நோக்குடையவர்களாய்ப் பல ஊர்களுக்குச் சென்று தம் கவித்திறனை வெளிபடுத்தினர். மேலும் அரசர்கள் முன்னிலையில் கண்டித்தல், அறிவுறுத்தல் என நேர்முகமாக நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறித்தும் அப்பாடல்களின் மூலம் கூறியுள்ளனர். இதன் மூலம் அக்காலப்புலவர்கள் அரசரைப் பாடி பரிசில் பெறுவதையே தொழிலாகக் கொள்ளவில்லை. அரசர்கள் தவறுசெய்யும் போது கண்டித்து, அறநெறிப்படுத்தும் தன்னலமற்ற பண்பாளர்களாகவும் இருந்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இத்தகைய சிறப்பியல்புகளுடைய அப்புலவர்களின் உயர்பண்பாட்டினை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பண்பாடு**

பண்படுதல் என்றால் சீர்படுத்தல் அல்லது திருத்தல் எனப்பொருள் படும். நிலத்தைப் பண்படுத்தல் என்றால் நிலத்தை பயிர்செய்யத்தக்கவாறு சீர்படுத்தலாம். ஆகவே மனிதர் பண்படுவது பண்பாடு ஆகும். ஆகவே தமிழில் பண்பு என்பது ஒருவரில் காணப்படும் பண்படுத்தப்பட்ட நல்ல தன்மைகளையும், இயல்பு என்பது இயற்கையாகவே காணப்படுவனவற்றினையும் குறிக்கும். மேலும் "பண்பாடு என்பது ஒரு முறையான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்தி கொள்ளும் ஓர் அமைப்பு. அல்லது மன அளவிலான விதி"1 எனக் கருத்தியலாளர்கள் ஒரு பொது விளக்கம் தருகின்றனர். இவ்விதிகளை உருவாக்குவதும், விதிகளை மாற்றுவதும் தகவமைப்புகேற்ப மாறிக்கொண்டு தான் இருக்கிறது. இம்மாற்றங்களையே பண்பாட்டு மாற்றம் என்று குறிப்பிடுகின்றோம். மேலும் பண்பாடு என்பதற்கு இணையான culture என்ற ஆங்கிலச்சொல் cultura என்ற இலத்தீன் சொல்லின் திரிபு ஆகும்..பண்பு என்னும் சொல் இலக்கணத்தில் 'பொருள்களின் தன்மை' இயல்பு குணம் ஆகியவற்றைக் குறிக்க வழங்கிய பெயர். நல்லியல்புகள் மட்டும் அன்றிக் கெட்ட இயல்புகளையும் குறிக்கும். (நன்னூல், பதவியல்) உரிச்சொல் பண்பைக் குறித்து அமைவது இலக்கணம். காலப்போக்கில் பண் எனும் சொல் நல்ல இயல்புகளை மட்டுமே குறிக்க பயன்படுவதாயிற்று. பண்பு, பண்புடைமை, மக்கட்பண்பு, என்று திருவள்ளுவர் பயன்படுத்தும் சொல்லாட்சிகளும், சங்க இலக்கியத்திலும் பிற இலக்கியங்களில் வரும் பண்பு குறித்த சொல்லாட்சிகள் இப்பொருளிளேயே ஆளப்பட்டுள்ளன. அன்பு, நீதி, அறம், பிறர்க்குப் பயன்படுதல், பிறரோடு இணக்கமாக வாழ்தல், உலகம்வாழ உதவுதல், போன்றவற்றை பண்புடைமையின் அடையாளமாகக் காட்டுகிறார் திருவள்ளுவர்,

**"பண்புடையாரப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**

**மண்புக்கு மாய்வது மன்"2**

பண்புடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகிறது. அ∴து இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்துபோகும்என்று குறள் குறிப்பிடுவது சுட்டத்தக்கது. மேலும் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் பண்பாடு என்ற சொல் இடம்பெறவில்லை. ஆனால் அதில் பண்பட்டவன்,பண்பு ஆகிய சொற்கள் உள்ளன. பண்பட்ட கல்வியறிவும் அனுபவமும் உள்ளவன் பண்படு – சீர்திருந்துதல், பண்பாளன் - குணவான், பண்பு – பிறர் இயல்பை அறிந்தும் நடக்கும் தன்மை என விளக்கமும் உள்ளது. யாழ்ப்பாணத் தமிழகராதியில்பண்படுதல் என்பதற்குச் சீர்படுதல் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் பண்பாடு என்பதற்கு செவ்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தண்மை,அண்மை, அமைதி, இயல்பு ஆகிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒருவர் நமக்கு செய்த உதவியை எந்நாளும் மறக்க கூடாது. இதுவே நன்றிமறவாப் பண்பாகும். இப்பண்பினை அனைத்து இலக்கியங்களும் வலியுறுத்தியுள்ளன. நாம் நல்லவர் ஒருவருக்கு உதவி செய்தால் கல்மேல் எழுதுப்பட்ட எழுத்துக்களைப் போன்று அவ்வுதவியை அவர் என்றும் மறவாது இருப்பர். ஆனால், தீயோருக்குச் செய்கின்ற உதவி நீர் மேல் எழுதப்பட்ட எழுத்துக்களைப் போன்று உடனே மறைந்து விடுவது போல், நாம் செய்கின்ற உதவியையும் உடனே மறந்து விடுவர் என்பதை,

**"நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்**

**கல்மேல் எழுத்துப் போல் காணுமே – அல்லாத**

**ஈரமில்லா நெஞ்சத்தாருக்கு ஈந்த உபகாரம்**

**நீர் மேல் எழுத்திற்கு நேர்"3**

என்று மூதுரை குறிப்பிட்டுள்ளது. கள்ளில் ஆத்திரையனார் என்ற புலவரும் அத்தகைய நன்றி மறவாத புலவராக இருந்துள்ளார். ஆதநுங்கன் என்னும் குறுநிலமன்னனிடம் தன் நன்றியை வெளிப்படுத்திய திறத்தை,

**"எந்தை! வாழி ஆதனுங்க! என்**

**நெஞ்சம் திறப்போர் நிற் காண்குவரே**

**நின் யான் மறப்பின், மறக்கும் காலை,**

**என் உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்,**

**என்னியான் மறப்பின், மறக்குவென் வென் வேல்**

**விண் பொரு நெடுங் குடைக் கொடித் தேர் மோரியர்**

**பலர் புரவு எதிர்ந்த அறத் துறை நின்னே." (புறம் -175)**

நாள்தோறும் பாதுகாக்கும் அறத்துறையாக விளங்குபவனே! ஆதனுங்கனே! என் தந்தையாக விளங்குபவனே! நீ வாழ்க! உலவிடைக்கழியில் பூத்திருக்கும் மலர் மண்டிலம் போல வாழ்க.என் நெஞ்சைத் திறந்து பார்ப்பவர்கள் உன்னைத்தான் பார்ப்பார்கள். உன்னை நான் மறந்தால் அப்போது என் உடம்பிலிருந்து உயிர் பிரிந்துவிடும். உயிர் பிரியும்போதும் என்னை மறப்பேனே ஒழிய உன்னை மறக்கமாட்டேன். உலக-இடைக்கழி மலர்வாய் மண்டிலம் – மோரியர் என்று தமிழர் குறிப்பிடும் மௌரியர் தேர்ப்படையுடன் தெற்கு நோக்கி வந்தனர். அப்போது அவர்களின் தேர்ச் சக்கரம் உருள்வதற்காக வழி உண்டாக்கப்பட்டது. வளைந்து வளைந்து மண்டிலமாக அந்த வழி உண்டாக்கப்பட்டிருந்தது. அது மலர்ந்திருக்கும் வழியாக 'மலர் வாயாக' அமைந்திருந்தது. அங்கு வழியமைத்தவர்களுக்கு உணவு வழங்கிய அறத்துறை (அறச்சாலை) போல ஆதனுங்கனும் விளங்கினான். இதன் மூலம் நன்றி மறவாப்பண்பு புலனாகிறது. இதனையே வள்ளுவர்,

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"4**

என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலால், எந்த அறத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து நன்றியாகிய அறத்தை அழித்தவனுக்கு தப்பிப் பிழைக்கவழி இல்லை என்பதை உணர்ந்து சங்கப்புலவர் நன்றி மறவாப்பண்போடு வாழ்ந்துள்ளார் என்பது தெரிகிறது. மேலும் சுயநலமின்றி பொதுநலத்தோடு எண்ணற்ற புலவர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்துள்ளனர். இவர்கள் தன்னலம் கருதாது

பிறர்நலம் கருதும் பண்புகளோடு இருந்துள்ளனர். அதனால் தான் மன்னர்களிடம் தான் பெற்ற பரிசுப் பொருட்களை தாமே அனுபவிக்காமல் தன்னை நாடி வரும் இரவலர்க்கும் கொடுத்து உதவும் பண்பாளராக விளங்கியுள்ளனர்.இதனை,

**"நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்,**

**பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்,**

**கடும்பின் கடும் பசி தீர யாழ நின்**

**நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்,**

**இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,**

**வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்**

**எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே!**

**பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்**

**திருந்து வேல் குமணன் நல்கிய வளனே"** (புறம் - 163)

என்ற பாடல் வரிகளில் அறிந்து கொள்ளமுடிகிறது. பெருஞ்சித்தனார் என்ற புலவர், தான் வறிய நிலையில் வாட்டமுற்று இருந்தாலும் மனை கிழவோயே! (மனைக்கு உரியவளே)இவை முதிரமலை அரசன் குமணன் கொடுத்த செல்வங்கள். இவற்றை எல்லாருக்கும் கொடு. உன்னை விரும்பி வாழ்பவர்களுக்கும், நீ யாரை விரும்பி வாழ்கிறாயோ அவர்களுக்கும், உன்னைப் பின்பற்றிக் கற்றுக்கொண்டு வாழும் உன் சுற்றத்தார்களுக்கும், உனக்கும் உன் சுற்றத்தார்களுக்கும் பசி போக்கக் கடனாகக் கொடுத்து உதவியவர்களுக்கும், இன்னாருக்கு என்று கணக்குப் பார்க்காமல், என்னை எதும் கேட்காமல், எல்லாருக்கும் வழங்குவாயாக என்று கூறியுள்ளார். இதன் மூலம் புலவர்கள் பிறருடைய துன்பத்தைப் போக்கும் நல்லுள்ளம் கொண்டோராய் விளங்கியுள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

மேலும் சங்ககால புலவர் பெருமக்கள் வறுமையிலும் செம்மையோடும் நற்பண்புகளோடு வாழ்ந்துள்ளனர். வறுமை என்பது மிகக் கொடுமையானதாகும். அதனால் தான் ஔவையார் "கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது" என்று பாடியுள்ளார். அத்தகைய வறுமையானச் சூழலிலும் உணவின்றி வருந்தும் தன் குடும்பத்தாரின் வாடியநிலையைக் கண்டு புலவர்கள் மனம் வருந்தியுள்ளனர். பசியால்,

**"பிறந்த குலம் மாயும் பேராண்மை மாயும்**

**சிறந்த தம் கல்வியும் மாயும்"5**

என்று நாலடியாரும் கூறுகிறது. இத்தகைய வறுமை நிலையைப் புலவர்கள் தாங்கிக் கொண்டு இவர்களுக்கேயுரிய சிறப்புத் தன்மை மாறாது வாழும் பண்புடன் விளங்கியுள்ளனர். பெருஞ்சித்தனார் என்னும் புலவர் தன்னுடைய வறுமையைப் பற்றிக் குறிப்பிடும்போது,

**"வாழும் நாளோடு யாண்டு பல உண்மையின்,**

**தீர்தல் செல்லாது, என் உயிர் எனப் பல புலந்து,**

**கோல் காலாகக் குறும் பல ஒதுங்கி,**

**நூல் விரித்தன்ன கதுப்பினள், கண் துயின்று,**

**முன்றில் போகா முதிர்வினள் யாயும்"** (புறம் - 159 : 1-5)

தாய் –'மனிதன் வாழும் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்கிறேனே் என் உயிர் இன்னும் செல்லவில்லையே' என்று நொந்துகொண்டு, நூல் விரிந்து கிடப்பது போன்ற வெள்ளை-மயிருடன், தடி ஊன்றி நடந்தும் முற்றத்துக்குக்கூடப் போகமுடியாதவளாக இருக்கிறாள்.என்று தன்னுடைய தாயின் நிலையையும்,

**"பசந்த மேனியொடு படர் அட வருந்தி,**

**மருங்கில் கொண்ட பல் குறுமாக்கள்**

**பிசைந்து தின, வாடிய முலையள், பெரிது அழிந்து,**

**குப்பைக் கீரை கொய்கண் அகைத்த**

**முற்றா இளந் தளிர் கொய்துகொண்டு, உப்பு இன்று,**

**நீர் உலைஆக ஏற்றி, மோர் இன்று,"** (புறம் - 159 : 6-11 )

என்ற அடிகளில்மனைவி – பச்சைக் கைக்குழந்தையுடன் பசியோடு வருந்துகிறாள். குழந்தை பிசைந்து பால் உண்ணும் முலை வாடிக் கிடக்கிறது. குப்பைக்கீரை முற்றாமுன் பறித்துவந்து நீர் உலையில் போட்டு உப்பு இல்லாமல், மோர் இல்லாமல், சோறு இல்லாமல் குழந்தையின் பாலுக்காக உண்கிறாள். மாற்றுடை இல்லாமையால் தன் கிழிந்த உடையை அழுக்கோடு உடுத்திக்கொண்டிருக்கிறாள் என்று தன்மனைவி மக்களின் நிலையை எடுத்துக் கூறி அத்தகைய சூழலிலும் முகம் மாறுபட்டுத் தரும் பரிசிலை நான் ஏற்க மாட்டேன். அன்போடும், விருப்பத்தோடும் தருகின்ற குன்றிமணி அளவு பரிசு கொடுப்பினும் அதனை நான் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன் என்று கூறியதை,

**"உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்,**

**தவிர்ந்து விடு பரிசில் கொள்ளலென் உவந்து, நீ**

**இன்புற விடுதிஆயின், சிறிது**

**குன்றியும் கொள்வல், கூர் வேல் குமண!"** (புறம் - 159 : 22-25)

என்ற பாடல் வரி உணர்த்துகின்றது. இதன் மூலம் வறுமையிலும் புலவர் பெருமக்கள் செம்மையோடும் நற்பண்புகளோடும் விளங்கியுள்ள பான்மையை அறியமுடிகிறது.மேலும் நிரின் இன்றியமையாத தேவையை அக்கால புலவர் பெருமக்கள்பெரிதும் உணர்ந்து இருந்தனர். நீர் இல்லாவிட்டால் இவ்வுலகில் உள்ள எந்த உயிரும் உயிர்வாழ முடியாது. இதனை இவ்வுலகிற்கு வள்ளுவனார்,**"நீர் இன்றி அமையாது உலகு எனின்"** என்று உணர்த்தியுள்ளார். குடபுலவியனார் என்ற புலவர் பாண்டிய நெடுஞ்செழியனிடம்,

**"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்**

**பரந்துபட்ட வியல் ஞாலம்**

…………………………….

…………………………….

**நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசினோரே**

…………………………………….(புறம் - 18)

கடலால் சூழப்பட்டுப் பரந்துகிடக்கும் உலகை முயற்சி வலிமையால் தனதாக்கிக்கொண்டு புகழை நிலைநாட்டிய திறனாளிகளில் யானை போன்றவனே!ஒன்று பத்து என்று கோடி வரை அடுக்கிய பெருமை உடையதாக உன் வாழ்நாள் அமையட்டும். நீரில் தாழ்ந்திருக்கும் காஞ்சிப் பூவை வாளைமீன் கவ்வுதலும், ஆரல், வரால், செந்நிறக் கெடிறு மீன்கள் வளர்வதுமான அகழியும், வான் தோயும் மதிலும் கொண்டது உன் வளநகர். இறந்தபின் செல்லும் உலகத்துச் செல்வத்தை விரும்பினாலும், அரசர்களையெல்லாம் வென்று தனியொருவனாகச் சிறப்புப் பெற விரும்பினாலும், சிறந்த உலகின் புகழை நிலைநிறுத்திக்கொள்ள விரும்பினாலும் ஒரு தகுதி வேண்டும். அதைச் சொல்கிறேன் கேள்!அதற்குத் தகுதி உள்ளவன் நீ. உடம்பு நீர் இல்லாமல் வாழமுடியாது. உடம்புக்கு உணவு வழங்கியவர் உயிர் தந்தவராக மதிக்கப்படுவர். உடம்பு உணவின் பிண்டம். உணவு என்பது நிலம் நீர் ஆகியவற்றின் கொடை. நீரையும் நிலத்தையும் சேர்த்து வைத்தவர் உடம்பையும் உயிரையும் படைத்தவர் ஆவார். விதைத்துவிட்டு வான்மழையை எதிர்நோக்கும் புன்செய் நிலமாயின் அரசன் முயற்சிக்குப் பயன்படாது. நான் சொல்வதை ஏளனம் செய்யாமல் நிலம் நெளிந்து பள்ளமாய்க் கிடக்கும் இடங்களிலெல்லாம் நீர்நிலை பெருகும்படி தடுத்து

நிறுத்தியவர் இவ்வுலகில் தன்னை நிலைநிறுத்திக்கொண்டவர் ஆவர். அவ்வாறு நீரைத் தடுத்து நிறுத்தாதவர் இவ்வுலகில் பதியாதவர் ஆவார்.எனவேநீ நீர்நிலைகளைப் பெருகச் செய்து உன்னை இவ் உலகில் நிலைநிறுத்திக்கொள்க என்று புலவர் பாண்டியனிடம் அறிவுறுத்தினார். இதன் மூலம் உணவின் இன்றியமையாமையையும், அதனை விளைவிக்க நீர் நிலைகளை பெருக்க வேண்டியது அரசனது கடமையையும் எடுத்துரைத்துள்ளார். மக்களின் நல்வாழ்விற்குத் துணைபுரியும் பொதுநலப்பண்புடன் விளங்கும் நல்லுள்ளமும் சங்கப்புலவர்களிடம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

**நிறைவாக**

“அறிவு என்னும் ஒன்றே மக்கட் பிறப்பின் சிறப்பியல்பு மக்களாய்ப் பிறந்தவர் அறிவைத்தேடி உழைத்தல் வேண்டும். அறிவை பிறருக்கு அளித்தல் வேண்டும். அறிவின் பயனால் இன்புறல் வேண்டும். இதுவே மக்களின் வாழ்வு. இவ்வாழ்வில் சீர்பெற வாழ்பவரே புலவர் பெருமக்கள்”6 என்று மு.வரதராசன் தமிழ் நெஞ்சம் என்னும் நூலில் புலவர்களின் இயல்பைக் குறித்து காட்டியுள்ளார். அவருடைய கூற்றிற்கேற்ப சங்ககாலப்புலவர் தம் அறிவு திறத்தால் அரசர்களுக்கும், மக்களுக்கும் தேவையான அறிவுரைகளை வழங்கி நல்வழிபடுத்தியுள்ளனர். மக்கள் வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக நற்குண செயல்களில் சிறந்துள்ளனர். மேலும் தன்மானத்தை உயிரென மதித்து செய்ந்நன்றி மறவாப்பண்பு உடையவராகவும் திகழ்ந்துள்ளனர். வறுமையிலும் செம்மையோடு வாழ்ந்துள்ளனர். மேலும் வேந்தர்களுக்கு அன்பின் ஆழத்தையும் அருளின் ஆற்றலையும் உணர்த்தி, அறநெறியில் பற்றுக்கொள்ளச் செய்த பண்பாளர்களாகவும் புலவர்கள் திகழ்ந்துள்ளனர்.

# உவமையால் உயர்ந்திருக்கும் கபிலர்

***முனைவர் மு.ராஜகுமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருட்டினகிரி - 635 115.

உயர்தனிச் செம்மொழிகளில் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தது தமிழ்மொழியாகும். தமிழ்மொழியின் அரும்பெரும் களஞ்சியமாகப் போற்றப்படும் சங்க இலக்கியம் அரிய கருத்துக்களைத் தாங்கிய கருத்துப் பெட்டகமாகத் திகழ்கிறது. இப்பாடல்கள் பாட்டும் தொகையுமாக இருந்து காலத்தைக் கடந்தும் வாழ்கின்றன. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதற்கேற்ப எட்டுத்தொகையில் அமைந்த அகப்பாடல்களும், ஓர் உவமையோடு அமையும் பாடல்களும் பல உவமையோடு அமைந்து நெஞ்சில் பதியும் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

சங்ககாலப் புலவர்கள் தாம் பாடக்கூடிய பாடல்களில் ஆழ்ந்த கருத்துக்களையும் எளிமையாகக் கையாண்டு சொற்சித்திரமாகத் தீட்டி வைத்துள்ளனர். பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த செம்மாந்த வாழ்க்கை நிலையை எடுத்தோதுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்துள்ளனர். காதல், வீரம், கொடை, மனிதநேயம் என பல பொருள்களைப் பாடுபொருள்களாகக் கொண்டு தம் களத்தை விரிவு படுத்தியுள்ளனர். அவர்களில் கபிலரும் ஒருவராவார். குறுந்தொகையில் இடம்பெற்ற அவரது இருபத்திரண்டு பாடல்களில் உள்ள உவமை பற்றிய செய்திகளை ஆய்ந்து,பொருண்மை அமைத்து இவரை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**உவமை பற்றிய விளக்கம்**

அறிந்த ஒரு பொருளைக் காட்டி அறியாத ஒரு பொருளை உணர்த்துவதும், ஒரு பொருளைச் சிறப்பிப்பதும் உவமையின் சிறப்பாகக் கருதப்படுகிறது.

ஒரு பொருளைத் தக்க ஒப்புமைக் காட்டி விளக்கும் உவமை, வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகைகளில் பிரிகிறது. இச்செய்தியை பின்வரும் தொல்காப்பிய நூற்பாவின் வழி அறியலாம்.

**“வினைபயன் மெய்உரு என்ற நான்கே**

**வகைபெற வந்த உவமத் தேற்றம்”**[1]

**உவமைக்குக் களம்**

உவமையின் களத்தைக் காட்ட வந்த தொல்காப்பியர்,

**“சிறப்பே நலனே காதல் வலியோடு**

**அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப”**[2]

என்கிறார். தம்மில் உயர்ந்தனவற்றோடு உவமிக்கப்பட்டனவேனும் சிறப்பாதல், நலனாதல், காதல் வலியாதல் நிலைக்களனாக வருமென்பதை அறியலாம்.

**கபிலரின் உவமைத்திறன்**

சங்க இலக்கியப் புலவர்களில் குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவரான கபிலர் தாம் பாடிய பாடல்களிலும் உவமையைக் கையாண்டுள்ளார். தலைவியை வருணனை செய்யும் பொழுது,

**“பசலை ஆர்ந்தநம் குவளை அம் கண்ணே”** (குறுந்-பா-13)

என்கிறார். தலைவியின் கண்களை குவளை மலருக்கு ஒப்பிட்டு அவளின் கண்களை குவளை மலருக்கு உயர்த்தும்படியாக தம் கருத்தை அமைப்பதைக் காணலாம்.

தலைவியின் கண்களை குவளை மலரோடு உவமைப்படுத்தும் நற்றிணைப்பாடலும் அமைவதை,

**“நீயே குவளை உன்கண் இவள் ஈண்டு ஒழிய”[3]**

என்ற பாடலடியால் உணரலாம்.

தலைவியின் காமத்தினை பலா பழத்திற்கு உவமையாகக் காட்டும் கபிலரின் பாடலை,

**“இவள்**

**உயர்தவச் சிறிது காமமோ பெரிதே” (குறுந்-பா-18)**

என்ற வரிகளால் தெளியலாம். தலைவியின் காமமானது பலா பழத்தினைப் போன்று இனிமையுடையதாகவும் அவள் உயிரானது அக்காம்பினைப் போன்றதாகவுமென எடுத்துரைப்பதை காணலாம்.

இவ்வாறு காமத்தை உவமிக்கும்படியாக கலித்தொகைப் பாடலும் அமைவதை,

**“பெரிதே காமம் :என்னுயிர் தவச்சிறிதே” (குறுந்-பா-95)**

என்ற வரியும் அமைகின்றது. மேலும்,

**“நீர்ஓ ரன்ன சாயல்**

**தீஓ ரன்னஎன் உரன் அவத்தன்றே”[4]**

என பாறை வெடிப்புகளிலே ததும்புகின்ற நீரைப் போன்றது தலைவியின் மென்மை, தீயைப் போன்றது தலைவனின் வலிமை என்றும் நீரும் தீயும் தலைவன், தலைவியின் உடல் பலத்தை குறிப்பிடுவதை காணமுடிகிறது.

புற நானூற்றுப் பாடல் ஒன்றும் இந்நிலையை உவமைப் படுத்துவதை,

**“தீ முரணிய நீரும்”[5]**

என்ற வரிகளால் உணரலாம்.

**“சுனைப்புக் குற்றுத் தொடலை தைஇ**

**புனைக்கிளி கடியும் பூங்கட் பேதை” (குறுந்-பா-142)**

என பூப்போன்ற கண்களையுடைய பேதையாள் என பூவை தலைவியின் கண்களுக்கு உவமையாகக் காட்டி விளக்கும் கபிலரின் திறன் இங்குக் குறிக்கப்பட்டுள்ளது.

தலைவியின் கண்களுக்கு பூவை உவமையாகக் குறிப்பிடும்படியாக,

**“கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே**

**யுண்கண் வண்டன மொய்ப்ப”[6]**

என்று ஐங்குறுநூறு பாடலும் அமைவதை நோக்கலாம். மேலும்,

**“கரும்புமருள் முதல பைந்தாட் செந்தினை**

**மடப்பிடித் தடக்கை அன்னபால் வார்ப்பு” (குறுந்-பா-198)**

எனும் வரிகள் பயிரின் தண்டிற்கு கரும்பு உவமையாகவும், விளைந்த கதிர் குலைகளுக்கு யானையின் துதிக்கை உவமையாகப் பயன்படுத்தப்படுவதையும் அறியலாம். இதனைப் போன்று,

**“கரும்பு எனக் கவினிய பெருங்குரல் ஏனல்”[7]**

என அகநானூறு கரும்பை இனிய குரலுக்கு உவமையாகக் கூறப்படுவதையும் அறியலாம்.

**"வெள்வேர்**

**வரைஇழி அருவியின் தோன்றும்" (குறுந் - பா -72)**

என்ற வரிகள் இற்றி மரத்தினது வெள்ளிய வேரினை மலையினின்று வீழ்கின்ற அருவியென்று வர்ணனை செய்கின்றது. இதனைப் போன்று அகநானூற்றுப் பாடல் வரியிலும்,

**"குறுங்கால் இற்றி புன்தலை நெடுவீழ்"[8]**

என்று குறிப்பிடப்படுகிறது.

மரத்தினது வெள்ளிய வேரினை மலையினின்று வீழும் அருவிக்கு உவமையாகக் கூறி சிறப்பிக்கப்படும்படியாக கபிலர் பாடல் அமைவதைக் காணலாம். இதனை,

**"அது புலந்த அழுத கண்ணே, சாரற்**

**குண்டு நீர்ப் பைஞ்சுனைப் பூத்தகுவளை**

**வண்டு பயில் பல்இதழ் கலைஇத்**

**தண் துளிக்கு ஏற்ற மலர்போன் றவ்வே" (குறுந்-பா-291)**

என்ற பாடல் எடுத்துக்காட்டுகிறது. பூத்திருந்த குவளை மலரில் மழைத்துளி விழுந்தது போன்று தலைவியின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது என உவமிக்கப்படுவதை காணலாம்.

இதனைப் போன்று நற்றிணைப் பாடலிலும் தலைவியின் கண்களிலிருந்து வரும் கண்ணீர் புல் மீது படர்ந்திருக்கும் பனித்துளியாக உவமிக்கப்படுவதை,

**"கொடிச்சி**

**எழுது எழில் சிதைய அழுத கண்ணே"[9]**

என்ற பாடலால் அறியலாம்.

சங்க இலக்கியம் பொருள் அடிப்படையில் அகம், புறம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பாடல்களில் உவமை,உள்ளுறை, இறைச்சி ஆகியன அமையப் பாடல்களைப் பாடுவது சங்க இலக்கியங்களுக்குரிய பொதுப்பண்பாக இருந்து வந்தது. இவ்விலக்கிய உத்திகளில் ஒன்றான உவமையைத் தமது பாடல்களில் இடம்பெறச் செய்வதில் கபிலர் தனித்திறம் மிக்கவராக விளங்குகின்றார்.தலைவன், தலைவியரின் இயல்பான காதல் வாழ்வு குறித்த அகவாழ்க்கை முறையை இயற்கை நிகழ்வுகளுடன் ஒப்பிட்டு எழுதி தமது கவிதைத்திறத்தால் இனிமையைத் தருவித்து கபிலர் உயர்ந்து விளங்குகின்றார் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் (பொருள்), ப -375
2. மேலது நூல், ப - 377
3. கு.வெ. பாலசுப்பிரமணியன் (உரை) நற்றிணை, ப -376
4. ஞா. மாணிக்கவாசகன் (உரை), கலித்தொகை, ப - 359
5. ஞா. மாணிக்கவாசகன் (உரை), புறநானூறு, ப - 19
6. பொ.வே. சோமசுந்தரனார் (உரை), ஐங்குறுநூறு, ப - 185
7. இரா. செயபால், அகநானூறு, ப - 898
8. மேலது நூல், ப - 168
9. கு.வெ. பாலசுப்பிரமணியன் (உரை) நற்றிணை, ப -700

# எதார்த்தம் + எழுத்து = இராஜம் கிருஷ்ணன்

***முனைவர் அ.மாணிக்கம்,** தமிழ்த்துறைத்தலைவர், அறிஞர் அண்ணாகலைமற்றும் அறிவியல் கல்லூரி, கிருட்டினகிரி - 635 115.

இன்றைய உலகியல் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளையும், மக்களையும் கருவாகக் கொண்டு உயிரும், உணர்ச்சியும் ஊட்டி எழுத்தாளன் தன்கற்பனையைப் புனைவதே நாவல். உரைநடையில் அமைந்த புனைகதை அல்லது ஆண், பெண்களாகிய மாந்தர்களின் வாழ்க்கையில் உணர்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகளைக் சித்தரித்துக் காட்டுகின்றது. சமுதாய உறவுகளையும் அவற்றினின்றும் பிறக்கின்ற மனிதமன இயக்கங்களையும் இவை ஒன்று கூடி சமுதாய மனவியலாக சமுதாயத்தையே மாற்றும் உளவியல் சக்தியாக உருவாவதையும் உரைநடை தெளிவாக விவரிக்கும் வலிமை உடையது. இத்தகைய உரை நடை, இருபதாம் நூற்றாண்டில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என்றுபல இலக்கிய வடிவங்களாக வெளிப்பட்டது. சிறுகதை ஒருசெய்தித் துளியின் விளக்கமாகவே அமையும். ஆனால், நாவல் ஒரு சமூகம் முழுவதையும் படிப்பவர் முன் வைக்கக்கூடிய ஆற்றல் பெற்றது.

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வகைகளுள் நாவலுக்கு முக்கியமான இடமுண்டு. சமுதாயப் பிரச்சனைகளை எடுத்துக் கூறுவதில் முன் நிற்பதால் இலக்கிய உலகில் நாவல் மிகச்சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. **“எழுதப்பட்ட காலத்தில் உண்மையான வாழ்க்கையினையும் பழக்கவழக்கங்களையும் வெளியிடும் ஓவியமே நாவல்”**[1]என்பார் கிளாராரீவி. உரைநடையில் அமைந்த குறிப்பிடத்தக்க அளவு நீட்சியையுடைய கதையே நாவல். இது படிப்பவர்களை உண்மையான ஒரு கற்பனை உலகிற்கு அழைத்துச் செல்கிறது. **“படைப்பாளன் உருவாக்கியதால் அந்த உலகம் புதியது”**[2] என்ற காதரைன் வீவர் கூற்றுக்கேற்ப நாவலை எழுதுபவர் அதன் முறை அல்லது அமைப்புப் பற்றிய மரபான எந்தவிதிகளையும் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. மூன்று பக்க அளவுடைய கதையைக் கூற முடியுமோ அத்துணை அளவு அதைக் கூறவேண்டியதே அவர் கடமை. இத்தகையக் கடமையுணர்வைப் புரிந்துகொண்டவராய் இராஜம் கிருஷ்ணன் சமுதாயப் பிரச்சனைகளைப் பொருளாகக் கொண்டு கருவுக்கேற்ப நாவல் அமைப்பதில் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார்.

**படைப்புத்திறன்**

மக்களுடைய வாழ்க்கையில் நெருங்கிய தொடர்புடைய இலக்கியம் என்பது நாவலைக் குறிக்கும். நாவல் மக்களிடையே பரந்துவிரிந்து கிடக்கின்ற பலதரப்பட்ட பிரச்சனைகளை உள்ளடக்கி, அலசி ஆய்ந்து, தீர்வுகண்டு, தன்னுடைய ஈடுபாட்டை வாசகர்களுக்கு தொடர்ந்து வழங்கிவரும் இலக்கியமாக வளர்வதனைக் காணவியலும். சமூகப் பிரச்சனைகளைப் பெண் எழுத்தாளர் என்ற முறையில் சுவாசித்து தன் படைப்புகள் வாயிலாகப் பதியவைப்பதிலிருந்து இராஜம் கிருஷ்ணனின் ஆற்றல் வெளிப்படுகின்றது.

இந்நாவலின் ஆசிரியர் நாவல் உலகில் முன்னோடியாகத் திகழ்கின்றார். இவர் மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கின்றார். இவர் வட்டார வழக்குச் சொற்களைக் கையாண்டுள்ளார். இவர் தேர்ந்தெடுத்துள்ள கதையின் கருவானது மலைவாழ் மக்களையும், அன்றாடம் பெண்கள் சந்திக்கும் அவலங்களையும் மையமிட்டு அமைந்துள்ளது. மக்களை நேரில் கண்டு. அவர்களின் நிறை, குறைகளைக் கேட்டறிந்து அந்த உண்மை நிழ்வுகளை கதாப்பாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்த முயல்பவராகத் திகழ்கின்றார் இராஜம் கிருஷ்ணன்.

**வாழ்க்கை நிலை**

இலக்கியம் வெறும் பொழுது போக்கிற்குக் கொறிக்கும் சிறுதீனியாகிவிடக் கூடாது. அது மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத, ஆரோக்கியமான சத்துணைவைப் போல் சமுதாய உணர்வை, மனிதாபிமானத்தை மக்களிடையே ஊட்டுவதாக இருக்கும் என்ற கருத்தில் உறுதியுடன் நடைபோடும் தன்மைகொண்டவர் இராஜம் கிருஷ்ணன் எனலாம். அவ்வாறே தனது நடையையும் அமைத்துக்கொள்வதில் தனித்து விளங்குகின்றார்.

இவர் திருச்சி மாவட்டத்தில் முசிறி என்னும் ஊரில் 05.11.1925 - ல் நாராயணன் - மீனாட்சி தம்பதியர்க்கு மகளாகப் பிறந்தவர். இவருக்கு 1940 -ல் திருமணம் நடைபெற்றது.

கணவர் முத்துக்கிருஷ்ணன். இவர் மின்சாரவாரியப் பொறியியளராகப் பணியாற்றுகின்றார். இவர் கணவருடன் ஊட்டி, குந்தா, கோவா என பல இடங்களுக்கு சுற்றுப்பயணம் செய்தார். இப்பயணமானது இவரது படைப்புகளுக்கு ஊன்றுகோலாய் அமைந்தது. இதன் மூலமே தனது படைப்புகளின் மேம்பாட்டை வளப்படுத்திக் கொண்டார்.

மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும் இவர் வேறுபட்டவர். ஒரு படைப்பை சிருஷ்டிக்கும் முன்னர் அப்படைப்பின் கருவுக்குவித்திடும் மக்களோடு மக்களாகக் கலந்து , பழகி அவர்களுடைய வாழ்க்கையை நன்றாக அறிந்து, ஆராய்ந்த பின்னரே தனது படைப்பை பற்றி சிந்திக்கும் எண்ணம் கொண்டவர். பிறரால் கேட்டு, பிறரால் தெரிந்துகொண்டு படைப்பதைக் காட்டிலும் தாமாகவே அவ்விடத்திற்குச் சென்று தனது களத்தை அமைத்துக்கொள்வதில் இவருக்கென தனித்துவம் வெளிப்படுகின்றது என்றே கருதலாம்.

**அறிஞர்களின் அளவீடுகளில் இராஜம் கிருஷ்ணன்**

இவ்வாசிரியர் பரவலாக தமிழகத்தில் அறியப்பட்டவர். இவர் ஒருபெண்ணிய எழுத்தாளராகக் கருதப்படுகின்றார். இவரைப் பற்றி,

**“திருமதி இராஜம் கிருஷ்ணன் பலவகையான சூழ்நிலைகளைவைத்துநாவல்களைப் படைத்திருக்கின்றார். தாம் கண்டறிந்தமக்களையும்,பழக்கவழக்கங்களையும் வைத்துக் கதையைப் பின்னுவதில் வல்லவர் ஆவார். இவருடையநாவல் களம் நாவலுக்குவேராக இருக்கும். வாழ்க்கையின் நுட்பங்களைஎல்லாம் அறந்துகதைப்பிணைக்கும் ஆற்றல் உள்ளவர்”[3]**

என்று கி.வா. ஜெ வால் பாராட்டப்பட்டவர். இவருடையதனித்துவப் போக்கே இவரை அடையாளப்படுத்தும் கருவிஎன்பதைவெளிக்காட்டுகின்றார்.

சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களை அப்படியே தமது படைப்புகளில் எடுத்துக்காட்டக் கூடிய வல்லமைபடைத்தவர். புகழ்பெற்றபெண் எழுத்தாளர்களில் இவர் குறிப்பிடத்தக்கஒருவராவார். நீண்ட நெடுநாட்களாக தமக்கென வரையறுக்கப்பட்ட வாசகர் அணியைப் பெற்றுத்திழ்பவர். சிந்தனைத் தெளிவும், வெளியீட்டுத் திறனும் வாய்க்கப் பெற்றவர்.

**“பலதரப்பட்டசிக்கல்களையும் கருப்பொருளாகவைத்துகதைப்புனையும் இராஜம் கிருஷ்ணன் சிறந்தபண்பட்டமேற்கத்தியஎழுத்தாளருக்குச் சமமானவர். பெண்ணைபெண் நோக்குநிலையிலிருந்து சிந்தித்துஎழுதுகின்றபெண் எழுத்தாளர்.”[4]**

இவ்வாறு கார்த்திகேசுசிவத்தம்பி, பெண்களுக்குரிய சிக்கல்களை வெளிக்கொணரும் போதுதாமும் ஒருபெண் என்பதை மனதில் கொண்டு, ஒட்டுமொத்த பெண்ணினத்திற்கு சாதகமாக தமது கருத்தை அமைக்கக் கூடியவர் எனபாராட்டியுள்ளார். மேலும்,

**“நோக்கரியநோக்குக்கும் நுணுக்கரியநுண்ணுணர்வும் சொல்லற்கரியசொல்லும் ஆற்றல் படைத்த இராஜம் கிருஷ்ணன் புதினங்கள் கருவும் அமைப்பும் ஆகிய இரண்டுநிலைகளிலும் சிறந்து விளங்குகின்றன”[5]** என ந.சஞ்சீவி இவரைப் புகழ்கின்றார். நிறையபடிக்கவேண்டுமென்று தந்தைஊட்டியஆர்வமானது இவரை இளம்வயதிலேயேபலமொழிகளின் நூல்களையும் படிக்கத் தூண்டியது. அப்பருவத்திலேயேஆங்கிலம்,வடமொழிகளில் உலகப்புகழ் பெற்றபுதினங்களைப் படித்துப் பெரிதும் சுவைகண்டவர் இராஜம் கிருஷ்ணன்.

இராஜம் கிருஷ்ணன் சமுதாயப் பார்வையும், பொறுப்புணர்ச்சியும் கொண்டபடைப்பாளராகத் திழ்கின்றார். இவர் எழுத்தைப் புனிதமாகவும் மனிதகுலத்திற்கு ஆற்றும் கடமையாகவும் கருதுபவர். பத்திரிக்கைகளின் போக்கிற்கெனதன் எழுத்து முறையைமாற்றிக் கொள்ளாதகொள்கைப் பிடிப்பாளர். தம்முடைய அண்மைக்காலபடைப்புகளைநேரடியாகப் புத்தகவடிவில் வெளியிடுகின்றார்.

**“தமிழ்ப் புதினஉலகில் ஒருவிதிவிலக்கு. உண்மையானஅறிவ ஜீவி. அறையில் உட்கார்ந்துகொண்டு,ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு,கற்பனைமனக்கோட்டைக் கட்டும் எழுத்தளர்களிடம் இருந்துவேறுபட்டவர். ஆழமானசமுதாயப் பார்வையும் பொறுப்புணர்ச்சியும் கொண்டவர். எழுத்தைவிலைபோசாத இப்படைப்பிலக்கியவாதிபடைப்புத் தொழில் பற்றிஉயரியநோக்கம் கொண்டவர்”[6]**என்றபாராட்டப்பட்டவராகத் திகழ்கின்றார் இராஜம் கிருஷ்ணன். இதன்மூலம் எந்தவொரு தன்முனைப்பையும் காட்டாதுசமூகம் சார்ந்தசிந்தனைகளை முன்னிறுத்தியே நேர்மையோடு, தைரியத்துடன், கண்ணியத்துடனும் எழுத்துலகில் நடைபோடுபவர் என்பதுவெளிப்படுகின்றது.

ஆசிரியர் தேர்ந்தெடுக்கின்றகதைக்களங்கள் முற்றிலும் புதியவை. வேறானவை.எழுத்தைத் தவமாகக்கொண்டு சாதனைகள் பலபுரிந்துநிறுவனங்களில் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்ற பெருமைக்குரியவராக விளங்குகின்றார். மனிதநேயத்தையும் பாசத்தையும் கதைகளில் வடிக்கும் இயல்புகொண்டவர். பழங்குடியினரின் பழக்கவழக்கங்களும்,கிராமப் புறத்தார்களிடம் உள்ள அறியாமை நிகழ்வுகளையும், பெண்களுக்குளதார்த்தமாகநிகழும் பிரச்சனைகளையும் தனது

கதைக்கருவாகக் கொண்டு அவற்றை வெளிக்காட்டுவதில் மிகுந்தஅக்கறைகொண்டவர். நேரடியாக ஒவ்வொரு இடத்திற்கும் சென்று தமது களத்தை அமைத்துக்கொண்டுவலம் வரும் தமிழிலக்கிய உலகில் தனக்கென தனியிடத்தை உருவாக்கி, தக்கவைத்துக்கொண்டவர் இராஜம் கிருஷ்ணன்என்பது மேற்கண்டசெய்திகளின் வழி உறுதியாகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத்திறனாய்வியல், ப - 375
2. “மேற்படி நூல், ப - 375
4. கி.வா.ஜகந்நாதன், (கட்டுரைஆய்வு) தமிழ் இலக்கியம், ப - 162
5. கா. சிவத்தம்பி, இலக்கியமும், கருத்துநிலையும் , ப - 90
6. இராஜம் கிருஷ்ணன், வேருக்குநீர், பக் - 5,6
7. இராஜம் கிருஷ்ணன், கூட்டுக் குஞ்சுகள், பக் - 6,7

# சோழர்களின் கலைவளர்ச்சி

*பெ.பாக்கியலெட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை, அரசுக்கலைக்கல்லூரி, மலூர் - 625 106.

**முன்னுரை**

உலகத்திலேயே நாகரீகம் பெற்ற மக்கள் எல்லோரும் கலைகளை வளர்த்தனர். மிகப் பழைப காலந்தொட்டு நாகரீகம் பெற்று வாழ்ந்து வருகிற தமிழரும் தமக்கென்று கலைகளை உண்டாக்கிப் போற்றி வளர்த்து வருகின்றனர். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்ந்து வருகிற தமிழரின் கலைகள் மிக மிகப் பழமையானவை. மனிதன் மிகப் பழைய காலத்திலே காட்டு மிராண்டியாக வாழ்ந்தான். பிறகு அவன் மெல்ல மெல்ல நாகரீகம் அடைந்தான். மனித இனம் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதலே கலையுணர்ச்சி தோன்றியது. ஆதிமனிதன் எல்லா பொருட்களுக்கும் உயிர் இருப்பதாக நம்பினான். இயற்கைப் பொருட்கள் அனைத்திற்கும் உயிருண்டு என்றான். வானம், பூமி, மழை, மின்னல், நிலத்தினை பூமாதேவி என்னும் வழிபட்டான்.[1] மேலும் தமிழகத்தில் சூரியனுக்கென்று தனி கோயில்கள் உள்ளன. முதலாம் குலோத்துங்கன் கும்பகோணத்தில் சூரியனார் கோயில் சூரியனுக்கென்று அமைக்கப்பட்டதாகும். அதே போன்று வட இந்தியாவிலுள்ள கொனாரக் என்ற இடத்திலும் சூரியனுக்கென்று கோயில் அமைத்தான்.[2]

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து தெய்வவழிபாட்டிற்கும் மனிதனுக்கும் தொடர்பு உண்டு. இயற்கையை தெய்வமாக வழிபட்ட அவன் பின் செல்ல செல்ல தனக்கென்று உருவ வழிபாட்டை மேற்கொண்டான். பின் அதற்கென்று ஆலயங்களை எழுப்பினான். அரசர்கள் முதல் ஆண்டிகள் வரை தலைவணங்குவது தெய்வவழிபாட்டிற்குத்தான். தெய்வ வழிபாடு வேதகாலத்தில் தொடங்கி சங்ககாலத்தில் வளர்ந்து கலியுக காலத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தமிழக வரலாற்றில் கலை வளர்ச்சிக்கு ஆர்வம் காட்டியவர்கள் பல்லவர்கள். பல்லவர்கள் மரபைப்பற்றி சோழர்களும் கலைவளர்ச்சிக்கு ஊக்கமளித்தனர். கலையை ஆதரித்த சோழ அரசர்கள் தங்கள் வருவாயின் பெரும்பகுதியை ஆலயங்கள், அரண்மனைகள் ஆகியவற்றை அழகுற அமைத்தனர். கட்டிடக்கலையினை ஆலயங்களில் உணரமுடிகிறது. பண்டையக் காலத்திலேயே நமது நாட்டிலே அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்று மணிமேகலை முதலிய நூல்கள் கூறுகின்றன.

கலைகள் ஐந்துஅவை கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பனவாகும்.[3] கலைகள் எல்லா நாட்டிலும் ஒரே விதமாக இல்லாமல் வெவ்வேறு நாட்டில் வெவ்வேறு விதமாக உள்ளன.

**கோயில் அமைப்பு**

மனிதன் துன்பம் நீக்கு இன்பம் பெறவும் தெய்வ வழிபாட்டை மேற்கொண்டான். மனதை எங்கும் அலைவிடாது ஒருநிலைப்படுத்தவும் கோயில் அமைத்து வழிபட்டான். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்ற முதுமொழி இருந்தது. முதலில் தெய்வங்களை மரத்தடியில் வைத்து வழிபட்டனர். பின் கோபுரம், விமானம், தேர் அமைப்பு போன்று கட்டப்பட்டன. சிலையமைப்பில் ஆண்தெய்வச்சிலைகள் என்றும், பெண் தெய்வச்சிலைகள் என்றும் பிரித்தனர். மேலும் நவக்கிரகங்களில் ஆற்றலால்தான் உலகுக்கு நன்மையும், தீமையும் ஏற்படுகின்றன என்பது இந்து சமயக்கருத்து.

**விழாக்கள்**

இந்த தெய்வங்களுக்கு விழாக்கள் கொண்டாப்படுகின்ற இந்த விழாக்கள் நாடுவளமாக இருக்கவும், மக்கள் செழிப்பாக இருக்கவும் கொண்டாடப்படுகின்றன. மேலும் இந்த விழாக்கள் மனிதனின் கூட்டு வாழ்க்கையை வளப்படுத்தவும் விழாக்கள் அமைகிறது. தனிப்பட்டவரின் மகிழ்ச்சி குடும்பத்தில் கொண்டாடம் ஆகியவை இந்த திருவிழாவில் ஏற்படுகிறது.[4]

**கட்டிக்கலை**

மிகப்பழைய காலத்திலேயே நமது நாட்டில் கோயில்கள் மரத்தால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல், சுண்ணாம்பு, மரம் முதலிய பொருள்களால் கட்டடங்களை அமைக்கப்பட்டன. பின்னர் பெரிய பாறைகளை குடைந்து குகைக்கோயில்கள் அமைக்கப்பட்டன. இறுதியில் கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவது கற்றளியாகும். வெறும் மண்ணால் கட்டப்பட்ட கோயில்களுக்கு மண்தளி என்பது பெயர். சகைச்சங்க காலத்தில் இறுதியில் இருந்த சோழன் செங்கணான் சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் எழுபதுக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டினான்.

**பாறைக்கோயில்கள்**

கி.பி.7ஆம் நூற்றாண்டின் தெடாடகக்கத்தில் தொண்டை நாட்டையும் சோழநாட்டையும் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ மன்னன் அரசாண்டான். குடைவரைக்கோயில் என்பது ஒரு பெரும்பாறையை அல்லது குன்றைத்திட்டமிட்டபடிச் செதுக்கி உருவாக்குவதே குடைவரைக் கோயில்களாகும். இதனை முதன்முதலில் நுணுக்கத்தோடு கண்டு வெற்றி கண்டவன் பல்லவமன்னனான மகேந்திரவர்மன்.[5]

இந்திய நாட்டுக் கட்டடங்களை சிற்பக்கலைஞர் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பனவாகும். இவற்றில் நாகரம் என்பது வட இந்தியக் கட்டடம் ஆகும். இவை நர்மதை ஆற்றுக்கு வடக்கே வட இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக வேசரம் என்னும் பெயருள்ள கட்டடவகை பண்டைக்காலத்தில் பெரிதும் பௌத்த மதத்தரால் வளர்ச்சியடைந்ததாகும். இந்த அமைப்பு தமிழ்நாட்டுக் கோயில் கட்டட அமைப்பு சிலவற்றில் இடம் பெற்றுள்ளது. திராவிடம் என்னும் பிரிவு தென் இந்தியக் கோயிற் கட்டடங்களாகும். இவை வடக்கே கிரு'ணா நதிமுதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் காணப்படுகின்றன. திராவிடக் கோயில் கட்டிடகலையில் தமிழர், சாளுக்கியர், ஹொய்சாளர் முதலிய உட்பிரிவுகள் உள்ளன. பொதுவாக எல்லா இந்துக் கோயிலும் கிழக்கு அல்லது மேற்கு நோக்கி இருக்கும். சில கோயில்களை தெற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் அபூர்வமாக இருக்கும்

**சோழர்கால கோயில்கள்**

பல்லவர்களுக்குப் பிறகு சோழப் பேரரசு 430 ஆண்டுகள் நிலைத்திருந்தது. இந்த நீண்ட கால கட்டத்தில் கட்டிடக்கலை சிறப்புடன் வளர்ந்தது. இவற்றின் வளர்ச்சியை ஆட்சியின் அடிப்படையில் பிரிக்கின்றனர். விஜயாலயன் காலம் முதல் உத்தம சோழன் காலம் வரை (கி.பி.850-985) முற்காலச்சோழர் கலைப்பணி என்றும், முதலாம் இராசராசன் காலம் முதல் அதிராசேந்திரன் காலம் வரை (கி.பி.985-1070) இடைக்காலச் சோழர் கலைப்பாணி என்றும், முதலாம் குலோத்துக்கன் காலம் முதல் மூன்றாம் இராசேந்திரன் காலம் வரை (கி.பி.1070-1270) உள்ள பகுதியைப் பிற்காலச் சோழர் கலைப்பணி என்றும் கொள்வர்.[6]

முதற்கட்ட வளர்ச்சியில் மிகச்சிறிய கோயிலும் ஒன்று, இரண்டு, மூன்று தளங்களையுத் கோயிலும், ஒப்பனைகளும் உருவ அமைப்பும் குறைந்த கோயில்களைக் காண்போம். ஆனால் இரண்டாம் கட்டவளர்ச்சியில் அடி முதல் முனை வரையிலுள்ள பல்வேறு உறுப்புகளிலும் ஒப்பனைகள் கலை நயங்கள் அதிகமாக இருப்பதை காணலாம். முற்காலச் சோழர் கோயில்களில் ஓரளவு பல்லவர்காலப் பணிகள் உள்ளன. ஆனால் இரண்டாம் கட்ட வளர்ச்சியில் அவை இல்லை. இவை முற்றிலும் சோழக் காலப்பணியாகவே வளர்ந்தது. இந்த இரண்டாம் கட்ட வளர்ச்சி "சோழரின் கோயில் பொற்காலம்" என்றும் அழைத்தனர். இந்த பொற்காலத்திற்கு முதலாம் இராசராசனின் தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், அவன் மகன் முதலாம் இராசேந்திரனுடைய கங்கை கொண்ட சோழிச்சுவர கோயிலும் சிறந்த எடுத்துக்காட்டாகும். பிற்கால சோழர்காலத்தில் மகாமண்டபங்கள் இவை விஜயநகரகால மண்டபங்கள் ஆயிரங்கால் மண்பங்களுக்கு முன்னோடியாக உள்ளன. முகாமைக் கோயில்களின் பிறவகைக் (எ.கா.) பெருவுடையார் கோயில், திரிபுராந்தகர், கங்கைக்கொண்ட சோழிச்சுவரத்தில் சண்டிகேசுவரர். தாராசுரத்தில் 63 நாயன்மார்கள் பிற்காலச் சோழர் கோயில்களில் சிற்பாக வளர்ச்சியடைந்தன. தாமரை மலர்பூத்து, இதழ் விரித்துப்பலகைக்கு கீழும் தொடங்கியது. போதிகையை ஒரு காலக்கணிப்பைக் காட்டும் கண்ணாடி என்பர். பல்லவர், பாண்டியர், சோழர் விஜயநகரகால கட்டிடங்களையும் அறிய தூண் போதிகை கருவியாக உள்ளன.

**சிற்பக்கலை**

சிற்பக்கலை மிகவும் நுட்பமானது. மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, மலை, கடல் முதலிய இயற்கை உருவங்களையும் கடவுள், தெய்வம், தேவர், அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும் அமைப்பதே சிற்பக்கலையாகும். மெழுகு, அரக்கு சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் இந்த பொருளைக் கொண்டு சிற்ப உருவங்கள் அமைக்கின்றன. சிற்ப உருவங்கள் அமையாத கோயிற் கட்டிடங்கள் இல்லை. கோயிலின் தரைசுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் முதலிய கட்டிடங்களில் எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன. சிற்பங்கள் முழுஉருவச் சிற்பங்கள் என்றும் புடைப்புச் சிற்பங்கள் என்றும் பிரிக்கின்றனர். கடவுள் எங்கும் பரந்து இருக்கிறார் என்பதை காட்ட கடவுளின் உருவங்களுக்கு நான்கு கைகள், எட்டுக் கைகள் அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். சோழர்காலக் கலைஞர்கள் கல்லிலும், வெண்கலத்திலும் தங்களுடைய கைவண்ணத்தைக் காட்டியுள்ளனர். சைவசமயச் சிற்பங்களே பெருமளவில் உள்ளது. மற்றவை குறைந்து காணப்படுகிறது. இதனால் சோழ நாடெங்கும் நிறைந்திருக்கும் சைவக் கோயில்களே ஆகும்.[7] கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.13-ஆம் நூற்றாண்டு வரையிலான புத்தரின் சிற்பங்கள் சோழநாட்டில் பல இடங்களில் கிடைத்துள்ளன.

சோழர்கள் தொடக்கத்தில் பல்லவர்களைப் பின்பற்றினாலும் இடைக்கால, பிற்காலச் சிற்பங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்தது தங்களின் ஆளுமையை வளர்த்து கொண்டன. தென்இந்தியாவில் இவற்றிற்கு இணையான சிற்பங்கள் இல்லை.[8] குன்றுகளே இல்லாத சோழநாட்டில் இத்துணையளவு கருங்கற்களைக் குவித்து ஆயிரக்கணக்கான தரமான சிற்பங்களைப் படைத்தனர். அவர்களின் கடும் உழைப்பு, அர்ப்பணிப்பே காரணம்.

**ஓவியக்கலை**

தமிழ்நாட்டில் காணப்பெறும் ஓவியங்களும் பழமையானவை கற்கால மனிதன் இயற்கையான குகைகளில் வரைந்தான். இந்த ஓவியத்திற்கு சித்திரம் என்னும் பெயர் உண்டு. சங்க காரலத்திலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓவியக்கலை நமது நாட்டில் வளர்ச்சியடைந்திருந்தன என்பதற்கு சங்க நூல்கள் சான்றாக உள்ளன.

**சுவர் ஓவியங்கள்**

பண்டைக்காலத்தில் அரசரின் அரண்மனை, பிரபுக்களின் மாளிகை கோயில் மண்டபம் முதலிய கட்டிடங்களின் சுவர்களின் ஓவியங்களை எழுதி அழகுபடுத்தினர். சோழர் காலத்து ஓவியங்கள் தஞ்சாவூர், நார்த்தாமலை, திருமலை, தாராசுரம் ஆகிய ஊர்களில் உள்ளன. சோழர்கால ஓவியங்களில் குங்குமச்சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை நிறங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டன. பச்சை, நீலம், ஆகிய நிறங்கள் பெண்களின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. திரிபுராந்தகர் ஓவியம் சோழப்பேரரசர்களின் வீரச் செயல்களின் சின்னமாகக் கொள்ளப்படுகின்றன. தஞ்சை ஓவியங்களில் சிறப்புடையவை தட்சிணாமூர்த்தி திரிபுராந்தகர் ஆகியவை உயிரோவியங்களாக உள்ளன. பொதுமக்கள் புரிந்து கொள்ளும்படி சோழர்கால ஓவியம் உள்ளன.

**இசைக்கலை**

இசைக்கலையை இசைத்தமிழ் என்றும் கூறுவர். தமிழர் வளர்த்த இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்களில் இதுவும் ஒன்று. ஆகவே அது தமிழர் வளர்த்த கலைகளில் மிகப்பழமையானவை. சோழர்காலத்து இசைக்கலையைப் பற்றி தெரிந்து கொள்ள உதவும் சான்றுகளில் முக்கியமானவை சோழர்காலத்து இலக்கியங்கள், உரையாசிரியர் குறிப்புகள், ஓவியங்கள், சிற்பங்கள், செப்புத்திருமேனிகள், கல்வெட்டுகள் முதலியவையாகும். மேலும் கம்மை நல்லூர் இசைக்கல்வெட்டு[9] கலிங்கத்துப்பரணி[10], சீவகசிந்தாமணி[11] பெரியபுராணம் சோழர் காலத்தெழுந்த சைவ சமய நூல்களுள் திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் தனிச்சிறப்புடையது. திருவாரூரைப் பற்றிச் சொல்லும் போது சேக்கிழார் பெருமாள்

**'தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்**

**கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"**

என்கிறார்.[12] அடியாருக்கு நல்லாரின் உரை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய போது அடியாருக்கு நல்லார் தமது உரையில் பல்வேறு இசைக்கருவிகளைப் பற்றிக் கூறியுள்ளார்.[13] சோழர்கள் காலத்தில் உரையாசிரியர்களும் இசைக் குறித்துத் தெரிந்து வைத்திருந்தனர்.

திருக்கோயில்களில் இறைவழிபாட்டின் ஓர் அங்கமாக இசையும் இசைக்கருவிகளும் விளங்கி வருகின்றன.[14]

சோழப் பெருவேந்தர் காலத்தில் கி.பி.12நூற்றாண்டு வரை தமிழ்ப் பண்கள் செல்வாக்குப் பெற்று இருந்தன. சோழர் காலத்தில் இசைக்கலை சிறந்து விளங்கின எனலாம்.

**நூற்பட்டியல்**


1. தே.ஞானசேகரன் - நாட்டுப்புறச் சமயமும் தோற்றமும் வளர்ச்சியும் காவியா பதிப்பகம் - 2012-பக்.11-13.
2. யு.சுவாமிநாதன் - தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு – பாகம்-1, தீபா பதிப்பகம், 1997, சென்னை, பக்.242-243.
3. மயிலை சீனி வேங்கடசாமி – தமிழர்வளர்த்த அழகுக்கலைகள் - மணிவாசகர் பதிப்பகம் - 2002 – பக்.24-25.
4. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் - இந்தியா பாரிநிலையம், சென்னை – 1975, ப.118.
5. தங்கவேலு – தமிழகச் சமூகப்பண்பாட்டு வரலாறு – முதல்பாகம் அமிழ்தம் பதிப்பகம் - சென்னை – 2002-ப.248.
6. சு.ஆர்.பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பாணி – முதற்பதிப்பு, சென்னை, 1966, ப.30.
7. தமிழ்நாட்டுவரலாறு – சோழப்பெருவேந்தர்காலம் - தமிழ் வளர்ச்சிதுறை வெளியீடு, ப.575.
8. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார், சோழர்கள் (மொழி பெயர்ப்பு) சென்னை, 1989, ப.957.
9. தமிழ்நாட்டு வரலாறு, சோழப் பெருவேந்தர்காலம், ப.683
10. மு.அருணாசலம், இலக்கியவரலாறு, பன்னிரண்டாம் நூற்றாண்டு முதற்பகுதி – காந்தி வித்தியாலயம் - திருச்சிற்றம்பலம், ப.46.
11. ச.வே. சுப்பிரமணியன், சிலம்பும் சிந்தாமணியும், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1979, பக்.104-105.
12. க.வெள்ளைவாரணன் பன்னிருதிருமுறை இரண்டாம்பகுதி அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1980, ப.1091.
13. ஞானகுலேந்திரன், பழந்தமிழர் ஆடலில் இசை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990. பக்.156-157.
14. இரா.நாகசாமி மற்றும் மா.சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற் கலைகள், தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1976, ப.54.

# நவீனக் கவிதைகளில் காதல் வெளிப்பாடு

***அ. கணேசன்,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.

**முன்னுரை :**

காதல் மனிதனின் இயல்புணர்வு, மனித குலத்தின் அமர உணர்வு. மனிதனின் பாலுணர்ச்சி. சமூக அங்கீகாரங்கள் என்னும் ஆடை உடுத்தி வருகின்ற பொழுது புனிதமான காதல் என்று போற்றப்படுகிறது. சமூக அங்கீரகாரங்களுடன் அவை சண்டை போட்டுக் கொண்டு கிளர்ச்சி செய்கிற பொழுது கவிஞர்கள் தங்கள் காவியங்களைக் கருத்தரிக்கிறார்கள். மனிதனுக்கு பாலுணர்ச்சி இருக்கிற வரை **'களவு' (காதல்)** பற்றி எல்லோரும் பேசிக் கொண்டுதான் இருப்பார்கள்.

காதல் தோன்றி வளர்வதற்கு இலக்கியம் ஒரு காரணமாக அமைகின்றது. இலக்கியங்களில் தோன்றிய காதல் அவ்வுலகத்திலேயே முடிகின்றது. பண்டையத் தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையை அகவாழ்வு, புறவாழ்வு என பாகுபடுத்தி வாழ்ந்து வந்தனர். 'அகவாழ்வு' களவு சார்ந்த வாழ்வாகவும், 'புறவாழ்வு' போர், வீரம் பற்றிய வாழ்வாகவும் அமைந்துள்ளன. இன்றைய நவீனச் சூழலில் காதலின் நன்மைகளை அதிநுட்பத்துடன் கவிஞர்கள் எழுதிச் செல்கின்றனர். மாறிக் கொண்டுவரும் சமூக வாழ்வின் தன்மைகளும், வளர்ந்து வரும் அறிவியல் உலகின் முன்னேற்றம், பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளால் உண்டாகும் சீர்குலைவுகளும் **நவினக் கவிதைகளில்** சுவருகளாக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் கல்யாண்ஜி, கலாப்பிரியா, தேவேந்திர பூபதி, ந. பெரியசாமி, குட்டிரேவதி, சுகிர்தராணி, தமிழச்சி தங்கப்பாண்டியன், சத்யஜோதி இவர்களின் கவிதை நூல்களிலிருந்து 'காதல்' (களவு) பற்றிய சிந்தனைகள் ஆராயப்படுகின்றது.

**காதல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் :**

காதல் பற்றி பல்வேறான அறிஞர்களின் கருதுக்கள் இடம் பெற்றுள்ளன. "காதலென்பது அன்பல்ல, ஆசையல்ல, காமமல்ல என்றும் அன்பு, நேசம், காமம், மோகம் என்பவை வேறு, காதல் என்பவை வேறு என்றும் அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தங்களுக்குள் நேரே விவரித்துச் சொல்ல முடியாத ஒரு தனிக்காரியத்திற்காக ஏற்படுவதாகும் என்றும் இருவருக்கும் இயற்கையாய் உண்டாகக் கூடியது என்றும், அக்காதலுக்கு இணையானது உலகத்தில் வேறு எதுவும் ஒன்றுமில்லை என்றும் அதுவும் ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிடமும், ஒரு பெண்ணுக்கு ஆணிடம் மாத்திரம் தான் இருக்க முடியும் என்றும், ஒருவரிடம் ஒருவருக்குமாக இருவருக்கும் ஒரு காதலத்தில் காதல் ஏற்பட்டுவிட்டால் பிறகு எந்தக் காரணங்கொண்டும், எந்தக் காலத்திலும் அந்த காதல் மாறாது என்றும், வேறொருவரிடமும் அந்த காதல் ஏற்படாது" [4] (பெண் ஏன் அடிமையானாள், ப.16) என்றும் தந்தை பெரியார் காதல் பற்றிக் கூறியுள்ளார்.

"காதல் இல்லாமல் இல்லறம் நல்லறமாக விளங்க முடியாது. அதனால்தான் திருமணத்தில் அடிப்படையாக காதல் பார்க்கப்படுகிறது. காதலற்ற சேர்க்கை மணமாகாது" என்று முடிவா? சீர்திருத்தமா? என்ற நூலில் திரு.வி.க. கூறியுள்ளார்.

"ஒவ்வொரு உயிரினத்தின் அடிப்படையாய் வாழ்வோடு ஒட்டி உறவாடும் உணர்ச்சி காதல் என்பதாகும். இலக்கியத்தின் எண் சுவைக்கும் நிலைக்களமானதும் இவ்வுணர்ச்சியேயாம்: என்ற தமிழண்ணல் (காதல் வாழ்வு, ப.44) கூறுகின்றார்.

"எந்த பெண்ணை மனப்பூர்வமாகக் காதலிக்கின்றாயோ அவள் எப்போதும் உன் கண்களுக்குக் குமரியாகவே தோன்றுவாள். ஒரு நல்ல பெண்மனியில் பூரண அன்பையும், ஒருவன் அடைந்துவிட்டால் அவன் பிச்சைக்கார வாழ்வு நடத்தி செத்துவிட்டாலும் அவன் வாழ்க்கையில் வெற்றியடைந்தவனாவான்" என்று இராதாமணாளன் (கே.ஜி. இராதாமணாளன், சிந்தனையாளர் இங்கர்சால், ப.93) கூறுகின்றார்.

“வாழ்விலே இன்பம் அளிப்பது காதல். வாழ்வை வளமாககுவதும் காதல். உலகத்தை ஆட்டி வைப்பதும் காதல், இன்ப வாழ்வுக்கும் காதலே மரணம். தூய காதலாயின் இன்பம் உண்டு” என்று அ.கி. பரந்தாமனார் (வாழ்க்கைக் கலை, ப. 32) கூறுகின்றார்

**நவீனக் கவிதைகளில் காதல் பற்றிய கருத்து :**

இடம், இனம், மொழி, பருவம், பால் வேறுபாடின்றி மானிடம் அனைவரையும் எக்காலத்தும் தன்னுள் ஈர்த்துக் கொண்டிருப்பது காதல் ஒன்றேயாகும். மானிடர் மட்டுமின்றி அனைத்து உயிரினங்களின் வாழ்விலும் இக்காதல் கரையென்பது தென்படுகிறது. சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை இக்காதலின் எல்லைகள் மாறுபட்டும், மாற்றப்பட்டும் வருகின்றது. கவிஞர்களின் சிந்தனைகளில் காதல் விளையாடுவதில் ஆச்சரியமன்று. இருப்பினும் நவீனக் கவிஞர்களின் இப்பார்வை சற்று மாற்றத்திற்கான பார்வையாகவே தென்படுகிறது. இக்கண்ணோட்டத்தை பின்வரும் தலைப்புகளில் ஆராயலாம்.

1. காதலும் கற்பனையும்
2. காதலும் மௌனமொழியும்
3. காதலும் உணர்வும்
4. காதலும் கிராமமும்
5. காதலும் நினைவும்
6. காதலும் புரிதலின்மையும்
7. காதலும் தோல்வியும்

**காதலும் கற்பனையும் :**

உலகில் கற்பனையில் வாழாதவர்கள் எவருமில்லை. உண்மை வாழ்க்கையில் பெறமுடியாத தேவைகளை, ஆசைகளை, எதிர்பார்ப்புகளை, கனவுகளை, நினைவுகளைக் கற்பனையில் கண்டு மக்கள் மன நிறைவு கொள்வர். உணர்வில் செறிந்த உயர்நிலை கற்பனை. இல்லாததை இருப்பதாகக் கற்பனை செய்வர் பலர். கற்பனை என்பது இல்லாத ஒன்றைக் கூறுதலாகும். நிகழாத ஒன்றை நிகழ்ந்ததாகக் கூறுவதும் கற்பனையே.

காதலில் எப்போதும் பெண்ணே போற்றுதலக்கம் மேன்மைப் பாராட்டுதலுக்கும் உட்படுகிறாள். தன் காதலன் தன்னை புகழ்ந்து பாடுவதையே அனைத்து பெண்களும் விருப்பம் கொள்வர். அன்பின் மிகுதியாலும், காதலின் இன்பத்தாலும், இவ்வுலகைவிட தன் ஆருயிர் காதலியே தனக்கு உயர்வானவளாக காட்சியளிப்பத்தை காதல் புரியும ஆண்கள் ஏற்றுக்கொள்வதுண்டு.

கற்பனை எவருக்கும் உரித்தான ஒன்றேயாயினும், ஆனால், அக்கற்பனையானது எல்லோரிடத்திலும் ஒரே நிலையில் பயணிப்பதில்லை. காதலருக்கு காதலர் வித்தியாசப்படுகிறது. கவிஞனுக்கு கவிஞர் மாறுபட்டு நிற்கின்றனர். காதலியை நேரில் கண்டதைவிட, அவளை கனவு நிலைகளில் சித்தரித்து சிந்தித்துப் பார்க்கையில் அவ்வளவ அழகாக காட்சிபடுகிறார். காதலியின் வருகைக்காக ரயில் நிலையங்களில் காத்திருக்கும் சமயத்தில் அவன் எவ்விதமான உடைகளில், எவ்வித அழகில் எவ்விதமாய் வருவாள் என தன் மனதுக்குள் சித்திரக்கோட்டையை கட்டிக்கொண்டு அக்கோட்டைக்குள் அழகுநிலவாக தன் காதலியை கற்பனை செய்து மகிழ்வான். இறுதியில் அவளை நேரில் சந்திக்கையில் அவன் கற்பனையில் இவள் சற்று தொய்ந்திருப்பாள். இருப்பினும் அழிகில்லாத காதலியையும் காதல் மாளிகையில் வைத்து ரசிக்கும் இளம் காதலர்களின் நிலையை,

**“இந்த மூன்றாவது மின் ரயிலில் நீ**
**கையசைத்துக் கொண்டு இறங்குகிறாய்**
**இதற்கு முந்திய அதற்கும் முந்திய**
**இரண்டு ரயில்களில் இருந்து**
**இறங்கி வருவது போன்ற**
**என்னுடைய காத்திருப்பின் சித்திரங்களில்**
**இதைவிட அழகாக இருந்தாய் நீ”**

(கல்யாண்ஜி. நனை எழுதிய அறை, ப.18)

என்று காதலர்களின் கற்பனையை இக்கவி வரிகள் வாயிலாக அறியச் செய்கிறார்.

காதலன் காதலியின் கண்களுக்குள் கள்ளிச் செடிகளாய் இருப்பதையும், அதனை அவள் இடித்துக்காட்ட தயாராக இருப்பதையும் கவிஞர் குட்டி ரேவதி,

**“உறங்கிவிட்டது**

**கண்களுக்குள் கள்ளிச் செடிகளை வளர்க்கும்**

**தோட்டக்காரனாய் அவள் இருந்ததை**

**நான் இடித்துக்காட்டலாம்”**

(குட்டி ரேவதி, யானுமிட்ட தீ. ப.39)

தன் கண்களில் நீா் வறண்டு போய், பாலை நிலமாக உருமாறி அந்நிலத்தில் கள்ளிச்செடிகள் வளரும் அளவிற்கு காதலியை காக்க வைத்த காதலனை கற்பனைபடுத்தும் விதம் கவித்துவம் செறிந்ததாய் உள்ளது.

காதலனிடத்தில் இருந்து புறப்படும் சொற்களில் கவித்துவம் நிறைந்துள்ளதாக காதலி கூறுவாள். உண்மை யென்னவெனில் காதலி கொடுத்த முத்தத்தினால் தான் கவித்துவம் பிறந்தது என்று காதலன் பொய்யை மெய்யாக மாற்றிக்காட்டி தன் கற்பனையை மேலும் அதிகரித்துக்காட்டுவதை,

**“உனக்களித்த சொற்களில்**

**கவித்துவம் அதிகரித்துவிடடது என்கிறாய்**

**மீண்டும் உன் முத்தம்தான் காரணம் என்கிறேன் நான்”**

(தேவேந்திர பூபதி, அந்தரமீன், ப.18)

எனடறு பெண்ணின் (காதலியின்) முத்தங்கள் கவியின் சொற்களாக பிறப்பெடுப்பதாய் கற்பனைப் படுத்துகிறாா்.

**காதலும் தோல்வியும் :**

காதல் புரிந்த எல்லோரும் காதலா்களை கைபிடித்துவிட முடியாது. சில காதலா்கள் கல்லறையிலும், சில காதலா்கள் பள்ளியறையிலும் மற்றும சில காதலா்கள் மற்றொரு கணவன்களோடுமாக இறந்தும், பிணைந்தும், பிரிந்தும் வாழ்கிறாா்கள். காதலில் வெற்றி மட்டுமல்ல தோல்வியும் கலந்துள்ளது. திருமணம் பல பெண்களுக்கு நினைத்தபடி அமைவது கிடையாது. இருப்பினும் பெண் தன் காதலனோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாள். காதலில் தோல்வியடைந்து பல காதலா்கள் தங்கள் குழந்தைகளுக்கு தன் காதலன் ∴ காதலியின் பெயா்களையே சூட்டியுள்ளனா். தன் மகளின் பெயரை அழைக்கும் போதெல்லாம் அவா்களுக்கு ஞாபகம் வருவது  தன காதலி∴ காதலனின் நினைவுகள்தான். முதல் காதலையும் காதலன் ∴ காதலியையும் எவரும் மறந்திட இயலாது. இதனை சக்திஜோதி,

**“என்னை விரும்பியபடி**

**இன்னொரு பெண்ணோடு வாழ்ந்து கொண்டிருக்கும்**

**உன்னிடம்**

**என்னை நினைவூட்டுவது**

**உன் மகளின் பெயா்”**

(சக்திஜோதி, எனக்கான ஆகாயம், ப.100)

என்கிறாா்.

**முடிவுரை :**

காதல் தோன்றியவளா்வதற்கு இலக்கியம் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. காதல் என்பது அவரவா் மனநிலைக்கு ஏற்ப வருகின்ற ஒன்றாகிறது. இக்காதல் எவரிடத்தும் பேதங்கள் பாா்த்து தொடங்குவது கிடையாது. காதல் இச்சமூகத்தை உயிா்ப்புடன் இயங்கச் செய்கிறது. சமூக வரலாற்றினைப் புரட்டிப்போடவும், வன்முறையாளா்களை அமைதிப்படுத்தவும், எளிய மனங்களை மனப்பிழறவிற்குள்ளாக்கவும், பேரரசை வீழ்த்திடும் சக்தி கொண்டது. காதலில் இடறி வீழ்வதும் எழுந்து நிற்பதும் அக்காதலா்களின் காதல் வலிமையில் தான் உள்ளது. காதல் இன்றைய நவீனக் காலகட்டத்தில் அதிகார மையப் புள்ளியாக மாறிவிட்டது. காதல் இல்லாத இல்லறம் நல்லறமாக விளங்கிட முடியாது. ஒருவா்க்கு இலட்சமுறை காதல் புரிந்தாலும் கிராமத்து காதலும், துவக்கப் பள்ளியில் பூத்த நிகழ்வுகளும் இன்றைய நகர மாநகர காதலைவிட மிக உயா்ந்ததாகிறது. காதலின் வலிமையைச் சொல்ல பல காதலா்கள் குருதி படையல் இடுகின்றனா். தங்கள் இறப்பையே காதலின் சின்னங்களாக மாற்றிக்காட்டுகின்றனா். உண்மையில் உறுதியான காதல் என்பது பிரிந்தும், இறந்தும் மட்டுமே வாழ்கிறது.

# முல்லை நில வேளாண்மை

***லோ.ரூபா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 2.

**முன்னுரை**

உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் வாழும் இடம் நிலம் ஆகும். அது மனிதர்களுக்குப் பலவகையில் பயன்படுகின்றது. பெரும்பான்மையான நிலங்கள் உழவர்களுக்கு விளைநிலமாகப் பயன்பட்டு அவர்களுக்கு வாழ்வளிக்கின்றது. வேளாண்மைத் தொழிலை மேற்கொண்ட அக்கால மக்கள் நிலத்தை, உழவுக்கு ஏற்றது என்றும் ஏலாதது என்றும் இருவகையாகப் பிரித்தனர். பின்பு விளையும் பயிரை அடிப்படையாகக் கொண்டு நெல் விளையும் 'மண்' என்றும் 'எள் விளையும் மண்' என்றும் பிரித்தனர். இப்பிரிவினை அடிப்படையாகக் கொண்டு முல்லை நிலத்தில் நடைபெற்ற வேளாண்மையைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**முல்லை நிலம்**

ஐவகை நிலங்களுள் காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. இந்நிலத்தில் முல்லை மலர் சிறந்திருந்தமையால் முல்லை எனப் பெயர் பெற்றது. 'முல்லை ஒழுக்கத்திற்கு' ஏற்ற இடமாக முல்லை நிலம் விளங்குகிறது. இந்நிலம் அழகு பெறத் துணை நிற்கும் கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லைக்கு உரியது.

**"கருவி வானம் கார்சிறந்தது ஆர்ப்ப**

**பருவம் செய்தன பைங்கொடி முல்லை" ஐங்: (476:1-2)**

இப்பாடல் முல்லைப் பூ மலர்ந்து மணம் வீசிய நிலையை விளக்குகிறது.

**"புள்ளும் மாவும் புணர்ந்து இனிது உகளக்**

**கோட்டவும் கொடியும் பூப்பல பழுனி**

**மல்லல் ஆகிய மணம் கமழ் புறவே" ஐங்: (414:1-4)**

இங்கு 'புறவு' என்ற சொல் முல்லை நிலத்தைக் குறிக்கும் 'காடு' என்ற பொருளில் அமைகின்றது. காட்டுப்பகுதியில் பறவைகளும் விலங்குகளும் இணைந்து விளையாடும், மரங்களிலும், செடிகளிலும் பலவகையான பூக்கள் மிகுதியாக மலர்ந்து மணம் வீசும் இன்பம் தரும் முல்லைக் காட்டைக் காண்போம் வா! என்று தலைவன் தலைவியிடம் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. ஆகவே முல்லை ஒழுக்கத்திற்கு சிறந்த இடமாக முல்லை நிலம் விளங்கியமை அறியப்படுகின்றது. **"காரும் மாலையும் முல்லை" தொல். (அகத்:பா.6)**

கார்காலமும் இனிய மாலைப் பொழுதும் முல்லை எனப்பட்டது. கார்காலத்தை மக்கள் விரும்பி ஏற்றனர். அதற்குக் காரணம் கார்காலத்தில் பெய்யும் மழையால் முல்லைநில மக்கள் பெரும் நன்மைகளே ஆகும். மழைபெய்யும் கார்காலத்தில் வேனிலின் வெப்பம் தணிந்து, பூமியில் குளிர்ந்த நிலை ஏற்படுவதினால் இந்நில வாழ் உயிரினங்களும், பயிரினங்களும் மகிழ்ச்சியில் திளைப்பதைத் தொல்காப்பிய ஐந்திணை என்ற நூல் உணர்த்துகிறது.

**"செம்மண் நிலத்தின் பெருமை மரம்செடி**

**தம்முள் பயன்கொண்டு.....**

**சோலை இதமளிக்கும் சூழ்ந்து" புரட்சிதாசன்: (பா.206)**

இவ்வாறாக விளங்கிய முல்லை நிலத்தில் நீர்வளமும் நிலவளமும் மிகுந்து காணப்பட்டது.

**நிலப்பாகுபாடும் - நீர்வளமும்**

நம் தமிழ்மக்கள், பாசன ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு நிலங்களை வகுத்து அமைத்துள்ளனர். ஆற்றுநீரால் நெல் விளையும் பூமி 'நன்செய் நிலம்' எனப்பட்டது. கிணற்றுப் பாசனப் பகுதி நிலங்கள் 'புன்செய் நிலம்' அல்லது 'மானவாரி நிலங்கள்' என்று அழைக்கப்பட்டன. விளையாத நிலங்கள் 'பாலை நிலங்கள்' எனவும் 'களர், உவர் நிலங்கள்' என்றும் பழந்தமிழர்களால் பெயரிட்டு அழைக்கப்பட்டது. நாமும் இன்று இப்பெயர்களாலே நிலங்களைக் குறிப்பிடுகின்றோம். இதனை உணர்த்தும் வகையில்

**'மென்புல முல்லை மலரும் மாலை' ஐங்: (489:2)**

**'வறந்த ஞாலம் தெளிர்ப்ப வீசிக்' ஐங் (452:1)**

**'களரிப் புளியின் காய்பசி பெயர்ப்ப நற் (374:3)**

**கொல்லைப் புனந்த முல்லை மென்கொடி'**

இவற்றில் உள்ள 'மென்புலம்' என்பது நன்செய் நிலமென்றும் 'வறந்த ஞாலம்' என்பது வறண்ட நிலத்தையும், 'களரி' என்பது களர் நிலத்தையும் 'கொல்லைப் புணத்த' என்ற சொல் புன்செய் நிலத்தையும் குறிக்க எழுந்த பாடல்களாக சங்க இலக்கியங்களால் உணர்த்தப்படுகின்றன. எனவே முல்லை நிலத்தில் இத்தனை வகையான நிலங்களும், காலநிலைகளும் காணப்பட்டன என்பது அறியப்படுகிறது.

**இக்கால நிலப்பாகுபாடு**

இக்காலத்தில் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் மண்ணை **அதன் நிறத்தையும், பண்பையும் அடிப்படையாகக் கொண்டு, செம்மண், கரிசல்மண், வண்டல்மண், செம்புறைமண், களர், உவர்மண்** எனப் பிரித்து வேறுபடுத்தி உள்ளனர்.

**முல்லை நிலத்து செம்புரை மண்**

இக்காலப் பாகுபாட்டின்படி சிவப்பு நிற மண்ணைக் கொண்ட இந்நிலத்தில் புன்செய் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. நீரை விரைவில் ஈர்த்துக் கொள்ளும் தன்மையுடைய இந்நிலத்தை அக்கால முல்லை நிலத்துடன் ஒப்பிடலாம். முல்லை நிலத்தில் புன்செய் பயிர்களும் நன்செய் பயிர்களும் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

**"புன்புல நாடன் மடமகள்" ஐங் (424:3)**

**"செந்நில மருங்கில் பல்மலர் தாஅய்" ஐங் (495:1)**

**"வரகு இணர் சிறப்ப" குறு: (220:1)**

இப்பாடல்களில், வரகுப் பயிர் கொத்துக் கொத்தாக விளைந்து சிறக்கட்டும் என்றும், மழைக்குத் தழைத்து வளர்ந்துள்ள புதுவரகினை இரலைமான் மேய்ந்தது என்று சங்கப்பாடல்களின் நிலப் பயிர்களின் விளைவிடமாகத் திகழ்ந்ததை அறிய முடிகிறது.

**முல்லை நில புன்செய் வேளாண்மை**

முல்லை நிலம் இன்றைய புன்செய் நிலங்களை குறிப்பதாக உள்ளது. காரணம் என்னவென்றால் குறிஞ்சி நிலத்தைவிட இந்நிலத்தில் நீர்வளம் சற்று குறைந்து காணப்படுகிறது. இதனால் இந்நிலத்தில் புன்செய் பயிர்களாகிய வரகு, சாமை, எள் முதலிய பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

**"நீர்ச்சால் மணற்புன்செய் நெற்குவியல்செம்பொன்னாம்**

**ஏர்க்கால் அழுத்தமழை ஈட்டிவடும் - ஊர்க்கொல்லை" (புரட்சிதாசன்:211)**

புன்செய் நிலத்தில் விளைந்த தெற்குவியல் செம்பொன் நிறத்தில் மின்னுவதாக தொல்காப்பியம் ஐந்திணைப் பாடல் உணர்த்துகிறது.

**"புன்செய் பயிரின் பொதிமுதிரும் முன்பணியில்**

**கண்கொள்ளாச் சாமைக் கதிர்வகையை" (புரட்சி:216)**

வானம் பார்த்த நிலத்தில் நெல், வரகு போன்ற பயிர்கள் முற்றிக் காணப்பட்டதாகவும் மயில்கள் அவற்றை உண்டதும் கூறப்படுகிறது.

**கார்கால உழவு**

முல்லை நிலத்தில் கார்காலம் வந்துவிட்டதால் மழை இடைவிடாது பெய்யும், ஆறு, குளம், ஏரி போன்றவைகளில் கார்வாய் அமைத்து வேளாண்மையை மேற்கொள்ள மக்கள் ஏர்களைக் கொண்டு வேளாண்மை செய்தனர் என்பதைத்,

**"கார்கலந் தன்றால் புறவே பலவுடன்**

**ஏர்பரந் தனவால் புனவே ஏர்கலந்து" ஐங்: (417:1:2)**

இதை உணர்த்தும் விதமாக ஐங்குறுநூறு பாடல் அமைகிறது.

**"ஏரினும் நன்றாம் எருஇடுதல் இட்டபின்**

**நீரினும் நின்று அதன்காப்பு" (குறள்:1038)**

நிலத்தை ஆழமாக உழுவதை விட, நல்ல எரு போட வேண்டும். அதன் பிறகு களை எடுத்து, நீர் பாய்ச்சுவதை விடப் பயிருக்கு அழிவோ, நோய்யோ வந்துவிடாதபடி பாதுகாக்க வேண்டும். இதுவே வேளாண்மை செய்வதற்கு மனிதனுக்குத் தேவையான முக்கியமான அடிப்படை அறிவாகும். **'நன்செய்க்கு ஏழுழவு புன்செய்க்கு நான்குழவு'** என்பது வேளாண் பழமொழிகள் உணர்த்தும் கருத்தாகும்.

**கோடை உழவு**

கோடை உழவு செய்யப்பட்ட நிலங்களில் மழைநீர் வேகமாக உறிஞ்சப்படுகிறது. மேலும் மண்ணின் அடிப்பகுதியில் உள்ள பயிர் சத்துக்கள் மேலே கொண்டு விடப்பட்டு அடுத்து சாகுபடியாகும் பயிருக்குத் தேவையான சத்துக்கள் பெற மேல் மட்டத்தில் இருப்பு வைக்கப்படுகிறது. கோடையில் பலமுறை உழவு செய்வதால், கோடையில் கிடைக்கும் மழைநீரின் பெரும்பகுதி மண்ணின் அடிப்பகுதியை அடைந்து, ஓரளவு நீர் சேமித்து வைக்கப்படுகிறது. இதனை,

**"செம்பூலத்து நீர்க்குளம் செம்மாந் திருக்குமாம்**

**வெம்பொழுதில் ஏருழுது வீடுவந்து – பின்பொழுதில்" (புரட்சி:215)**

கோடை வேளாண்மையில் ஈடுபட்டிருந்த முல்லை நில மக்கள் நாள் முழுவதும் உழைத்ததால் ஏற்பட்ட் களைப்பை, செம்புலத்து நீர்க் குட்டைகளில் எருதுகளையும், தங்களையும், நனைத்து வெப்பத்தை தணித்துக் கொண்டனர்.

**விதை விதைத்தலும் அறுவடையும்**

**ஆடிப்பட்டம் தேடி விதை ஆடி வாழை தேடி நடு** என்பது பழமொழி. நம்முன்னோர்கள் எதை செய்தாலும் அதை அறிவியல் நுட்பத்துடன் தான் செய்துள்ளனர். பருவம் கண்டு விதை விதைத்தால் நல்ல பலனைப் பெற முடியும் என்பதில் நம்பிக்கையும் நல்ல அனுபவ அறிவினையும் பெற்று விளங்கினர் என்பதை,

**"விதையார் கொன்ற முதையல் பூமி**

**இடுமுறை நிரம்பிய ஈர்இலை வரகின்"**

**கவைக்கதிர் நிரப்பிய ஈர்இலை வரகின் நற் (பா:121)**

அதாவது விதையினை விதைக்கும் முன்னர், முல்லை நில மக்கள் நிலத்தைப் பலமுறை உழுதனர். இதனால் நிலம் புழுதியாகக் காட்சியளித்தது. அந்த நிலத்தில் வரகினை விதைத்துள்ளனர்.

**முடிவுரை**

ஆதிகால மக்கள் நாகரிக நிலைக்கு மாறிய இடமாக முல்லை நிலம் அமைந்தது. வேட்டையாடி உணவுண்டு மலைகளில் திரிந்த மக்கள் பின்னர் உணவுப் பொருட்களின் தேவை கருதி மலைகளை அடுத்த காடுகளில் சென்று வாழத்தலைப்பட்டனர். அங்கு ஆடு, மாடு, எருமை போன்ற விலங்குகளைப் பழக்கி அவற்றைப் பேணிக்காத்து, அவற்றின் துணைக் கொண்டு வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர் என்பதும் இதனால் முல்லை நிலத்திலும் வேளாண்மை சிறப்புற்றிருந்தது என்பது இக்கட்டுரை வழியாக அறியப்படுகின்றது.

**பார்வை நூல்கள்**


1. அன்பழகன்.வீ, இஞ்ஞாசிமுத்து.ச ,இயற்கை வேளாண்மை, 23, கண்ணதாசன் பதிப்பகம், தியாகராய நகர்,, சென்னை – 17.
2. அரங்கராசன். இரா, சங்க இலக்கியத்தில் ஆயர் வாழ்வியல், மகாகவி பாரதியார் நூலகம், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641046
3. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், 6/16 தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவெல்லிக்கேணி, சென்னை – 5
4. சசிவல்லி.வி.சி, முல்லை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி.வளாகம் தரமணி, சென்னை – 600113
5. சுப்பிரமணியன்.ச.வே, சங்க இலக்கியம் எட்டுத்தொகையும் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 108.
6. புருசோத்தமன்.நி, மண்ணின் மறுபக்கம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி. சிட்கோ இஸ்டஸ்டிரியல் எஸ்டேட்.
7. புரட்சிதாசன், தொல்காப்பியம் பெருந்திணை, பாண்டியர் பாசறை, 17-வடக்கு போக்சாலை, தி.நகர், சென்னை – 17.
8. வரதராசனார்.மு, (உ.ஆ), திருக்குறள் மூலமும் உரையும், பாரிநிலையம், சென்னை.
9. தில்லைநாயகம்.வே, இந்திய வேளாண்மை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
10. சோமசுந்தரனார்.பொ.வே, ஐங்குறூறு, திருநெல்வேலி, தென்னிந்திய, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522, டி.டி.கே.சாலை, சென்னை -16.

# நாட்டுப்புறப்பாடல் : "கொங்கு நாட்டு ஊஞ்சவனப் பாடல்கள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்"

***முனைவர் ர.தமிழ்ச்செல்வி,** மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

**முன்னுரை:**

கொங்கு நாடே ஆய்வுச் சுரங்கம். இயற்கை வளத்துடன் வணிக வளத்திலும் இம்மண் உயிர்தோங்கிய சிறப்பினை கொடுமணல் அகழ்வாராய்ச்சிகள் உணர்த்தும். இத்தகைய கொங்கு நாட்டில் வடகரை நாட்டில் மறைந்த மாநகர் மயிலாபுரிப்பட்டணம் ஆகும். அப்பட்டணத்தை அடுத்த ஊஞ்சவனத்தில் கோயில் கொண்ட தெய்வங்களின் மீது பூசாரி பாடுவதாக அமைந்தது ஊஞ்சவனப்பாடல்கள் ஆகும். ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பு ஏட்டில் எழுதப்பட்ட இப்பாடல்களில் விரவி வரும் வாழ்வியல் விழுமியங்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் கருத்தாம்.

**கொங்கு வடகரை நாட்டு மயிலாபுரிப் பட்டணத்து ஊஞ்சவனம்:**

பழம் புகழ் மிக்க கொங்கு நாட்டில் வடகரை நாட்டில் (பவாணி ஆற்றின் வடகரை) மறைந்த மயிலாபுரிப் பட்டணத்தை அடுத்த ஊஞ்சவனத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நடுகற் கோயில் மற்றும் பல தெய்வங்களுக்கான கோயில்களும் உள்ளன. அந்த ஊஞ்சவனப்பாடலில்,

**"மயிலா புரியழகும் கந்தையா**
**மாமதிலும் கோபுரமும்**
**கயிலாய வாசல் போல் விளங்கும் கந்தையா"**

**– ஊஞ்சவனப்பாடல் தொகுப்பு**

என்று மயிலாபுரிப் பட்டணத்தை வருணிக்கக் காணலாம்.

**"மதிதொட்டோங்கு மாடவீதி**
**பதினெட்டுப் பட்டணமும்**
**முப்பத்திரண்டு வேளாளர் புரமும்**
**அறுவத்தி நான்கு கடிகைத் தாவளமும்"**

**(கொங்கு - இதழ் பிப்ரவரி 2007 ப.11)**

எனவரும் கல்வெட்டுத் தொடர்களால் மதியைத் தொடும் அளவுக்கு உயர்ந்தோங்கிய மாடங்களைக் கொண்ட வீதிகளுடன் கூடிய பதினெட்டுப் பட்டணங்கள் கொங்கில் இருந்தன என அறியலாம். அவற்றுடன் வேளாளர்தம் அறப்புறம் கொண்ட 32 புரங்களும், வணிகரின் காவல் படையோடு சரக்கு வைத்துக் காக்கும் பண்டக சாலைகளான தாவளங்கள் 64 இருந்தமையும் அறியலாம். அத்தகைய பட்டணங்களுள் ஒன்றாக விளங்கிய பெருமை மயிலாபுரிப் பட்டணத்துக்கும் உண்டு. ஊஞ்சவனப் பாடல்கள் இல்லையென்றால் இப்பட்டணம் இருந்ததை அறிய இயலாது போயிருக்கும். ஏடுகளின் வழி அழிந்து பட இருந்த இந்நாட்டுப்புறப் பாடல்களை கள ஆய்வில் கண்டெடுத்த பெருமை கோபி கல்வெட்டியல் அறிஞர் சித்தாந்த நன்மணி. முனைவர். கா. அரங்கசாமி அவர்களை சாரும்.

வாணியாற்றின் வடகரைப் பகுதியில் அமைந்த வடகரை நாட்டு உலகவிடம் சங்க காலத்திலேயே புகழ்பெற்றிருந்த ஊராகும். அந்த ஊருக்குக் கிழக்கில் பருவாச்சிக்கும் பக்கத்தில்

மறைந்த மயிலாபுரி இருந்துள்ளது. அப்பட்டணத்தை ஒட்டி அமைந்துள்ள ஊஞ்சவனத்தில் உள்ள நடுகல் தெய்வங்கள் மீது பாடப்பட்ட பாடல்களே ஊஞ்சவனப் பாடல்களாகும். இரண்டு ஏடுத்தொகுப்பினில் மொத்தம் 89 பாடல்கள் கிடைத்துள்ளது. திருமலைநாயக்கர் காலத்தில் ஏட்டினில் எழுதப்பட்டது என்பதை ஆய்வின் வழியும், காலம் காலமாக பூசாரிகளால் வாய்மொழியால் பாடப்பட்டதையும் அறியலாம்.

**ஊஞ்சவனப் பாடல்கள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்:**

மனித வாழ்வியல் இலக்கணமாக ஒல்காப்புகழ் தொல்காப்பியர்,

**“காமம் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமம் சான்ற மக்களோடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்தன் பயனே” (தொல் 1138)**

என்பதை காட்டுவார் ஆக மனித வாழ்வின் நோக்கம் காமவாழ்வின் பின்னர் மக்களைப் பெற்று மனையறங்காத்து துறவு மனங்கொண்டு தூய்மைபெற்று மங்காப் புகழ் கொண்டு தெய்வநிலை பெறுதல் ஆகும். இதையே வான்புகழ் வள்ளுவர்,

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்” என்பார்**

**(குறள் - 50)**

இத்தகைய வாழ்வியல் விழுமியங்கள் ஊஞ்சவனப்பாடல்களில் பல விரவி உள்ளன.

**மனிதத்தன்மை போற்றுதல்:**

ஊஞ்சவனப் பாடல்களில் முருகனான கந்தையாவினை சுற்றி அனைத்து இன, சாதி, சமய மக்களும் வேறுபாடின்று பக்திநலத்துடன் சூழ்ந்துள்ள காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

**“பச்சைமலை ஆரியர் புரோகிதர் புராணிகர்**

**பழனிமலை வேலாயுதர் பரிவுபெறு அப்பிச்சிமார்**

**நல்ல ராக்கணர் பார்தொழ வரும் குமார நகர்க்**

**குச்சிலியர் உத்தண்ட வீரர் பாண்டியராசர்**

**கூரரிய வீரநகர் குருசாமி யானவர் சத்திரியர்..........”**

**– ஊஞ்சவனப்பாடல் தொகுப்பு**

என பலரும் இறைவனிடத்தில் வேண்டுவர். பட்டாணி ராவுத்தர், பச்சைமலை ஆரியர், மராட்டியர், கோட்டை குறிக்காரர், கொத்தளத்து நாயக்கர், ஏழைமக்கள் எல்லோரும் கந்தையனை வணங்கி நிற்பர் என்பதை பாடலின் வழி அறியலாம்.

உண்மையான பக்தி தரும் நற்பண்பு மனிதனை உயர்ந்த மனிதனாக்கிச் சகமனிதனைத் தோழனாக உடன்பிறப்பாக நினைக்கும் தகுதி வளர்ப்பதாகும். அத்தகைய தன்மை அக்காலத்தே இருந்துள்ளது இப்பாடலின் வழி அறியலாம்.

**சமரச பக்தி நிலை:**

தென்னகத்துத் தோன்றிய சைவசமயத்துள்ளேயே அகச்சமயம் ஆறு, புறச்சமயம் ஆறு என்றும், அகப்புறச்சமயம் ஆறு, புறப்புறச்சமயம் ஆறு என்னும் 24 சமய விகற்பங்கள் தோன்றின (சிவஞான போதம் - திருநெறிவுரை – பக் 35). அத்துடன் இந்தியப் பெருநாட்டில் தோன்றிய வேதவைதிகம், அதன் உட்பிரிவுகள், சமணம் புத்தம் அவற்றின் உட்பிரிவுகள், சீக்கியம் போன்ற பல்வேறு சமயங்களுடன் அயல்மண்ணில் இருந்து வந்த கிறித்துவம், இசுலாம் போன்றவையும் இங்கே ஆதிக்கம் பெற்றன. அதனால் விளைந்த சமயப் பூசல்கள் ஏராளம். மெய்யறிவாளர்கள் இதற்கு மாமருந்தாகச் சமரச சமயப்பக்தியை ஊட்டினர். அருட்பிரகாசர் போன்றோர் சமரச சன்மார்க்கம் கண்டனர். தமிழர் சமயமாகிய சிவசமயம் கூடத்

**“தென்னாடுடைய சிவனே போற்றி**

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி”** என்று சமரசப் பார்வையில் கூறிடக் காணலாம். இத்தகைய சமரச பக்திநிலை ஊஞ்சவனப் பாடல்களில் உயிரோட்டமாக உள்ளதைக் கீழ்வரும் காட்டுக்களின் வழிக்காணலாம்.

அய்யன்மார் வழிபாடாகிய முன்னோர் வழிபாடு, பராசக்தி, பொன்னழகி, காளி போன்ற தாய்த்தெய்வ வழிபாடு,பொன்மலை ஆண்டவர், கருமலை ஆண்டவர் போன்ற தெய்வவழிபாடு, வல்லகுரு தன்னாசி, மூலிகை வல்லசித்தர் முதலானோர் வழிபாடு, பாதிமதிசூடிய பரமர், மும்மூர்த்திகள் போன்ற கடவுள் வழிபாடு, பிள்ளையார், முருகன், மாயவர், வாணிதிருமகள் வழிபாடு, ஐந்து சடையப்பன், மாமுனி, வல்லகுரு போன்றோர் வழிபாடு, கன்னிமார், கரியகாளி, காளிமாதேவி, பார்ப்பதி, பண்ணாரி வழிபாடு மற்றும் நூற்றுக்கணக்கான பந்திபடைத்தளங்கள் பேருருவங்கள் கொண்ட பலிபெறும் தெய்வவழிபாடு என எண்ணிறந்த தெய்வக்காட்சி கொண்ட வழிபாட்டு முறைகளை இன்றும் இந்த மக்களிடையே வழக்கில் உள்ளதைக் காணலாம். சாதிசமய ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தின் அனைத்து மக்களின் கூட்டு வழிபாடாக இங்கு நடக்கும் வழிபாடு இலங்கக்காணும் போது பாமரமக்களிடத்துக் காணப்படும் சமரச பக்தியின் மேம்பாட்டினைக் காண முடிகின்றது.

**தமிழை மறவாத தகைமிக்க பக்திநிலை:**

பாமர மக்களுக்கு அயல்மொழி வழிபாடும் ஆரியபுரோகித வைதிக வழிபாடும் உடன்பாடில்லை. தமக்குத் தெரிந்த வழக்குத் தமிழில் உரையாடி வழிபாடு செய்வதில் பேரீடுபாடு கொண்டவர்கள். இதனை

**“வெள்ளை குடைபிடித்து விருதுபல வீசிவர**
**தெள்ளுதமிழ் படிக்கத் தென்பழனி வாராரு**
**சித்தர் கணநாதர் தேவர் துதித்துவர**
**முத்தி கொடுத்த முத்தமிழும் போற்றி சொல்ல**
**திக்கு விசயம் செய்து திக்கெல்லாம் புகழ் பேச**
**பக்திநலம் மிக்க பாமரரும் போற்றி வர**
**ஏழையரைக் காக்கும் எங்கள் துரை கந்தையா”**

**– ஊஞ்சவனப்பாடல் தொகுப்பு**

என்று பாடும் அடிகளால் நாட்டின் நிலை அறியவரும்.

அயல்மொழி ஆதிக்கத்தால் தமிழ்போற்றும் போக்குக் குறைந்த போதெல்லாம் அருட்சான்றோர் தோன்றித் தெய்வத் தமிழினை சீர்செய்த பாங்கினைக் காணலாம். தமிழ் விரகராகிய தமிழ்ஞான சம்பந்தன் நாளும் இன்னிசையால் தமிழ் போற்றியவர். முருகப்பெருமானின் திருவருள் பெற்ற குமரகுருபரர், “பைந்தமிழ் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலை”க் (மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், குமரகுருபரர்) கொண்டு தமிழின் பெருமையைக் காட்டுவார். இத்தகைய மரபினில் வந்த பாமர மக்களின் தெய்வப் புலமையாளர்களாகிய பூசாரிமார்கள் “தெள்ளுதமிழ் படிக்கத் தென்பழனி” நோக்கி முருகப் பெருமான் கருமலையாண்டவராக வருகின்றார் என்று பாடும் உள்ளம் போற்றத்தக்கதாகும்.

**பக்தி வழிப்பட்ட ஒழுக்கநிலை:**

உண்மையான பக்தர்கள், அன்பும் அருளும் நிறைந்து, பக்தியும் பண்பும் பொருந்தி, தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் ஈக நெஞ்சத்தராகி, உலக உயிர்க்குலத்தின் ஆன்ம ஒளியாகத் திகழ்வர். இதனை,

**“பக்தி விசுவாசம் பயபக்தி நேசமுடன்”**
**“தொண்டு பணி ஏவல் நாளும் செய்திடவே”**
**“நாயேன் பணிந்திடவே நல்குமம்மா வேண்டும் வரம்”**

**"பாதம் பணிந்து பகவானைத் தெண்டனிட்டு"**

**"வருந்திவரும் மக்களுக்கு வரமருள வேண்டுமம்மா"**

**– ஊஞ்சவனப்பாடல் தொகுப்பு**

எனவரும் தொடர்கள் உணர்த்தும் பக்தியுடன் கூடிய பண்பாட்டுத் தளத்தில் எழுந்துநிற்கும் ஆன்மஒழுக்கம் வரும்போது பக்தியில் விசுவாசம், பயபக்தி, நேசம், திருத்தொண்டு, நற்பணி, நல்லோர்ஏவல் செய்தல், நாயென நன்றியுடன் பணிந்து பணிசெய்தல், வருந்திவரும் உலகவரின் துயரினைத் தாயென நின்று துடைத்தல் போன்ற சத்துவ குணங்கள் விளக்கம்பெறும் என்பதால் பக்திதரும் விழுப்பொருள் நமக்குப் புலப்படும்.

பிழை பொறுக்க வேண்டி பாமரன் பாடும் பாடல், ஒழுக்கத்தின் மேன்மைநிலை எனலாம்.

**"எழுத்தை அறியாத ஆண்டவா ஏழை நான் சொன்ன பிழை**

**படிக்க அறியாத ஆண்டுவா பாலன் சொன்ன பிழை**

**தப்புகள் இருந்தாலும் தயவு செய்ய வேணுமய்யா**

**குற்றங்கள் இருந்தாலும் ஆண்டவா பொறுத்திடவே வேணுமய்யா"**

**– ஊஞ்சவனப்பாடல் தொகுப்பு**

**முடிவுரை:**

பக்தி நலம் மேலும் மேம்பட மனிதன் தெய்வநிலை பெற்றுப் பிறர்க்கென வாழும் ஈக உள்ளம் கைவரப் பெறுகின்றான். அதன் விளைவாக அனைத்தும் ஆண்டவன் செயல் எனக்கருதும் தன்னலமற்ற தூயமனம் பெற்று மீமாந்த நிலைபெற்று, அதனையும் கடந்து தெய்வநிலையில் நிலைத்து வாழ்கின்றான், பிறரையும் வாழச் செய்கின்றான். அந்த மெய்யறிவு நிலைத்துநிற்கச் செம்பொருளாகிய சிவத்துடன் கலக்கும் நேரமே சமயம் ஆகும். அத்தகைய சமய அடித்தளம் கொண்ட விழுமியங்கள் ஊஞ்சவனப் பாடல்களில் நிறைந்து விளங்கக் காணலாம்.

# தமிழ் நாடக மரபும், வளர்நிலைகளும்

***க.கலைப்பொன்னி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2.

**முன்னுரை**

இயல், இசை, நாடகம் என்ற மூன்று நிலைப்பாங்குகளையும் ஒருங்கே பெற்ற மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது. மக்களிடையே கூத்து எனப்படும் நாடகமே முதலில் தோற்றம் பெற்றிருக்கலாம் என்று கருத முடிகிறது. நாடகம் மக்களின் கலை மற்றும் பண்பாட்டு வளத்தை எடுத்துரைக்கிறது. நாடக வழக்கு என்று தொல்காப்பியம் கூறுவதன் மூலம் நாடகத்தின் தொன்மையை அறிய முடிகிறது. தமிழ்க்காப்பியங்களில் முதலாவதாகத் தோன்றியதாகக் கருதப்பெறும் சிலப்பதிகாரத்தில் கூத்துக்கலையினைப் பற்றி மிகுதியான விளக்கங்களைப் பெற முடிகின்றது. இவ்வாறு கூத்தில் தொடங்கி இன்றைய தொலைக்காட்சி நாடகம் வரை வளர்ந்துள்ள தமிழ் நாடகத்தின் மரபும், வளர்நிலைகளும் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நாடகம் சொல் விளக்கம்**

நாடகம் என்பது Drama என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவமாகும். Drama என்ற ஆங்கிலச்சொல் Dramenon என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. Dramenon என்றால் நிகழ்த்தப்பட்டது அல்லது செய்யப்பட்டது என்று பொருள் கொள்ளப்படுகிறது. "நாடகம் என்பது ஒரு செய்து காட்டுகையாகும். முன்னர் நிகழ்ந்த ஒன்று அங்கே செய்து காட்டப்படுகிறது" [சி.மௌனகுரு, (2010), ப.18] என்னும் வரையறை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

நாடகக்கலை ஏனைய கலைகளை விட வித்தியாசமான ஒரு கலையாகும். இது ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, நடனம் என அனைத்துக் கலைகளும் சங்கமிக்கும் கலையாகும். "நாடகம் நடிகனின் கலை (Actors Act) என்று அழைக்கப்படுகிறது" [மேலது, ப.29] . நாடகத்தில் அனைத்துக் கலைகளும் சங்கமிப்பதால் அனைத்தையும் இரசிக்கும் முழுமையான கலையுணர்வு நாடகக் கலையைப் பார்ப்பதால் ஏற்படுகின்றது.

**கூத்து**

ஒரு கதையை ஒரு நாள் அல்லது பல நாட்கள் இரவு வேளைகளில் விடிய, விடிய ஊரின் பொதுஇடத்தில் பார்வையாளர்கள் மத்தியில் வேடமிட்டு, ஆடிப்பாடிப் பேசி நடித்து, நிகழ்த்துவது கூத்தாகும். கூத்தின் வளர்ச்சி நிலையே நாடகமாக உருவாகியுள்ளது.

"ஆட்டம் கூத்தின் அடிவாரமே" [கே ஏ, குணசேகரன், (2013), ப.3]என்னும் வரையறையின் அடிப்படையில் ஆராய்ந்தால் ஆட்டங்கள் செழுமைப்படுத்தப்பட்டதன் வளர்ச்சி நிலையில் கூத்து உருவானது என்பதை உணரமுடிகிறது. தொடக்ககால கூத்துகளில் 'கோமாளிக்கூத்து' என்று சொல்லுமளவுக்குக் கோமாளிகளே வேடிக்கை காட்டும் நோக்கத்தில் கூத்துகள் நிகழ்த்தியுள்ளனர். கூத்தின் கூறுகளாக ஆட்டம், பாட்டம், அபிநயம் ஆகியன விளங்குகின்றன என்பதை

"ஆட்டம் பாட்டம் அபிநயம் என்ன
மூவகை என்பர் கூத்தின் முறைமை" [மேலது, ப.9] என்னும் அடிகள் உறுதிப்படுத்துகின்றன. தெருக்கூத்தில் இசை, இசைக்கருவி, பாட்டு, ஆட்டம், நடிப்பு, பேச்சு, திரைச்சீலை, பாத்திரங்கள் (கோமாளி) உடை, ஒப்பனை, மேடை, குரல், ஒலி அமைப்பு, கதை அமைப்பு ஆகியவை சிறந்த கூறுகளாக உள்ளன.

தெருக்கூத்து 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் பரவலாக இடம்பெறலாயிற்று. ஆரியமயமாக்கல் காரணமாகத் தமிழகத்தின் சிறு தெய்வங்கள் பல, ஆரியத் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. தொண்டை மண்டலத்தின் காவல் தெய்வம் திரௌபதியாயிற்று. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த வில்லிபாரதம், பாரதக்கதை தமிழ்நாட்டில் பரவவும், திரௌபதி வணக்கம் மக்கள் மத்தியில் பரவலாக்கம் பெறவும், வழி அமைத்தது. இத்திரௌபதி வழிபாட்டில் இருந்து தெருக்கூத்து உருவானது என்பர்.

**தொல்காப்பியம் சுட்டும் நாடகமரபு**

சங்க இலக்கியங்களுக்கு, முன்னோடி இலக்கண நூலாகக் கருதத்தக்க அளவில் காலத்தால் முந்தையது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் தமிழின் மரபுக்கான சான்றாதாரமாகவும் விளங்குகிறது.

**"நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும்**

**பாடல் சான்ற புலனெறி வழக்கம்"** [இளம்பூரணர் (உரை), (2004), ப.70]

என்ற நூற்பா உலகியல் வழக்கு என்னும் இயல்பு வழக்குக்கு மாறான "நாடக வழக்கு" என்னும் 'போலச்செய்தல்' (Imitation) முறையைக் கூறிச் செல்கின்றது. அதாவது உலகியல் வழக்கு என்னும் நடைமுறைச் செயல்பாட்டுக்கு முற்றிலும் வேறுபட்ட தன்மையிலானது நாடகவழக்கு என்பதைப் புலப்படுத்துகின்றது.

தமிழா் இசையோடும், ஆடலோடும் நெருங்கிய தொடா்பு உடையவா்கள். சங்க காலத்தில் இசையோடு பாடக்கூடிய பாணா்களை, அரசா்கள் ஆதரித்துள்ளனா். பொருநா், கூத்தா் முதலானோரும், ஆடலில் வல்ல விறலியும், தொல்காப்பியம் காலத்திலேயே செல்வாக்கோடு இருந்ததை அறிய முடிகிறது.

**"கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம், பெறாஅர்க்கு அறிவுறிஇச்**

**சென்று பயன் எதிரச் சென்ன பக்கமும்"** [மேலது, ப.146]

என்ற நூற்பாவின் வழி கூத்தா், பாணா், பொருநா், விறலி ஆகியோா் வறுமையை எதிா்கொண்ட சூழலும், வளங்களைப் பெற்ற சூழலில், பிறரை ஆற்றுப்படுத்திய பெருந்தன்மையும் புலப்படுகின்றன.

**சங்க இலக்கியத்தில் நாடகக்கூறுகள்**

சங்க இலக்கியம் தமிழ் நாடகம் குறித்த பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. சங்க இலக்கியப் பாடல்கள் நாடகக் கூறுகளைக் கொண்டு விளங்குகின்றன. அவை கூத்து மற்றும் ஆடல் வடிவங்கள் குறித்தும், கலைஞா்கள் குறித்தும் எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கியங்களிலும் நாடகம் எனும் சொல் பயின்று வந்துள்ளது. பட்டினப்பாலையில் இடம் பெற்றுள்ள,

**"பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்**

**வெண் நிலவின் பயன் துய்த்தும்"** [ஞா.மாணிக்கவாசகன் (உரை), (2016), ப.359]

என்ற அடிகள், நாடகம் பாடலோடு இணைந்திருந்த நிலையை உணா்த்துகிறது.

இசையில் வல்லவா்களாகப் பாணா், பாடினி, விறலி, பொருநா், கோடியா், முதலானோா் விளங்கினா் என்பதனைத்,

**"துடியன் பாணன் பறையன் கடம்பனென்று**

**இந்நான் கல்லது குடியும் இல்லை"**

[அ.மா.பரிமணம், கு.வெ.பாலசுப்பிரமணியன் (பதி), (2004), ப.335]

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. ஆட்டம் மற்றும் கூத்து ஆகியன நடத்தப்பெற்ற இடம் அல்லது மேடையானது ஆடுகளம், பாடுகளம், என்ற பெயா்களில் அழைக்கப்படுகிறது. விழாக்காலங்களில் மக்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆடிப்பாடியதால், இயற்கையான திறந்தவெளிப் பரப்புகளே களமாக அமைந்தன. திறந்தவெளிப்பரப்பே களம் என்று அழைக்கப்பட்டிருந்தது.

**"புய்த்தெறிக் கரும்பின் விடுகழை தாமரைப்**

**பூம்போது சிதைய வீழ்ந்தென கூத்தர்**

**ஆடுகளம் எடுக்கும் அகநாட்டையே"** [மேலது, ப.28]

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளும்,

**"நாடக மகளிா் ஆடுகளத்து எடுத்த**

**வீசி வீங்கின்னியம் கடுப்ப"** [ஞா.மாணிக்கவாசகன் (உரை), மு.நூ.ப.126]

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடல் அடிகளும், ஆடுகளம் குறித்த செய்திகளைத் தருகின்றன. நாடக மகளிா் ஆடுகளத்து என்பது ஆடுகளத்தில் கூத்து நடைபெற்றதையே குறிப்பிடுவதாக உள்ளது. மேலும் அரங்கினைக் களம் என்ற சொல்லால் குறிப்பிடும் நிலையில் அது ஒரு பரந்தவெளி என்பதும் புலனாகிறது.

**சிலப்பதிகாரத்தில் நாடகக் கூறுகள்**

சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம் என்றும் அழைக்கப்படுகின்றது தமிழ் நாடக வளர்ச்சி நிலையில் சிலப்பதிகாரம் விளங்குகிறது. சிலப்பதிகாரம், தமிழ் நாடகக்கலையின் மேன்மையையும், வளத்தையும் வெளிப்படுத்துவதோடு நடனம், நாடக அரங்கு குறித்த செய்திகளையும் தருகிறது. "நாடகமேத்தும், நாடக கணிகையொடு" என்று குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் பல்வகைக் கூத்துக்கள் மற்றும் ஆடல் வகைகள் குறித்து விளக்குவதோடு, கூத்தர், கூத்தியர் என்று கூத்தாடுபவர்களைக் குறிப்பதையும் அறிய முடிகிறது. வேத்தியல், பொதுவியல் என்ற இருவகை கூத்தில், வேத்தியல் கூத்து என்பது அரசருக்கு முன்பு ஆடுவது என்றும், பொதுவியல் என்பது பொதுமக்கள் முன்பு ஆடக்கூடியது என்றும் அறியப்படுகிறது. இக்கூத்துக்களை

**"முடிஅரசு ஒடுங்கும் கடிமனை வாழ்க்கை**
**வேத்தியல் பொதுவியல் என இருதிறத்து**
**மாத்திரை அறிந்து மயங்கா மரபின்**
**ஆடலும், வரியும், பாணியும் தூக்கும்"** [ஞா.மாணிக்கவாசகன் (உரை), (2014), ப.251]

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இந்திரவிழாவில், மாதவி ஆடிய பதினொரு ஆடல் நிகழ்வுகள் குறித்தும் இந்நூல் கூறுகிறது.

**"பல வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்**
**பதினோராடலும் பாட்டும் கொட்டும்"** [மேலது, ப.33]

என்னும் பாடல் அடிகளில் அல்லியம், கொடுகொட்டி, பாண்டரங்கம், துடிக்கூத்து, குடையாடல், குடக்கூத்து, பேடியாடல், மரக்கால் கூத்து, மல்லாடல், பாவையாடல், கடையம், போன்ற பதினோராடல் நிகழ்வுகளும் நாடகத்தின் வளர்ச்சி நிலைகளாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**பிற்கால நாடக வளர்ச்சி**

தமிழ் நாடகங்கள் அவற்றின் தன்மைக்கேற்ப, வகைப்படுத்தப்படுகின்றன. பள்ளுக்கூத்து, குறக்கூத்து, நொண்டிக்கூத்து போன்ற கூத்து வகைகள், நாட்டியம் சார்ந்த நாடகங்களாகப் பிற்காலத்தில் வளர்ந்து வந்தன. நாட்டிய நாடகங்களுக்கு இவை முன்னோடியாகவும் அமைந்துள்ளன. நடிப்பதற்கேற்ற நாடகங்கள் உருவாகக் காரணமானவர்களுள் ஒருவரான சங்கரதாஸ் சுவாமிகள் இயல், இசை, அறிவோடு நாடகம் எழுதி முறையாக நடிப்புக்கலை பயிற்சியும் கொடுத்து நாடகத்தை அரங்கேற்றினார். தெருக்கூத்து வடிவம், ஏனைய மேலை நாட்டு வடிவம் ஆகியவற்றின் துணை கொண்டு, தமிழகத்தில் நடிப்பதற்கேற்ற நாடகங்கள் வளரத் தொடங்கின. சங்க இலக்கியக் குறிப்புகளைக் கற்பனை செய்து தலைவன், தலைவி, பாங்கி, பாங்கன் என்று பாத்திரங்களை உருவாக்கிப் படிப்பதற்கேற்ற நாடகங்கள் வளர்ந்து வந்தன. கர்நாடக இசை பயின்றோர் கீர்த்தனை நாடகங்களில் நடித்து வந்துள்ளனர். செவிக்கு மட்டுமே விருந்தாக அமைந்த வானொலி நாடகங்களும் வளர்ந்து வந்துள்ளன. மேலை நாடகக் கோட்பாடுகளின் பின்னணியில் இன்று நவீன நாடகங்கள் வளர்ந்து வருகின்றன. நிகழ்த்துக்கலையாகவும், அச்சுநூல்களிலும் மட்டுமே இடம் பெற்றிருந்த நாடகமானது, தற்பொழுது மின்னணு ஊடகங்களில் குறிப்பாகத் தொலைக்காட்சியில் தொடர்களாக மாறி இருக்கிறது. திரைப்படங்களைக் கூட நாடகத்தின் ஒரு நீட்சியாகக் கருதலாம்.

**முடிவுரை**

தமிழர் தம் வாழ்வில் கூத்து என்பது இரண்டறக் கலந்த ஒரு கலையாகும். கூத்தின் வளர்நிலையாக அறியப்படுகின்ற, நாடகத்திற்கு உரிய இலக்கணத்தைத் தொல்காப்பியம் முன்வைக்கிறது. அதனை அடியொற்றிச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் அரங்கியல் கூறுகள் காணப்படுகின்றன. இத்தகைய மரபைக் கொண்டிருந்த தமிழ் அரங்கியல் இன்று வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் என்று, வடிவங்களில் மாற்றம் பெற்றுள்ளது. இவ்வாறு திறந்தவெளி அரங்கில் தொடங்கிய அரங்கியல் இன்று மின்னணுச் சாதனங்கள் வழியாக இல்லத்துள் நிகழ்த்தப்பெறும் கலையாக உருப்பெற்றுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2017.
2. குணசேகரன்.கே.ஏ, நாடக அரங்கம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2013.
3. பரிமணம் அ.ம, பாலசுப்பிரமணியம் கு.வெ. (பதி) புறநானூறு மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட், சென்னை, 2004
4. மாணிக்கவாசகன்.ஞா. (உரை), பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், உமா பதிப்பகம், சென்னை, 2016.
5. மாணிக்கவாசகன், ஞா. (உரை), சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை, 2014.
6. மௌனகுரு. சி, அரங்கவியல், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு, 2010.